ரூபா
250

# உள்ளம்

**Ullamm.com**

மார்கழி
2021



அமரர் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழக வெளியீடு

**கலை இலக்கிய சமூக காலாண்டிதழ்**

cyber UP TECHNOLOGY

***Web solutions***

***E-Commerce Solutions***




**Contact Us**

**Tel : 9782677155**

https://www.cyberuptech.com/

info@cyberuptech.com

***Digital Solutions***

***Mobile Solutions***

# உள்ளத்துள்...

ஓய்வு ,
மணியோசை
**தாட்சாயணி**

வானப்பெருவெளி வனப்பு,
மூச்சடங்கா நிலம்
**சடா**

பனம்பால்... பா!
**பனையடிப்பாடகன்**

வெயிலில் மினுங்கும் நீரலை
**புராந்தகன்**

ஊருக்கு போகிறோம்
**ஜெயதாஸ்**

நீலம் பாரித்த மனங்களின் திருப்தி
**ஏம்.எம். குர்ஷித்**

காலம் எனும் பெரு வலையின் இழைகள்
**சஞ்சயன்**

எது எமக்கு உகந்த வைத்தியம்
**ஸ்ரீ நவரட்ணராஜா செகராஜா**

போட்டிகள்

கவிதை

சொல்லிழை

கணைகள்

ஓர்
இலக்கியகாரன்
பற்றிய பதிவுகள்
**கந்தையா ஸ்ரீ கணேசன்**

மஹாகவி என்றோர் ஆளுமை
**சாரங்கன்**

எரிகிற வீட்டில்
**பரந்தாமன்**

வேட்டைக்காரன்
**என்.எம். சஜாத்**

உள்நின்று ஒளிரும் சக்தி
**தேவநாயகம் தேவானந்த்**

நவீன உலகில் கைத்தொலைபேசிகள்...
**ம.சுபேந்திரன்**

இலங்கையின் கல்விச் சாதனைகள்...
**சிவநேசன் வைத்தியநாதர்**

காசு... பணம்... துட்டு...
**ரகுராஜ்**

மடை திறந்து
**அலசி**

அதிர்வு
**யுவனி**

நினைவழியா உள்ளம்
**அகன்**

உறவும் உணர்வும்
**ஸ்ரீனிவாசன்**

விசும்பின்
துளிகள்
**பேராசிரியர் மா.சின்னத்தம்பி**
**செ.செல்வராசா (நாதன்)**
**கே.எஸ். சுதாகர்**
**அலெக்ஸ் பரந்தாமன்**
**கே.எஸ். கருணாகரன்**

ஐயந்தெளி
**க. ஆதவன்**
**அம்ரிதா ஏயெம்**
**இளவாலை விஜயேந்திரன்**
**எஸ்.கே. விக்னேஸ்வரன்**

# அகவெளி

வெள்ளை நிறப்பூவுமல்ல
வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி
உத்தமனார் வேண்டுவது

- விபுலாநந்த அடிகள்

மதி: 5
பிறை :14

வணக்கம் நண்பர்களே!

மிக நீண்டகால இல்லாமைக்குப் பின்னர், எங்கள் சந்திப்புக்கான வெளி யொன்று கைக்கெட்டியிருக் கிறது.பதிவுக்கும் பரிமாற் றத்திற்குமான ஊடகங்கள் காலத்தோடு மாற்றமடைந்து இப்போது மின்னூல் என்ற வடிவத்தோடு வந்து நிற்கிறது. ஒவ்வொரு வினாடியும் இலட்சக் கணக்கான கோடிக் கணக்கான எண்ணங்களும் கருத்துகளும் உட்புகுந்து கொண்டிருக்கும் பிரமாண் டமான இணைய வெளிக்குள் பிரவேசிப்பது என்பது பால் வெளிக்குள் உட்செல்லுகின்ற ஒரு சிட்டுக்குருவியின் முயற்சியே.

இப்போது ஏராள மான சஞ்சிகைகள் மின்னூல் களாகவும் அச்சுப் பிரதிகளா



இதழ் வடிவமைப்பு:
கணேஸ் தபீந்திரன்

வலைத்தள வடிவமைப்பு
Maestro Innovative Solution (PVT) Ltd

படைப்புகள் அனைத்துக்கும் படைப்பாளிகளே பொறுப்பு. உள்ளம் ஆசிரியர் குழு எந்த விதத்திலும் பொறுப்பல்ல.

சஞ்சிகையில் உள்ள சில புகைப்படங்கள் இணையத்தில் இருந்து எடுக்கப்பட்டவை.

WWW.Ulla

கவும் தமிழ் மொழியில் வந்து கொண்டிருந்தாலும்கூட வாசிப்புக்கு எல்லை இல்லை என்பதாலும் எங்களுடைய இளையவர்களிற்கும் புதிய படைப்பாளிகளுக்குமான களமொன்றாக இந்த ‘உள்ளம்’ உருவெடுக்கும் என்பதாலும் உங்களோடு சேர்ந்து பயணப்பட விருப்பப்படுகின்றோம்.

இதில் சிறுவயது முதல் வாசிக்கப்பண்ணுதல் மிக முக்கியமானது. அடிப்படை இலக்கண அறிதலோடு கருத்து மயக்கமற்ற, எளிமையான, இயல்பான, எல்லோருக்கும் பொதுவான தெளிந்த மொழிப் பயன்பாட்டினூடாக, எங்கள் மொழிப்பண்பாட்டை உறுதிப்படுத்துவோம்.

- உள்ளம் ஆசிரியர் குழு-





நிலம் தந்து
நிதி தந்து
வளர்மதிக்கு
வளம் தந்த
வள்ளல்
அமரர் இளையதம்பி
இராசரத்தினம்
அவர்கள்


தொடர்புகளுக்கு:
வளர்மதி முன்னேற்றக்
கழகமும் சனசமூக
நிலையமும்
சம்பியன்லேன்,
கொக்குவில் கிழக்கு
கொக்குவில்

Email:info@ullamm.com

இலங்கை:
775856249

இங்கிலாந்து :
7814643273

சுவிஸ் மற்றும் ஏனைய
ஐரோப்பிய நாடுகள்:
41 794670366

வட அமெரிக்கா:
(416) 316-3112


mm.Com

# இந்தியன் படமும் இலங்கைக் கிரிக்கெட்டும்

குமார் சங்கக்கார இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர். அற்புதமான துடுப்பாட்ட வீரர். 134 ரெஸ்ட் போட்டிகளிலும் நானூறுக்கு மேற்பட்ட ஒரு நாள் சர்வதேச ஆட்டங்களிலும் இலங்கைக்காக ஆடியவர். 2011 ஆம் ஆண்டில் இடம்பெற்ற உலகக் கிண்ணப் போட்டியைத் தொடர்ந்து சங்கக்கார, அணித் தலைமைப் பதவியிலிருந்து விலகினாலும், 2015ஆம் ஆண்டு வரை அணிக்காக ஆடிவந்தார். 2011 ஆம் ஆண்டில் இவர் கிரிக்கெட் உலகில் மிகப் புகழ்வாய்ந்த ஒரு விரிவுரையை ஆற்ற அழைக்கப்படுகின்றார்.

MCC Sprit of Cricket Cowdrey Lecture என்பது இந்த வருடாந்த உரையின் பெயர். You Tube இல் சங்கக்காரவின் இந்த ஒரு மணி நேர உரையை இலங்கையிலுள்ள சிறுவர்கள் அனைவரும் பார்க்க வேண்டும். சமூகக்கல்வி பாடநூல்களில் இலங்கையின் சமகால வரலாற்றின் ஒரு பதிவாக இப்பேச்சு இடம் பெற்றால் மிகப் பொருத்தமாக இருக்கும். கிரிக்கெட் வரலாற்றில் வழங்கப்பட்ட மிகச்சிறந்த உரை என விமர்சகர்களால் பாராட்டப்பட்ட இந்த உரையில், சங்கக்கார பலவிடயங்களைக் குறிப்பிடுகின்றார். இலங்கையில் கிரிக்கெட்டின் அறிமுகம், படிப்படியாக 1990 களில்





குமார் சங்கக்கார

# அலசி

கிரிக்கெட் எப்படி இலங்கையர்களின் சமூக, பொருளாதார, கலாச்சார பரிமாணங்களின் ஒரு அங்கமாக மாற்றம் பெற்றது, அர்ச்சுனா ரணதுங்க தலைமையிலான இலங்கை அணி 1996இல் உலகக்கோப்பை ஆட்டங்களில் எவ்வாறு ஒருநாள் கிரிக்கெட் ஆட்ட முறைமையை மீள்உருவாக்கம் செய்தது என ஒவ்வொரு அம்சங்களாக விபரிக்கும் சங்கக்கார, இலங்கைக் கிரிக்கெட் அவர் குறிப்பிட்ட இப்பேச்சை வழங்கிய 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் எதிர் நோக்கிய சவால்களை விபரிக்கின்றார்.

இலங்கை கிரிக்கெட் சபையின் நிர்வாகச் சீர்கேடுகள், கிரிக்கெட் நிர்வாகத்தில் தொடரும் அரசியல் தலையீடுகள், கிரிக்கெட் நிர்வாகத்தில் நிலவும் ஊழல், வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் நம்பகத்தன்மை இன்றி கிரிக்கெட் கட்டுப் பாட்டுச்சபையின் நிதி வளங்கள் தவறாகப் பயன்படுத்தப்படுதல், கட்டுப்பாட்டுச் சபையின் தேர்தல் முறைமையில் கிரிக்கெட் கழகங்களுக்குள்ள தகாத செல்வாக்கு, இலங்கையின் முதல்தர கிரிக்கெட் போட்டிகளின் மோசமான தராதரம் என 1996ஆம் ஆண்டின் உலகக் கிண்ண வெற்றியைத் தொடர்ந்து வந்த ஏராளமான பண வருவாயின் பாதக விளைவுகளை சங்கக்கார பட்டியலிடுகின்றார். மிகையான பணமும், அதிகாரமும் ஊழலுக்கு விதை போட்டன.

சங்கக்கார குறிப்பிடுகின்ற நிர்வாகச் சீர்கேடுகளும் ஊழலும் 2015ஆம் ஆண்டின் பின்னர் இன்னும் மோசமடைந்து செல்வதனையே கடந்த சில ஆண்டுகளில் நடைபெற்றுவரும் நிகழ்வுகள் சுட்டிக் காட்டுகின்றன. 2021 செப்ரெம்பரில் இலங்கை கிரிக்கெட் அணி உலகத்தர வரிசையில் எட்டாம், ஒன்பதாம் இடங்களை ரெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் வகித்து வந்தது. 2021 யூன், யூலை மாதங்ளில் இங்கிலாந்து சென்ற இலங்கை அணி மோசமான தோல்விகளை ஒருநாள் மற்றும் T20 போட்டிகளில் சந்தித்தது. அணியின் மோசமான ஆட்டத்தினால் ஏமாற்றமடைந்த அர்ச்சுனா ரணதுங்க, தொலைக்காட்சிகளில் கூட இலங்கை ஆட்டங்களை இனிமேல் பார்க்கக்கூடாது என்கிறார். இங்கிலாந்தில்

**எனது 21 வருட கிரிக்கெட் வாழ்வில் எவரும் எனக்கு லஞ்சம் கொடுத்ததோ, கொடுக்க அணுகியதோ கிடையாது.**

இம்ரான்கான்

**(முன்னாள் பாகிஸ்தான் கிரிக்கெட் அணித்தலைவர் , தற்போதைய பாகிஸ்தான் பிரதமர். இவரது தலைமையில் பாகிஸ்தான் அணி 1992 ல் உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியது )**

பெற்ற அணியின் அவமானம் மிக்க பெறுபேறுகள், பல ஆண்டுகளாகத் தொடரும் தவறான கிரிக்கெட் முகாமைத்துவம், ஊழல் மற்றும் ஒழுக்கமின்மையின் ஒட்டுமொத்த விளைவே என்பது அர்ச்சுனாவின் கருத்து. சில மாதங்களுக்கு முன்னர் இலங்கைக்குப் பயணஞ் செய்ய இந்தியா தனது இரண்டாம் தர அணியை அனுப்பியது. இலங்கை கிரிக்கெட்டின் தரம் தாழ்ந்து போயிருப்பதே இதற்குக் காரணம்.

அடுத்த உலகக் கிண்ணப்போட்டி 2023 ஆம் ஆண்டில் இந்தியாவில் இடம்பெறவுள்ளது. பத்து அணிகள் இறுதிப்போட்டிக்குத் தெரிவாகவுள்ளன. இலங்கை அணி சுப்பர் லீக் முறையில் தெரி வாகவுள்ள முதல் எட்டு அணிகளில் இடம்பெறுமா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். சுப்பர் லீக் முறையிலான போட்டிகளில் சர்வதேச கிரிக்கெட் சபையின் (ICC) பன்னிரெண்டு அங்கத்துவ அணிகளும் நெதர்லாந்து அணியும் போட்டியிடுகின்றன. இவற்றிலிருந்து எட்டு அணிகள் உலகக் கிண்ண இறுதிப் போட்டிக் குத் தெரிவாகும். இலங்கை சுப்பர்லீக் முறையில் தெரிவாகத் தவறினால், மற்றுமொரு தகுதிகாண் சுற்றுப்போட்டியில் பங்கு பற்றி கடைசி இரு இடங்களில் ஒன்றைப்பெற போராட வேண்டியிருக்கும்.

கடந்த சில ஆண்டுகளில் இலங்கையின் முன்னாள் வீரர்களான சனத் ஜெயசூரிய, நுவான் சொய்ஸா, அவிஸ்ஹ குணவர்த்தன மற்றும் டிலார லொக்கு ஹெட்டிஹே


அர்ஜீன ரணதுங்க

ஆகியோர் மீது சர்வதேச கிரிக்கெட் சபையின் ஊழலுக்கெதிரான பிரிவு குற்றச்சாட்டுக்களைத் தெரிவித்திருந்தது. கிரிக்கெட் நிர்வாகம் மற்றும் வீரர்களுக்கெதிராக தொடர்ந்து சுமத்தப்பட்டு வரும் ஊழல் குற்றச்சாட்டுகள் இலங்கைக் கிரிக்கெட்டின் பெயருக்குக் களங்கம் விளைவிப்பதாகவே அமைகின்றன. இலங்கையின் முன்னாள் விளையாட்டுத் துறை அமைச்சரான ஹரின் பெர்ணான்டோ 2018ஆம் ஆண்டில் சர்வதேச கிரிக்கெட்சபையின் ஊழலுக்கெதிரான பிரிவின் தலைவரான அலெக்ஸ் மார்ஷல் என்பவரைச் சந்தித்த பின்னர் ஒரு அதிர்ச்சித் தகவலை வெளியிட்டிருந்தார். இலங்கை, கிரிக்கெட் உலகின் ஊழல் மிகுந்த நாடாக (most corrupt cricket nation) சர்வதேசக் கிரிக் கெட்சபையின் அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டிருந்தது என்பதே இத்தகவலாகும். இந்த விடயம் சர்வதேச ஊடகங்களில் அதிக கவனம் பெற்றது.

1996 ஆம் ஆண்டு வெளிவந்து ஆஸ்கார் விருதுவரை சென்ற இந்தியன் திரைப்படத்தில் ஒருகாட்சி வரும். வாகன அனுமதிப்பத்திரம் வழங்கும் நிறுவனத்தில் ஒரு ஊழியராக வருவார் கமல்ஹாசன். ஊழல்பேர்வழியான இவர் பணம் பெற்றுக் கொண்டு தகுதியில்லாத வாகனமொன்றுக்கு தகுதிச்சான்றிதழ் வழங்குவார். இந்த வாகனம் சில நாட்களில் விபத்தில் சிக்கி நாற்பது குழந்தைகள் அவலமாகப் பலியாவார்.

**அரவிந்த டி.சில்வா, சனத்ஜெயசூரிய, முத்தையா முரளிதரன், லசித் மலிங்க,மஹேல ஜெயவர்த்தன, குமார் சங்கக்கார என உலகத் தரம் வாய்ந்த வீரர்கள் அடுத்தடுத்துக் கிடைத்தது இலங்கைக் கிரிக்கெட் செய்த அதிர்ஷ்டமே. ஒரு பரம்பரையில் ஒரு தடவையே எதிர்பார்க்கத்தக்க இந்த வீரர்கள் அடுத்தடுத்து ஓய்வு பெற்றபின்னர் 2015ம் ஆண்டில் இருந்து இலங்கை அணியின் வீழ்ச்சி ஆரம்பமானதெனலாம்.**

பொதுமக்களுக்குச் சேவை செய்ய என பதவியிலமர்த்தப்படும் ஒருவர் தனது கடமையிலிருந்து தவறி சுய லாபத்திற்காக தனது பதவி அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துகிற போது அப்பாவிப் பொதுமக்கள் எத்தகைய விலையைக் கொடுக்க நேரிடுகிறதென்பதே இந்தியன் படம் சொல்லுகின்ற செய்தி.

ஒருநாட்டின் உள்ளூர் கிரிக்கெட் போட்டிகளின் தரமே அதன் தேசிய அணியின் தரத்தை நிர்ணயிக்கின்றது. இலங்கையில் கிரிக்கெட் ஆர்வத்திற்கும் திறமைக்கும் குறைவில்லை. ஆனால், இத்திறமையை உள்ளூர் கிரிக்கெட் கட்டமைப்பும் முகாமையும் வழிப்படுத்தி மெருகேற்ற வேண்டும். இலங்கையின் உள்ளூர் முதல்தர கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளின் தரம் சர்வதேச தரத்திற்கு இணையாக இல்லாதிருப்பதற்கு மிக முக்கிய காரணம் அளவுக்கு அதிகமான எண்ணிக்கையில் உள்ளூர் கழகங்கள் காணப்படுவதே என முன்னாள் அணித் தலைவர் மஹேல ஜயவர்த்தன குறிப்பிடுகின்றார். இலங்கையில் 24 கழகங்கள் போட்டியிடுகின்றன. இலங்கையளவு சனத் தொகை கொண்ட அவுஸ்திரேலியா வெறும் ஐந்து,ஆறு உள்ளூர் அணிகளையும்,1.3 பில்லியன் மக்கள் தொகை கொண்ட இந்தியா 30 அணிகளையும் உள்ளூரில் கொண்டிருப்பதாக மஹேல சுட்டிக் காட்டுகின்றார். அளவுக்கதிகமான அணிகளாகப் பிரிகின்றபோது உள்ளூர் ஆட்டங்களின் போட்டித் தன்மை நலிவடைகின்றது. ஆற்றல் மிக்கோரை அடையாளம் கண்டு மெருகேற்ற தற்போதைய போட்டிக்

கட்டமைப்பு எவ்விதத்திலும் உதவவில்லை. கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தேர்தல்களில் உள்ளூர் கழகங்களின் வாக்குகளை இழக்க விருப்பமில்லாததால் கிரிக்கெட் முகாமையில் பதவியிலிருப்போர் தற்போதைய முறையை மாற்ற முன்வருவதுமில்லை. கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கான தேர்தல்களில் காலங்காலமாக பணம் முடிவுகளைத் தீர்மானிப்பதில் முன்னிலை வகிக்கின்றது.

அரவிந்த டி.சில்வா, சனத்ஜெயசூரிய, முத்தையா முரளிதரன், லசித் மலிங்க, மஹேல ஜெயவர்த்தன, குமார் சங்கக்கார என உலகத் தரம் வாய்ந்த வீரர்கள் அடுத்தடுத்துக் கிடைத்தது இலங்கைக் கிரிக்கெட் செய்த அதிர்ஷ்டமே. ஒரு பரம்பரையில் ஒருதடவையே எதிர்பார்க்கத்தக்க இந்த வீரர்கள் அடுத்தடுத்து ஓய்வு பெற்றபின்னர் 2015 ம் ஆண்டில் இருந்து இலங்கை அணியின் வீழ்ச்சி ஆரம்பமானதெனலாம். சர்வதேசக் கிரிக்கெட் மத்தியஸ்தத்தில் பெருமை சேர்த்த ரஞ்சன் மடுகல்ல,ரொஷான் மகாநாம மற்றும் குமார் தர்மசேன போன்ற முன்னாள் அணி வீரர்களையும் இங்கு குறிப்பிடுதல் பொருத்தமாகும். திறமையுள்ள புதிய வீரர்களை இனங்காணவும் மெருகேற்றவும் கிரிக்கெட் கட்டமைப்பு புனரமைக்கப்படவேண்டும். அரசியல் தலையீடுகளற்ற சுயாதீனமான, ஊழலற்ற கிரிக்கெட் நிர்வாகமுறை உருவாக்கப்படவேண்டும்.

பலமில்லியன் இலங்கையர்களுக்கு குறிப்பாக கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக கிரிக்கெட் ஆட்டம் பெருமையையும் மகிழ்ச்சியையும் தந்து பல்லாயிரம் இளைஞர்களுக்கு தமது எதிர்காலம் பற்றிய நம்பிக்கையையும் அளித்து வந்திருக்கின்றது. இலங்கை உலகளவில் கிண்ணம் வென்ற ஒரேயொரு விளையாட்டு கிரிக்கெட் மட்டுமே. தொடர் தோல்விகள், நீண்டு செல்லும் நிர்வாகச் சீர்கேடுகள், ஊழல் குற்றச்சாட்டுகள் இவையெல்லாம் வீரர்களையும் விளையாட்டையும் ஆராதிக்கும் ரசிகர்களை ஏமாற்றமடையச் செய்து மக்களின் கிரிக்கெட் மீதான ஆர்வத்தை படிப்படியாக இல்லாதொழிக்கும். தனிநபர்கள், அவர்களது அதிகார ஆசை, பண ஆசை இவற்றைக் காட்டிலும் கிரிக்கெட் ஆட்டம் இலங்கைக்கும் அதன் மக்களுக்கும் முக்கியமானது. குமார் சங்கக்கார தனது MCC பேச்சில் குறிப்பிடுவது போல, கிரிக்கெட்டின்பலம் அதன் மீதான மக்களின் ஆர்வமும் அபிமானமுமே. இந்தியன் படக் காட்சியில் ஊழலால் உயிர்கள் இழக்கப்பட்டதாகக் காட்டுவார்கள். கிரிக்கெட் ஊழல் விரைந்து களையப்படா விடின், கட்டமைப்பு மாற்றங்கள் ஏற்படாவிடின், இருபது மில்லியன் மக்களுக்கு மகிழ்ச்சியைத் தந்த,நாட்டுக்கு உலக அங்கீகாரத்தைத் தந்த ஒரு விளையாட்டின் ஆன்மா இலங்கையில் சிதைக்கப்பட்டுவிடும். நல்லதோர் வீணை செய்து அதைப் புழுதியில் புதைக்கப் போகின்றோமா? ■



மஹேல ஜெயவர்த்தன



லசித் மலிங்க



முத்தையா முரளிதரன்




சனத்ஜெயசூரிய



அரவிந்த டி.சில்வா

## கணைகள்



இந்த முறை வெளிவந்த உள்ளம் இதழ் பற்றி உங்கள் ஆக்கபூர்வமான, ஆரோக்கியமான, பாரபட்சமற்ற விமர்சனங்களை முன்வையுங்கள். எங்களால் தெரிவுசெய்யப்படும் சிறப்பான விமர்சனம் ஒன்றுக்கு ரூபா 5000 பெறுமதியான பரிசு வழங்கப்படும். மிகப் பொருத்தமான விமர்சனங்கள் எமது இதழில் கணைகள் பகுதியில் பிரசுரிக்கப்படும். எங்கே உங்கள் கணைகளுடன் தயாராகுங்கள்.

மின்னஞ்சல் : kanaigal@ullamm.com



# வானப்பெருவெளி வனப்பு



சட

வானம் விரிந்து கிடக்கிறது
உந்தனதும் எந்தனதும்
மனம் போல

வேண்டியபடி
வர்ணங்களைக் குழைத்தெடுத்து
வரைபுகளை நிகழ்த்த
அசைகின்ற தூரிகையாய்
எழுகின்ற எண்ணங்கள்

எல்லையற்ற சுவர்
எண்ணற்ற வர்ணங்கள்
அந்தமில்லாத் தூரிகை

எப்படி நான் – என்
ஓவியத்தை முடிக்க

எங்கிருந்தோ வந்த
சின்னப் பறவையொன்று – தன்
வண்ணச் சிறகடிப்பால்
வானப் பெருவெளியை
வனப்பாக்கிப் போகிறது...

# மூச்சடங்கா நிலம்

பனை மலைகளின்
முகடுகள் பிரிய
ஓலைகள் வழியே விழுகிறது
நிலா அருவி

கரைகள் கட்டுகளற்ற-என்
முற்றக்குளம் நிறைய
முழுசாக மூழ்கிக் குளித்தெழுவேன்
ஈரம் சொட்டும்

வேப்பம் துளிர்களின்
மெழுகினில் வழுக்கி
விழுகிற காற்று
என் தலை துவட்ட
குளத்தின் மேற்பரப்பெங்கும்
குதூகலம்

நிலவெறிக்கும் பொழுதுகளில்
முழுப்பொங்கல் நிகழ்த்தும்
என் முற்றம்


நானுறங்கப் போனாலும்
நடுச்சாமம் ஆனாலும்
தானுறங்கப்போகாது விழித்திருக்கும்
ஒரு நாளும் என்முற்றம்
உறங்கி நான் பார்த்ததில்லை

அதுவேயென் காவல்
அதுவேயென் களம்
அதுவேயென் கருப்பை
அதுவேயென் இருக்கை

அம்மை அப்பரின்
ஆச்சி அப்புவின் - அவர்தம்
ஆச்சிகளின் அப்புகளின்
அசைகின்ற உணர்வுகளால்
நிறைகின்ற பெட்டகம்

முன்னுக்கு இருந்தாலும்
பின்னுக்கு நின்றென்னை
உந்தி இயக்குகின்ற
உறவான உறவு
மூச்சடங்கா நிலம்.





காசு... பணம்... துட்டு... Mon
- mat




# இலங்கை ரூபாவின் மதிப்பிறக்கம் முன்கூட்டியே தெரிந்து இருக்க வாய்ப்பு இருந்ததா?



**ரகுராஜ்**
*நிதித்துறை நிபுணர்*

ey...
ters...?

### அறிமுகம்

இலங்கை ரூபாவிற்கும் மற்றைய நாட்டு நாணயமாற்று குறிப்பாக அமெரிக்க டாலர், ஸ்டெர்லிங் பவுண்டுகள் இடையில் ஏற்படும் விகித வேறுபாடுகள் ஏன் ஏற்படுகின்றன என்பதற்கு பலதரப்பட்ட காரணங்களான வட்டிவீத வித்தியாசம், பணவீக்க விகித வேறுபாடுகள், அரசகடன் தொகை, நடப்புக் கணக்குப் பற்றாக்குறை போன்ற பலதரப் பட்ட பொருளாதார காரணங்களை அடிப்படையாகக் கூறினாலும், இந்த இதழில் "ஒரு புதிய நோக்கில்" பலரும் இதுவரை அறிந்து கொள்ளச் சந்தர்ப்பம் கிடைத்திருக்காத வரைபட பகுப்பாய்வுமுறை மூலம் 2019ம் ஆண்டிலேயே அன்று 225 ரூபாய்களாக இருந்த பவுண்ட்ஸ் எவ்வாறு எதிர் காலத்தில் ஆகக் குறைந்தது 275 ரூபாய்வரை எட்டி இருக்க வாய்ப்புகள் இருந்ததை ஓரளவுக்கு முன்கூட்டியே கணித்து இருக்க முடியும் என்பதனையும் ஆராய்ந்து பார்ப்பம்.

### ஸ்டெர்லிங் பவுண்ட்ஸ் / இலங்கை ரூபா 12 மாதத்தில் 40% வீழ்ச்சி

ஐப்பசி மாதம் 2020ல் 235 ரூபாவாக மதிப்பி டப்பட்ட GBP/LKR தற்பொழுது கறுப்புச்சந்தையில் 15 தொடக்கம் 20 வீதம்வரை உத்தியோகபூர்வ கணிப்பிலும் அதிகமாக 330 ரூபாவரை மதிப்பிடப்படுகின்றது. அதேபோன்று, அமெரிக்க டொலர் விலையும் கறுப்புச்சந்தையில் 245 ரூபாய்வரை கடந்த 12 மாதத்தில் 30 வீதம்வரை அதிகமாக கணிப்பிடப்படுகின்றது.

### அந்நியச்செலாவணி இருப்பில் 60% வீழ்ச்சி

அதிகாரபூர்வமான வங்கிகளின் தரவுகளின்படி இலங்கையின் அந்நியச்செலாவணி இருப்பு 2019ம் ஆண்டு கார்த்திகை மாதம் 7.5 பில்லியன் அமெரிக்க டொலராக மதிப்பில் இருந்து அடுத்த ஒன்பது மாத காலத்தில் 60 வீதமாக அடைந்து 2.8 பில்லியனாக மதிப்பிடப்பட்டு இருந்தது.

இங்கு குறிப்பிடப்பட்ட அந்நியச்செலாவணி வீழ்ச் சிக்கு பல காரணங்கள் இருப்பினும் கீழே குறிப் பிடப்பட்டுள்ள மூன்று காரணங்களை முக்கியமாகக் கூற முடியும்.

முதலாவதாக இலங்கை அடிப்படையாக ஒரு ஏற்றுமதிக்கு பிரசித்திபெற்ற நாடு இல்லை. எனவே ஏற்றுமதி மூலம் கிடைக்கும் அமெரிக்க டாலர் வருமானத்திலும் பார்க்க இறக்குமதி மூலம் செலவு செய்யப்படும் பணம்தான் அதிகம். இதனை வர்த்தக பற்றாக்குறை என்று கூறுவார்கள்.

இரண்டாவதாக இலங்கையில் முதலீடு செய்வது இலாபகரமானதாக இருக்கமாட்டாது என்பதனா லும், இது அதிக ஆபத்தானது என்று வெளிநாட்டு முதலீட்டாளர்கள் கருதி இருந்தமையினாலும் நாட்டுக்குள் வருகை தர இருந்த டொலரின் அளவில் குறைவு ஏற்பட்டது.

கடைசியாக COVID 19 தொற்று நோய் பரவலிற்குப் பின்னர் சுற்றுலாப் பயணிகளின் வருகை குறை வினாலும் டொலர் வருமானத்தில் தாக்கம் ஏற்பட் டது.

### பொருளாதார அவசரநிலை அறிவிப்பு - ஏன்?

நாணய மதிப்பிறக்கம், அதனால் அதிகரித்து வரும் அத்தியாவசிய உணவு வகைகள், உயரும் பண வீக்கம், அந்நியச்செலாவணி பற்றாக் குறையில் இயங்கும் வங்கிகள் என்பனவற்றில் இருந்து நாட டைக் காக்கும் நோக்குடன் இலங்கை அரசாங்கம் பொருளாதார அவசர நிலை என்பதனை பிரகடனம்

**லூனி என்பது கனேடிய டாலருக்கு ஒரு புனைப்பெயர், ஏனெனில் ஒரு டாலர் நாணயம் "லூன்" என்ற பறவையின் உருவத்தைக் கொண்டுள்ளது, இது கனடாவில் பிரபலமான இனமாகும்.**



செய்துள்ளது. அத்துடன் நாணயச் சந்தையில் ஏற்படும் அதிகளவு ஏற்றத்தாழ்வுகளைக் கட்டுப்படுத் தவும், மற்றும் கறுப்புச் சந்தையின் விலை அதிகரிப்பை தடுப்பதற்காகவும் இலங்கை மத்திய வங்கி மிக முக்கியம் அல்லாத பொருட்க ளான தொலைக் காட்சிகள், மணிக் கூடுகள், ஏர்கண் டிஷனர்கள், தொலை பேசிகள் போன்றவற் றிக்கான இறக்கு மதி களுக்கு 100வீத Margin வைப்புத் தொகையை விதித்து இருக்கின்றது.




## முடிவுரை

கோவிட்19 காலத் திற்கு பின்னர்தான் இலங்கை ரூபாவில் அதிகளவு மதிப்பிறக்கம் ஏற்பட்டு பொரு ளாதார அவ சரநிலை பிரகடனப்படுத்தப்பட்டாலும், அதற்கு முன்னரேயே அதாவது 2019ம் ஆண்டு ஆரம்ப காலத்தில் GBP/LKR விலை எதிர் காலத்தில் 275 வரை அதிகரிக்கக் கூடிய வாய்ப் புகள் இருந் ததை கீழே பிரசுரிக்கப்பட்டு இருக்கும் வரைபடம் முன் கூட்டியே தெரி யப்படுத்தி உள்ளது. பெரிய பிரசித்திபெற்ற முதலீட்டு வங்கிகள் தற்போதைய கால கட்டத்தில் பொரு ளாதார அடிப்படைக் காரணங் களை அதி களவு கருத்தில் கொள்வதைவிட வரைபட பகுப்பாய்வு முறையி லேயே அதிகளவு கவனம் செலுத்தி முதலீட்டை மேற் கொண்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.




அடுத்த இதழில் அருகே குறிப்பிடப்பட்ட வரை படத்தை இன்னும் மேலும் கூட விளக்கமாக அலசி ஆராய்வோம்.




JANATHA STEELS
Importers & General Hardware Merchants Importers & Dealers
In Bolt & Nuts & Fastners Hand Tools & Engineering Tools
+94 11 2 421 412
+94 112 345 667
20, QUARRY ROAD, COLOMBO-12, SRI LANKA.



## தபீந்திரன் பிரியா

இந்த இதழின் அட்டைப் படத்தை வரைந்தவர் ஓவியர் பிரியா.

யாழ்ப்பாணத்தின் வளர்ந்து வரும் ஓவியரான பிரியா, ஓவியம் மற்றும் வடிவமைப் புத்துறையில் பட்டப்படிப் பினையும் பட்டமேற்படிப்பை யும் பூர்த்தி செய்தவர். அற் புதமான கண்ணையும் கருத்தையும் கவரும் ஓவியங் களின் படைப் பாளி.

வரைதலும் வர்ணம் தீட்டலும் (Drawing and painting) இவரின் திறன்கள். டிஜிட்டல் முறை யிலான ஓவியங்களும் இவருக்குக்கைவந்தவை. தனது ஓவியத் திறமை களை சமூகப் பயன்பாட் டிற்கும் பயனுள்ளதாக்க வேண்டும் என்பதில் முனைப் பாகச் செயற்படும் பிரியா, பாடசாலைப் பிள்ளைகளுக்கான பயிற் சிப்பட்டறைகளை சக ஓவியர்களுடன் நடாத்தி வருகின்றார். ஓவிய விமர்சகராகவும் தன்னை வெளிப்படுத்தி வரும் இவர், ‘புதியசொல்’ என்ற சஞ்சிகையில் ஓவியக் கலை பற்றி எழுதியும் உள்ளார்.

இலங்கையிலும் வெளி நாடுகளிலும் இடம் பெற்ற பல ஓவியக் கண்காட்சி களைஇவரது ஓவியங்கள் அலங்கரித்தன. ‘உள்ளம்’ இதழுக்கான ஓவியங்கள் பலவற்றை உடனுக்குடன் வரைந்து, உள்ளத்தின் பக்கங்களுக்கு உயிரூட்டி வரும் இவரது ஆக்கங் களை வாசகர்கள் தொடர்ந்து எதிர்பார்க் கலாம்.

அட்டைப் படத்துக்கான ஓவியம் மட்டுமல்லாது, அகவெளி, ஊருக்குப் போகிறோம் மற்றும் அனு பவப் பதிவு என்பவற்றுக் கான ஓவியங்களையும் கவிதைகள், மடை திறந்து, ஐயம் தெளி, அதிர்வு , சிறு கதைகள், என்பனவற்றுக் கான குறியீட்டுச் சின்னங் களையும் வரைந்தவர் ஓவியர் பிரியா என்பது குறிப்பிடத்தக்கது.



## கயாழ

கயாழினி
கல்லூரியி
கலைப் பிரி
ஓவியம் 
உடையவர்

இந்த இத
மூச்சடங்கா
மான ஓவி
காலத்தில் 
மிளிரக் 
தென்படுகின்

## அமளி



தொழிலாயோ பொழுது போக்காயோ கொள்ளாமல் விசேட தேவைகளிற்காய் மட்டும் நுட்பமாக ஓவியங்கள் வரைகின்ற அமளியின் குதிக்கால்களில், வசாவிளான் மண் வரைந்த செம்பாட்டு ஓவியம் எப்போதும் இருக்கும். இந்த இதழின் பனம்பால்பா தொடருக்கான ஓவியம் அமளியால் வரையப்பட்டது.



## ...ினி தேவராஜன்

தேவராஜன் தர்மபுரம் மத்திய
...ன் மாணவி. க.பொ. த உயர்தரம்
...வில் கல்வி பயின்று வருகின்றார்.
...வரைதலில் மிகவும் ஆர்வம்
...

...ழில் வானப்பெருவெளி வனப்பு,
... நிலம் என்ற இரு கவிதைகளுக்கு
...யங்கள் இவருடையவை. எதிர்
...மிகவும் திறமை வாய்ந்த ஓவியராக
...டிய சமிக்ஞைகள் இப்போதே
...ன்றன.



## பிருந்தாஜினி பிரபாகரன்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஓவியரான இவர், மட்டக்களப்பு விபுலானந்தா கலைக்கல்லூரியில் ஓவியம் பயின்று பட்டதாரியானவர். பாடசாலை நாள்களில் இருந்தே ஓவியம் வரையும் பிருந்தாஜினி, ஓவியக்கலையே தனது வாழ்க்கை என்கிறார்.

தனது எண்ணங்கள், விருப்பங்கள் மற்றும் திறன்களை வெளிப்படுத்தும் ஊடகமாக ஓவியங்களைப் பார்க்கும் இவர், சாதாரண மக்களின் வாழ்க்கை முறைகள், மக்களது வறுமைநிலை, மனித அவலங்கள் என சமூகவிடயங்களைப் பிரதிபலிக்கின்றபோது தனது ஓவியத் திறமை பெரிதும் வெளிப்படுவதாகக் குறிப்பிடுகின்றார்.

'உள்ளம்' இதழில் வெளியான 'வேட்டைக்காரன்' என்ற கதைக்கான ஓவியத்தை வரைந்துள்ளார். பிருந்தாஜினியின் இன்னும் பல ஓவியங்களை இனிவரும் 'உள்ளம்' இதழ்களில் தொடர்ந்து எதிர்பார்க்கலாம்.



# சஞ்சயன்

நோர்வேயில் வாழும் புகைப்பட ஆர்வலர் சஞ் சயன். இவர் எழுதிய "காலம் என்னும் பெருவலையின் இழைகள்" என்ற பத்தியில் இடம் பெற்ற புகைப்படங்க ளும், கவிதைப் போட்டிக் கான புகைப் படமும் இவ ருடையவை.

# இராசதுரை குணசீலன்



மட்டக்களப்பின் மட்டிக்கழி ( Bar road ல்) கிராமத்தில் பிறந்தவர். தனது தந்தையார் இராசதுரை ஆலயங்களுக்கு ஒரு சேவை நோக்குடன் இலவசமாகதிரைச்சீலையை வரைந்து கொடுப்பவர் என் றும் அந்த வேளைகளில் அவற்றை அவதானித்து அதன் மூலம் தனது ஓவியத் திறமையைத் தன்னுள் வளர்த்துக் கொண்டார் என் றும் கூறுகின்றார்.

பின்னர் இவரது கிராமத்தில் அறிவியல் ஆசிரியராக இருந்த போது சித்திர ஆசி ரியர்கள் பற்றாக்குறை கார ணமாகசித்திரப்பாடத்தையும் அக்கறையுடன் கற்பித்தார். தற்போது கனடாவுக்குப் புலம்பெயர்ந்த பின்னர் டிஜிட்டல் ஓவியங்களை சிறப்பாக வரைந்து வருகின் றார்.

இந்த உள்ளம் இதழில் அக வெளியில் உள்ள அமரர் இளையதம்பி இராசரத்தினம் அவர்களின் உருவத்துக்கு உயிர் கொடுத்தவர் இவரே. தன் தந்தை தான் தனது துரோணர் என்பதையும் இந்த ஏகலைவன் பெருமை யுடன் கூறுகின்றார்.



# டீன் கபூர்

இலங்கையின் கிழக்கு மாகா ணத்தில் மருதமுனைக் கிராமத்தில் பிறந்து வாழ்ந்து வருகிறார். தற்போது அரச பாடசாலையில் ஆசிரியராகச் சேவையாற்றுகிறார். கற்கும் காலத்திலும் பிற்காலத்திலும் வியாபார நிலையங்களுக்கு விளம்பரப் பலகைகளை ஒயில் பெயிண்ட்டில் வடிவமைக்கும் பணி யில் ஈடுபாடுடையவராக இருந்தி ருக்கிறார்.

கணினியின் வருகைக்குப் பிறகு அதில் தேர்ச்சி பெற்று பகுதி நேர தொழில் வாண்மையை வேறு வகையில் அடைந்திருக்கி றார்.

கற்கும் காலத்தில் சித்திரம் வரைவ தில் ஏற்பட்ட நாட்டத்தினால் இன் றைக்கு கணினியில் ஓவியம் வரையும் நுட்பத்தை தானாகவே கற்று முகநூல் வாயிலாக எண் ணிம ஓவியங்களை வரைந்து வருகிறார்.

சித்திரமும் தமிழும் மாணவர்க ளுக்கு கற்பிக்கும் தனது பிரதான பாடங்கள் என சொல்வதில் மகிழ்ச் சியடைகிறார்.

தமிழில் ஏற்பட்ட விருப்பம் காரண மாக1987 முதல் நாளிதழ்களிலும் பல்வேறு இணையத்தளங்களிலும் முகநூலிலும் எழுதிவருகிறார். இதுவரை மூன்று கவிதை நூல் களை வெளிக்கொணர்ந்துள்ளார். குரோட்டன் அழகி (1994), திண்ணைக் கவிதைகள் (2007), சொற்களில் சுழலும் பிரபஞ்சம் (2019).
இந்த இதழின் ஓய்வு, மணியோசை கவிதைகள், நீலம் பாரித்த மனங் களின் திருப்திக்கான ஓவியங்கள் மற்றும் நினைவழியா உள்ளம் எழுத்தினையும் வரைந்தவர் இவராவார்.



# எரிகிற வீட்டில்...



இரவிரவாகக் கொட்டித் தீர்த்த மழையானது, பொழுது புலரும் வேளையில்தான், சற்று அடங்கிக் கொண்டது. மாத்தளன் கடற்கரையை அண்டிய பகுதியில் இருந்து முள்ளி வாய்க்கால் வரையான நிலப்பரப் பெங்கும் நிறைந்து கிடந்தன தரப்பாள் கொட்டில்கள். இரவு பெய்த மழையின் நிமித்தம் சில தரப்பாள் கொட்டில்களுக்குள் வெள்ளம் புகுந்து நிரம்பி இருந்தது. பள்ளப்பகுதிகள் சிறு குளங்களாகக் காட்சியளித்தன. அப் பகுதி களில் கொட்டில் அமைத்து இருந்தவர்கள், மேட்டுப் பகுதியை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தார்கள்.

கிழக்கே பெருங்கடலில் இருந்து அலைகள் ஆர்ப்பரித்த வண் ணம் கரையை வந்தடைந்து அடங்கிக் கொண்டிருந்தன. கடற்கரை அருகே கொட்டில் அமைத்து இருந்தவர்கள் வெளியே வந்து தூறல் மழையினில் நனைந்தவாறு ஆர்ப்பரிக்கும் கடலலைகளை வெறிக்கப் பார்த்தபடி இருந்தார்கள்.

காற்று பலமாக வீசிக் கொண்டிருந்தது. மணற்பரப்பில் ஆங் காங்கே நின்ற நெடும்பனைகள், காற்றின் இசைவாக்கத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல், பேயாட்டம் ஆடிக்கொண்டிருந்தன.



பரமன் தனது தரப்பாள் கொட்டிலை விட்டு வெளியே வந்தான். அவனுக்கு இயற்கை உபாதை ஏற்பட்டிருந்தது. கடற்கரைப்பக்கம் செல்லமுடியாத நிலையை உணர்ந்த அவன், தென் மேற்குப் பக்கமாக அடர்ந்து வளர்ந்து நின்ற வடலிமரங்களை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

கிழக்குத் திசை வெளிக்கத் தொடங் கியது. இருள் மெல்ல விலகிக் கொண் டிருந்தது. குளிர் உறைந்த காலநிலை யாக சூழல் மாறிவிட்டபோதிலும், மனிதர்கள்தமதுவாழ்வாதாரத்துக்கான வழித்தேடலுக்காய், தரப்பாள் கொட் டில்களை விட்டு வெளியேவரத்தொடங் கினார்கள்.

பனை வடலிப்பக்கம் போன பரமன் தனது கொட்டிலுக்கு வந்து சேர்ந்தான். கொட்டிலின் வாயிற்பகுதியில் இருந்த மண்குடத்தைச் சரித்து, நீரெடுத்து வாய்க்குள் விட்டுக் கொப்பளித்துத் துப்பியபின், மனைவி கொடுத்த தே நீரை வாங்கிக் கொண்டான். கூடவே முதல்நாள் இரவு சுட்டுவைத்த ரொட்டித் துண்டும் அவனது கையில் இருந்தது.

இராணுவ நடவடிக்கையின் முன் னேற்றத்தால், அவனது குடும்பமும் கிளிநொச்சி நகரைவிட்டு இடம் பெயர்ந்து, மாத்தளனுக்கு வந்து மூன்று மாதங்களாகி விட்டன. கையிருப்பில் இருந்த பணம் தீர்ந்து போகத் தொடங் கியது. மனைவியின் கழுத்தில் கிடந்த சங்கிலியை ஒரு நகைக் கடைக்கார முதலாளிக்கு அறாவிலைக்கு விற்று விட்டு, தரப்பாள் கொட்டிலுக்கு வந்த போது மனம் கனத்துப் போயிருந்தது அவனுக்கு. முகமும் இறுகிக் கிடந்தது. அதில் விரக்தியும் மேவி நின்றது.

இதைக் கண்டு கொண்ட அவனின் மனைவி மது, அவனை வினாவினாள்.

“என்னப்பா முகம் ஒருமாதிரிக் கிடக் குது…?”

பரமனின் பார்வை… அவளது கழுத் தின்மீது பதிந்தது… பின் அவளை ஏறெ டுத்து நோக்கியது.

“ இந்தச் சங்கிலியை வாங்கி உன்ர கழுத்தில போடுறதுக்கு, நான் எவ்வளவு கஷ்டப்பட்டனான். நீயும் ஆசைப்பட் டனி. ஆனால்…”

மதுவுக்குப் புரிந்து விட்டது அவனது மனநிலை.

“ இஞ்சரப்பா உதைக்குறிச்சு ஒண் டுக்கும் யோசியாதையுங்கோ. சங்கிலி என்ன களவா போனது? காசுக்குத் தானே வித்தது. பிறகு ஊருக்குப் போயிட்டமெண்டால், உழைச்சு ஒண்டை வாங்கிப் போடலாம். நீங்கள் ஒண்டுக்கும் யோசியாதையுங்கோ…”
மதுவின் வார்த்தைகள் அவன் மன துக்கு ஆறுதல் அளிப்பவையாக அமைந்தன. நம்பிக்கையூட்டுவனவாக இருந்தன. ஆயினும், “ஊருக்குப் போதல்…” என்பதைக் குறித்து அவ னுக்கு யோசனையாக இருந்தது.

இனி ஊருக்குப் போதல் சாத்தியப் படுமா…? பழையபடி எமது சொந்த மண்ணில் இருந்து கொண்டு, எமக்கான வாழ்க்கையை ஆரம்பிக்க முடியுமா?

மன்னாரில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினர் இப்ப புதுக்குடியி ருப்பிலும், மாவிலாற்றில் இருந்தவர்கள் முல்லைத்தீவிலும் வந்து நிற்கும் போது… இனி ஊருக்குத் திரும்புதல்… என்பது வெறும் பகற்கனவு என்பது பரமனுக்கு விளங்காமலில்லை.

பரந்த நிலப்பரப்பில் வாழ்ந்த மக்களைப் போரின் உச்சப்பயன்பாடு, ஒரு குறுகிய நிலப்பரப்புக்குள் கொண்டுவந்து முடக்கி விட்டிருந்தது. பெரும்பாலானோருக்கு தொழிலற்ற நிலை.

உணவுப் பொருள்களுக்குத் தட்டுப் பாடு. எஞ்சியிருந்த பொருள்களின் விலைகளும் அதிகரித்திருந்தன. நோய்த் தாக்கங்கள் ஏற்பட்டிருந்தன. மருந்துப் பொருள்களின் பற்றாக்குறை. திருட்டுகளும் ஆங்காங்கே அதிகரிக்கத் தொடங்கின.

இதன் நிமித்தம் பல குடும்பங்களில் பெண்கள் அணிந்திருந்த நகைகள் பணவசதியுள்ளவர்களின் கைகளுக்கு அறாவிலைக்குப் போகத் தொடங்கின. எரிகிற வீட்டில் பிடுங்கி எடுப்பதே இலாபம்… என்ற மனிதமற்ற சிந்தனை கொண்டவர்களாக, அவர்கள் எளியவர் களின் பொருள்களைத் தமதாக்கிக் கொண்டிருந்தார்கள்.

பரமனும் ஒருநாள் வேறுவழியின்றி

கதை என்பதை வெறும் கதையாக இல்லாமல், வாழ்விய லுடன் தொடர்பு படுத்திக் கொள்ளும் வகையில் அந்தக் கதையானது இருக்க வேண்டும். ‘இது வெறும் கதை இல்லப்பா. நம்ம வாழ்க்கை’ என்று ஏதோ ஒருவகையில், கதையுடன் வாசகர்கள் தங்களைப் பொருத்திக் கொள்ள வேண்டும். அப்படியொரு, படைப்பையும் எழுத்தையும் கதையையும் நமக்குத் தந்தவர் ஜே.கே. என்று எல்லோராலும் அழைக்கப்படும் ஜெயகாந்தன்.

*-வி. ராம்ஜி*


*(நன்றி இந்து தமிழ்)*

பெருந்தொகைக்கு விற்க வேண்டிய தன் மனைவியின் சங்கிலியை, அதன் விற்பனைத் தொகையின் காற்பங் கிற்கே விற்றுவிட்டு, வரவேண்டிய தாயிற்று.

“ என்னப்பா... இன்னும் தேத்தண்ணி குடிக்கேல் லையே...?”

தற்செயலாக அவ்விடத்துக்கு வந்த மது, கையில் ரொட்டித்துண்டு சகிதம் அவன் யோசனையில் ஆழ்ந்தி ருப்பதைக்கண்டு கேட்டாள்.

“ம்... ஒன்றுமில்லை...” என்று கூறிக்கொண்டே, ரொட்டியைக் கடித்தான். தேநீர் ஆறிப்போயிருந்தது.



**அலெக்ஸ் பரந்தாமன்**
**புதுக்குடியிருப்பு**

முதல் இரண்டு நாள்களாக எதுவித அசம்பாவிதங்களும் நிகழவில்லை. இரண்டுபக்கத் தரப்புகளும் அமைதி யாகவே இருந்தன. அந்த அமைதி குறித்து பரமன் அச்சப்பட்டான். அந்த அமைதி ஏதோவொரு பிரளயத் துக்கான முன்னறிவிப்பு... என்பதை அவன் தன்னுள் விளங்கியிருந்தான்.

இனி என்ன செய்வது...? என்ற மன அங்கலாய்ப்பே அவனைப்போன்று எல்லோரிடமும் காணப்பட்டது. இருப்பினும், ஒருசிலர் திரும்ப ஊருக்குப் போகலாம்... என்ற நம்பிக்கையைப் பொத்திப்பிடித்தபடி...வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

பக்கத்தில் எங்கேயோ அழுகுரல் கேட்கத் தொடங்கியது. ஒரு வாரத்துக்கு முன்பு, ஷெல்வீச்சில் இறந்து போன தனது மகனை நினைத்து அவனது தாய்க்கிழவி அழுது கொண்டிருந்தாள். பரமன் கிழவியை நினைத்து தனக் குள் கவலைப்பட்டான்.

சாவு என்பது எந்தநேரத்தில்... எந்த வடிவத்தில்... வந் திறங்கும் என்பது தெரியாத நிலையில், அதை உண் மையாக்கும் பொருட்டு, இராணுவத்தினர் ஏவிய ஷெல் லொன்று விண்ணதிரக் கூவியபடிவந்து, ஒரு தரப்பாள் வீட்டிற்குமேல் விழுந்து வெடித்துச் சிதறியது.

பரமன் எழுந்து கொட்டிலுக்குள் ஓடினான். மூன்று, நான்கு விநாடிகள் இடைவெளிவிட்டு, ஷெல்கள் ஒவ்வொன்றாக ஆங்காங்கே விழுந்து வெடிக்கத் தொடங்கின. எங்கும் ஒரே அவலக்குரல்கள்...

“ஐயோ ஆமிக்காரர் வந்து கொண்டிருக்கினம். எல்லாரும் கடற்கரை வழியாக ஓடுங்கோ...”

கொட்டிலுக்கு வெளியே யாரோ பெருங்குரலெடுத்துக் கத்துவது பரமனுக்குக் கேட்கிறது. மறுகணம்... உயிர்மீதான ஆசையில், எடுக்கக்கூடிய பொருள்களை எடுத்துக் கொண்டு, தன் மனைவியுடன் தரப்பாள் கொட்டிலை விட்டு வெளியே வந்தான். சனங்கள் கையில் அகப்பட்ட பொருள்களோடு கடற்கரைப்பக்கமாக ஓடிக் கொண்டிருந்தார்கள். ஷெல் விழுந்த இடங்களிலிருந்து எரிந்து கொண்டிருந்தன தரப்பாள் கொட்டில்கள்.

பரமனுக்கு அக்காட்சிகளைக் கண்டதும் தலையைச் சுற்றியது. மனைவியின் கையை இறுகப் பற்றிக் கொண்டான்.

“ என்னப்பா செய்யுது...?” மது கேட்டாள்.

“ ஒண்டுமில்லை. வா... சனத்தோடை சனமா ஓடிப்போய், அங்கால கொஞ்சம் எட்டத்தில இருந்திட்டு பிறகு வரு வம்...”

சனங்களின் அந்தரிப்பைக் கண்ணுற்ற பெருங்கடலும், தனது அலையடிப்பின் ஆவேசத்தைத் தணித்திருந்தது. காற்றும் தன் சீற்றத்தைக் குறைத்திருந்தது. எல்லோரும் கடற்கரை வழியாக ஓடிக்கொண்டிருந்தார்கள்.

> **“ அவலம்... அழுகை... அந்தரிப்பு... ஆவேசம்... விரக்தி... வெறுப்பு... என அனைத்து உணர்வுகளும் உயிர் தப்பியவர்களின் முகங்களில் பிரதிபலித்தன. குஞ்சு குருமன், பெண்டிர் பிள்ளை, கிழடு கட்டை... என்றே எல்லாவகையினரும் செய்வதறியாது எங்கே ஓடுகிறோம்... என்பது தெரியாது ஓடிக்கொண்டிருந்தார்கள். ”**

அலைகள் ஒதுக்கிய மனித மலங்களின் மிச்சங்கள் கரையெங்கும் பரந்து கிடந்தன. அதன் துர்மணம் தாங்க முடியாத நிலையில், பலர் வாந்தி எடுத்தபடி ஓடிக் கொண்டி ருந்தார்கள். வேறுசிலர் அதன்மீது மிதித்துவிட்டு, அருவ

ருப்புக்கொண்டவர்களாக கடல்நீரில் தங்கள் கால்களைக் கழுவியபடி... நின்றார்கள்.

தற்காலிக குடியிருப்புமீது ஏவப்படும் ஷெல்கள் பலதும் இலக்குத்தவறி கடலிலும் விழத் தொடங்கின. வேறு சில தரையிலும் விழுந்து வெடித்தன. இதனால் பலர் அவ்விடத்திலேயே உயிரிழந்து கொண்டிருந்தார்கள்.

பரமனும் தன் மனைவியுடன் மக்களோடு மக்களாக ஓடிக் கொண்டிருந்தான். சாவு அனைவரையும் துரத்திக் கொண்டிருந்தது. அவர்கள் அனைவரும் ஓடினார்கள்... ஓடினார்கள்... ஓடிக்கொண்டே இருந்தார்கள்.

அக்கணத்தில் அவர்கள் ஓடுகின்ற திசையில் சடுதியாக ஒரு ஷெல் விழுந்து வெடிக்கின்றது. ஓடிக் கொண்டிருந்த மக்களில் பலர் மண்ணோடு தூக்கி வீசப்பட்டார்கள். வேறுசிலர் கடல்நீருக்குள் போய் விழுந்தார்கள். எங்கும் ஒரே புகைமண்டலம்...

அவலம்... அழுகை... அந்தரிப்பு... ஆவேசம்... விரக்தி... வெறுப்பு... என அனைத்து உணர்வுகளும் உயிர்தப்பியவர்களின் முகங்களில் பிரதிபலித்தன. குஞ்சுகுருமன், பெண்டிர் பிள்ளை, கிழடு கட்டை... என்றே எல்லாவகையினரும் செய்வதறியாது எங்கே ஓடுகி றோம்... என்பது தெரியாது ஓடிக்கொண்டிருந்தார்கள்.

பரமனுக்கு முன்பாக ஒருத்தி தனது மூன்று பிள்ளைகளுடன் ஓடிக் கொண்டிருந்தாள். வழியில் சிதைந்த நிலையில் தனித்துக் கிடந்தது ஒரு பெண்ணின் உடல். அந்த உடலைச் சுற்றிநின்று அழுவதற்கு எவரும் அங்கு இருக்கவில்லை. பிள்ளைகளோடு ஓடிப் போனவள் அந்த உடலருகில் சென்றதும், சற்று நிதானித்துவிட்டு, இறந்த பெண்ணின் கழுத்தில் கிடந்த தாலிக் கொடியை தனது கரங்களால் பொத்திப் பிடித்து ஒரே இழுவையில் அறுத்தெடுத்தாள். காதில் கிடந்த தோடுகளைக் கழற்ற அவளுக்கு நேர அவகாசம் இருக்கவில்லை.

ஷெல்கள் தொடர்ந்தும் தரப்பாள் கொட்டில்கள் மேலும் கடலுக்குள்ளும் விழுந்து கொண்டே இருந்தன. ■

# ஊருக்கு போகிறோம்

இயந்திர மயமான நகர வாழ்க்கையிலிருந்து விடுபட்டு ஊருக்குப் போகிறோம் சித்திரை விடுமுறை அனைவருக்குமே விடுமுறை .

எமது அழகிய கிராமம். அதிகாலையிலேயே வந்து இறங்கி விட்டோம். மண்வாசனையை முகர முடிகிறது. வாகனச் சத்தங்கள் இல்லை. மோட்டார் இரைச்சலும் இல்லை. நேரம் அதிகாலை 4:30 .

இலைகளின் சலசலப்புடன், மெல்லிய இளம் தென்றல் காற்று. கருப்பு வெள்ளை குருவிகள் , கரண்ட் வயரில் மேலிருந்து கானமிசைக்கின்றன. மல்லிகைப் பூக்களின் வாசனை மூக்கை அள்ளுகிறது.

எங்கோ ஒரு கோயிலில் ஒலி பெருக்கியில் இருந்து “ நலம் தரும் நாயகனே” சீர்காழி கோவிந்தராஜனின் பாடல் மெலிதாக ஒலிக்கிறது. சொந்த ஊரில் கால்பதித்ததுமே அனைவருக்கும் பயணக் களை காணாமலே போய்விட்டது.

கேட்டைத் திறந்து உள்ளே போனதும் எம்மை முதலில் வரவேற்றது ஜிம்மி தான். பல நாட் பிரிவை எண்ணி துள்ளித் துள்ளிப் பாய்ந்து தன் அன்பை வெளிப்படுத்தியது.

கதிரவன் தன் கதிர்களை மெல்ல மெல்ல படர விட ஆரம்பிக்கிறான்.

மா, பலா, வாழை, கமுகு, தென்னை எல்லாம் ஓங்கி வளர்ந்திருந்தன.

ஒரு வருடத்தின் முன், மியாவாக்கி முறையில் (குறுங்காடு) நான் நெருக்கமாக நட்டுவிட்டுச்சென்ற மா ,கொய்யா , வேம்பு ,நெல்லி



போன்றனநன்கு வளர்ந்திருந்தன. முற்றத்தில் இருந்த செர்ரி மரம் (தேன் பழம்) கூட உயர்ந்து, படர்ந்து, குடை போல வளர்ந்திருக்கிறது. அதன் பழங்களை புசிக்க பட்சிகளும் அணில்களும் தயாராகிக் கொண்டிருந்தன.

ஏனோ தெரியவில்லை நேரம் மிக மெதுவாகவே நகர்வது நம் அனைவராலும் உணரப்படுகிறது. நகர



**ஜெயதாஸ்**

வாழ்க்கையில் , குளிப்பதற்கு சுடு நீர் தேவையென அடம்பிடிக்கும் பிள்ளைகள், இங்கே வந்ததும் கிணற்று நீரினிலே உற்சாகமாக குளிப்பது ஆச்சரியமே.



நாமும் கிணற்றடியில் குளித்து முடித்து காலை ஆகாரம் முடித்து சற்று ஓய்வெடுத்தோம்.

குலதெய்வ வைரவர் கோவிலுக்கு மனைவி பிள்ளைகளை அழைத்துச் சென்றா. பக்கத்து வீட்டுப் பார்வதம் மாமி, முன் வீட்டு மஞ்சுளா அக்கா, அயல் வீட்டு அன்னலட்சுமி ஆச்சி, என தன் வரவை பதிவுசெய்யவும் குசலம் விசாரிக்கவும் சென்றுவிட்டா.

பிள்ளைகள் தமது வயதையொத்த அயல் வீட்டுப் பிள்ளைகளுடன் விளையாடச் சென்றுவிட்டனர். பக்கத்து வீட்டில் நாய் போட்ட குட்டிகளை பார்க்கவும் தான்.

இயற்கையோடு ஒன்றிய வாழ்வு தான் எத்தனை ரம்மியமானது. பூக்களில் ரம்மியமானது தேனருந்தும் வண்டினங்களும் பட்டாம்பூச்சிகளும்.

பக்கத்து வீட்டு பலா மரத்தில் பழுத்து போயிருந்த பலாப்பழத்தை பதம் பார்க்கும் காக்கைகள். அவைகளுடன் போட்டிபோடும் அணில்கள் .

வசந்த காலம் ஆரம்பித்து விட்டதை அடையாளப்படுத்தும் குயில்களின் கூவல். தென்னை மரத்தில் கிளிகளின் கொஞ்சல்.

பூச்சி, புழு, தானியம் உண்ண கூட்டமாக வரும் புளினி கூட்டம்.

அத்தை வளர்க்கும் பசு மாடு, குட்டிகளுடன் ஆடு, கோழிகள். .. இன்னும் எத்தனையோ.

டிஜிட்டல் விளையாட்டுக்குப் பழகிப் போன பிள்ளைகளுக்கு இவை எல்லாம் ஒரு ஆரோக்கிய மாற்றம் .

முன் கதிரையில் இருந்து இவற்றையெல்லாம் நாம் ரசித்துக் கொண்டிருக்கும்போதே என் காலை உரசிக் கொண்டு போகிறது பூனை.

நாங்கள் வந்தால் தான் அதுவும் வீட்டில நிக்குது என்று அத்தை செல்லமாகப் பூனையை கோபித்துக் கொள்கிறா.

நேரம் நகர்கிறது வெயில் படர்கிறது. ஆனாலும் உயர்ந்து பரந்த பலாமரங்கள், தென்னை மரங்கள் நிழலைத் தருகின்றன.

முன் கடையில் வாங்கிய அரிசி, ஊரிலே விளைந்த மரக்கறிகள், விறகு அடுப்பு சட்டி, பானை கிணற்று நீர் என சமையல் ஆரம்பிக்கிறது.
அந்த உணவு தான் என்ன சுவை.

நகர வாழ்வில் இருக்கும் மன அழுத்தமும் ஊருக்கு வந்ததும் போயே போச்சு. இவ்வாறாக வருடத்துக்கு மூன்று முறையாவது வந்துபோக கிடைத்தாலே கடவுள் கொடுத்த வரமாக எண்ணுவேன்.

■

**Decor துறையில்**
**அனுபவம் வாய்ந்தவர்**

**Wedding**
**Birthday**
**Anniversary**
**Saree ceremony**
**&**
**Any occasion**




# Kavitha Decor

**மங்களகரமான உங்கள் வைபவங்களை**
**மகிழ்வுடன் கொண்டாட அழகான அலங்காரம் முக்கியம்**

*Kavitha*
*(647) 298-1959*



அகன்

# நினைவழியா உள்ளம்

இற்றைக்கு 45 வருடங்களுக்கு முன்பு வளர்மதியின் மூத்த அங்கத்தவர்களால் வித்திடப்பட்ட உள்ளம் சஞ்சிகையானது, இத்தனை ஆண்டுகள் கடந்தும் இன்னொரு மைற்கல்லை எட்டிப் பிடிப்பதில் மிக்க மகிழ்ச்சி. தொடர்ச்சியான ஒரு நிலையான பயணத்தை மேற் கொள்ள முடியாமல் போனதில் எத்தனையோ இடையூறுகள், தடங்கல்கள் வந்த போதிலும் கையெழுத்துப் பிரதி, அச்சுப் பிரதி என்ற படிக்கற்களைத் தாண்டி, மின்னிதழ் என்ற இன்னொரு பரிமாணத்துக்கு உள்ளம் தற்போது உயர்கிறது.

1976ல் சில கையெழுத்துப் பிரதி களுடன் நின்றுபோன உள்ளத்தினை மீண்டும் கையெழுத்துப் பிரதியாக வெளியிடவேண்டும் என்ற எண்ணம் 1987 பகுதிகளில் எம்மிடையே எழு கின்றது. அமைதிப்படையின் ஆக்கி ரமிப்புக்குள் நாங்கள் அகப்பட்டுக் கொண்ட காலமது. எம் சுற்றாடலில் ஏராளம் அழிவுகள்.. வளர்மதியிலும், அருகிலிருந்த மாத்தனை கந்தசாமி கோயிலிலும் ஏராளமான மக்கள் அகதிகளாகத் தஞ்சமடைந்திருந்தனர். படிப்படியாகப் போரின் உக்கிரம் குறைவடைந்து நிலைமைகள் மெல்ல மெல்ல இயல்பு நிலைக்குத் திரும்பிக் கொண்டிருந்தது.

பெருமளவிலான இளைஞர்கள் வளர்மதியில் அணி திரண்ட காலம். அனைவரதும் ஆற்றலையும், உழைப்பையும் ஒருங்கிணைக்கும் பொருட்டு முதன் முறையாக இரண்டு நிர்வாகக் குழுக்கள் உருவாக்கப் பட்டன. இக் குழுக்களால் பற்பல வேலைத் திட்டங்கள் செயற்படுத் தப்பட்டன. அவற்றில் ஒன்றுதான் உள்ளம் கையெழுத்துப் பிரதியினை மீள வெளியிடுவது என்பது.

அன்றிலிருந்து இன்று வரையான உள்ளத்தின் வரலாறு, வளர்ச்சிப் போக்கு, எமது அனுபவங்கள் என் பவற்றையும் எங்களுடன் தோள் தந்து உழைத்தவர்களை நன்றியுடன் நினைவு கூரும் ஓர் அனுபவப் பதிவையே நினைவழியா உள்ளம் எனும் இத் தொடர்மூலம் பகிரவுள் ளோம். ஆனால் அதற்கு முன்பாக வளர்மதியுடன் எந்த வகையிலும் தொடர்பைக் கொண்டிராத இருவர், உள்ளம் அச்சுப் பிரதியாக வெளிவந்த காலங்களில் நல்கிய உழைப்பையும், ஈடுபாட்டையும் எம்மால் மறக்க முடியாது. அவர்களை நன்றியுடன் எம் மனதில் இருத்தி இத் தொடரைத் தொடர்வதே சிறப்பானதாக இருக்கும் என நம்புகிறோம். அந்த இருவரில் ஒருவர் சில ஆண்டுகளுக்கு முன்பு மறைந்த எழுத்தாளர் அமரர் சிதம்பர திருச்செந்தி நாதன் அவர்கள். மற்றவர் திரு ராதேயன் அவர்கள்.... தொடர் வோம்!



**பேராசிரியர்**
**மா. சின்னத்தம்பி**

**(ஓய்வு பெற்ற கல்வியியல் பேராசிரியர்,
யாழ் பல்கலைக்கழகம்)**

ஒரு சமூகத்தின் அசைவியக் கத்தின் மூலம் இளைஞர்கள் தான். அதன் ஆத்மா அவர்களது ஒழுக்கம் மற்றும் செயல் திறன்கள்தான். இதனால் அவர்களை ஒன்றிணைப்பதிலும், ஒழுங்குறச் செயல்பட வைப்பதிலும் கிராமிய சனசமூக நிலையங்கள் ஒப் பற்ற பொறுப் பையும் கடமையையும் கொண்டுள்ளன.

குடும்பங்கள், பள்ளிகள், கோவில்கள் போன்று கிராமிய சனசமூக நிலை யங்களிலும் இளைஞர்களுக்குரிய வாய்ப்பு, சமுதாயப் பயிற்சி ஒற்றுமை, கூட்டுப் பொறுப்பு என்பனவற்றையும் கட்டுருவாக்கம் செய்கின்றன தூண்டு கின்றன.

இத்தகைய பொறுப்புக்களை உன்ன தமாக நிறைவேற்றிக் கொண்டு இன் றும் உயிர்ப்புடன் இயங்கும் சமுதா யத்தின் ஜீவநதியாக விளங்குவது கொக்குவில் கிழக்கு வளர்மதி சனசமூக நிலையமாகும். ஏறக்குறைய ஆறு தசாப்தங்களாக தொய்வில்லாது, நிதானமாக ஆற்றங்கரை நாணல் போல் இயங்குவது வளர்மதிதான்.

அமைதியற்ற சமுதாய சூழல், இளைஞர் களை அச்சமூட்டும் அரசியல், திக்குத் தெரியாது சிதறியோடிய குடும்பங்கள் என்றவாறு சமூகங்களின் முகம் சிதை ந்து கொண்டிருந்த வரலாறு கொண்டது எங்கள் சமூகம். இதில் தொலைந்து போகாது காலூன்றி நிற்பது வளர்மதி சனசமூக நிலையம் தான்.

இதில் மறக்க முடியாத மனிதன் செல் லத்துரை செல்வராசா என்ற நாதன் தான். நாதன் இல்லாத வளர்மதி என்ற ஒன்றே இல்லை. எந்தச் சூழலிலும் புலம் பெயராது ஊருடன், குடும்பங்களுடன், வளர்மதியுடன் இணைந்து வாழும் நாதனின் பங்கை இங்கு பதிவு செய்ய வேண்டும்.

வளர்மதி பாலர்கல்வி, முதியோர் பரா மரிப்பு, நோய்த்த டுப்பு பிரசாரம், விளை யாட்டு, மாதர்மன்றப் பணிகள் என பல தளங்களில் நிதானம் தவறாது செயற் பட்டு வருகின்றது.

இதன் கலை இலக்கிய வளர்ச்சியில் " உள்ளம்" என்ற சஞ்சிகை ஒரு மைல் கல். இதன் ஆரம்பகால ஆசிரியர்கள் இன்று மருத்துவ நிபுணர்களாகவும், பொறியாளர்களாகவும், பொருளியல் நிபுணர்களாகவும், சமூக சேவகர்களா கவும் பல நாடுகளில் பல திசைகளில் பிர காசிக்கின்றனர் நிமிர்ந்து நிற்கின்றனர். காலத்தின் காற்று திசை மாறிய வேளை இந்த அழகிய அறிவு பூர்வ சஞ்சிகை யின் வெளியீடும் தடைப்பட்டது.

மரத்தின் கிளைகளில் குயில்கள் உல் லாசமாக அமர்ந்து கீதம் இசைத்தாலும் அடிக்கடி கீழே பார்த்து அதன் கீழடி வேருக்கு நன்றி சொல்லிக் கொண்டிருக் கின்றன. இதுதான் இயற்கையின் சமுதாய விதி. வளர்மதி இளைஞர்கள் இன்று முதிர் இளைஞர்கள் ஆனாலும், மனதால் கட்டிளமைப்பருவம் கள வாடப்படாமல் கட்டிக் காப்பவர்கள். அவர்கள் பல நாடுகளில் உள்ளனர் பல தொழில்களில் உள்ளனர் பல்வகை சுய பொறுப்புக்களைச் சுமக்கின்றனர். ஆனாலும் மீண்டும் உள்ளம் சஞ்சி கையை மின்னியல் நூலாக உயிர்ப் பிக்க உள்ளுகின்றனர். "உள்ளுவதெல் லாம் உயர்வுள்ளல்" என்கிறோமே இது அதுதான்.

இளைஞர்களது கட்டுப்பாடில்லாத புனைவாற்றலை வளர்ப்பதிலும், ஆழ் மன குதூகலத்துக்கு சிறகுகள் கட்டு வதி லும் உள்ளம் துணைநின்றிருக்கின்றது. கவிதை, கட்டுரை, சிறுகதை, சமுதாயச் செய்திகள் என்ற பல்வேறு படைப்புகள் உள்ளத்தில் குடிகொண்டிருந்தன.

வளர்மதியுடனான எனது தொடர்பு 1973லிருந்து ஐந்து தசாப்தங்கள் கடந் தது. வளர்மதி தவழ்ந்ததையும் நிமிர்ந் ததையும் பக்கத்தில் நின்று பார்த்து மகிழ்ந்தவன். உள்ளம் சஞ்சிகையில் எனது உணர்வுகளையும் அறவையும் பதிவு செய்தவன். அந்த நினைவுகள் வசந்தகால தென்றலாய் என் இதயத்தை வருடுகின்றன . மகிழ்வூட்டுகின்றன.

உள்ளம் மீண்டும் உயிர்ப்புப் பெற வேண்டும். நவீன வடிவம் பெற வேண் டும். உலகம் முழுவதும் சிதறி வாழும் வளர்மதிப் பறவைகள் ஒன்று கூடும் ஆலமரமாய் செழித்து ஓங்க வேண்டும். கிளை பரப்பி புகழ் பெற வேண்டும். பழையதை மறவாது, புதுமைகளுடன் கைகோர்த்து உள்ளம் பூரிக்க வேண் டும். இந்த வளர்மதிப்பூ சர்வதேச மின் னியல் இதழியல் பரப்பில் தனிப்பெரு மையுடன் உயர வேண்டும். உலகமய மாதலின் புதிய முளைகளும் நாற்றுக் களும் இதில் பதியம் போட வேண்டும். இதற்கு என் நல்லாசிகள். ■

**அல்லால்மற் றாங்கே அரிது**

# விசும்பின் துளிகள்



**செ.செல்வராசா (நாதன்)**

**(போஷகர், முன்னாள் தலைவர், கழகத்தின் ஸ்தாபகர்களில் ஒருவர்)**

1963 ம் ஆண்டில் தொடங்கப்பட்ட வளர்மதி விளையாட்டுக் கழகம் பின்னர் 1975 ஆவணியில் கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகமும் சனசமூக நிலையமும் என விரிவடைந்தது. அது, கலை, விளையாட்டு, கல்வி, சுகாதார மேம்பாட்டு முயற்சிகளை முன்னெடுத்து அதன் ஊடாக சமூக அபிவிருத்தியை ஏற்படுத்துவதையே அதன் நோக்கமாகவும் செயலாகவும் கொண்டிருந்தது. பின்னர் 1976ல் சின்னத்துரை ஜெயக்குமார்(தற்போது அவுஸ்ரேலியா) தலைவராகவும், சண்முகநாதன் விஜயகுமார் செயலாளராகவும் இருந்தபோது எமது கல்விக்குழு சிறுவர் சஞ்சிகை ஒன்றை கையெழுத்துப் பிரதியாக கொண்டு வருவது என்று தீர்மானித்து அம்முடிவை பொதுக்குழுவில் முன்வைத்தது. பொதுக் குழு அதனை ஏற்றுக்கொண்டு, ஒரு பெயரை அதற்கு இடுவது என்று முன்வந்தபோது, பல பெயர்கள் முன்மொழியப்பட்டாலும் நிறைவாக "உள்ளம்" என்று பெயர் சூட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

அழகிய உறுப்பெழுத்தைக் கொண்டிருந்த எங்கள் அங்கத்தவர்களின் ஆக்கபூர்வமான முயற்சியால் "உள்ளம்" கையெழுத்துப் பிரதி சிறப்பாக நான்கு பக்கங்களில் அழகாகவும் பிரகாசமாகவும் வெளிவரத் தொடங்கியது. அதனைக் கையெழுத்துப் பிரதிகளாகவே பலதை ஆக்கி அருகில் இருந்த பல சனசமூக நிலையங்களிற்கும் விநியோகித்து வந்தோம். சில ஆண்டுகளின் பின்னர் 1989 - 90 களில் அது அச்சுப் பிரதியாக வெளிவரத் தொடங்கி இலங்கையின் எல்லாப் பகுதிகளிற்கும் ஏன் மூலை முடுக்கெங்கும் ஆயிரக் கணக்கான உள்ளங்களை "உள்ளம்" தொட்டது. எல்லாப் பகுதிகளில் இருந்து கடிதங்கள் வந்து குவிந்தன.

கிட்டத்தட்ட 13 இதழ்கள் வரை தொடர்ச்சியாக வெளிவந்த "உள்ளம்" நாட்டுச் சூழ்நிலைகளால் தடைப்பட்டு, பின்னர் 2001 ஆண்டு மீண்டும் இரு இதழ்கள் மட்டும் வெளிவந்தது. பின்னர் மிகக் கடுமையான நெருக்குதலுக்குள் நாடு தள்ளப்பட "உள்ளம்" வெளிவருவது தடைப்பட்டது.

இப்போது புலம்பெயர்நாடுகளிலும் உள்நாட்டிலும் வாழுகின்ற 'வளர்மதி' அங்கத்தவர்களினதும் "உள்ளம்" அபிமானிகளினதும் பெரும் முயற்சியால் "உள்ளம்" மின்நூல் வெளிவருவது மிகப்பெரும் உவகையை ஏற்படுத்துகிறது. "உள்ளம்" வாசித்தவர்களை நேசிக்கவும் யோசிக்கவும் வைத்த சஞ்சிகை என்பதால், தற்போதைய இணையவழிப் புதுவரவும் மிகுந்த நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்துகிறது.

"உள்ளம்" மென்மேலும் உயர்வடைந்து வளர்மதியாக வளர்ந்து வளம் சேர்த்து பூமித்தாய் உள்ளவரை நிலைத்திருக்க வாழ்த்துகிறேன்.

**வாழ்க "வளர்மதி" வாழ்க "உள்ளம்" "வையகம்" வாழ்க வாழ்கவே!**

■

# விசும்பின் துளிகள்



எழுத்தாளர்

**கே.எஸ்.சுதாகர்**

**ஒரு தலைமுறை கடந்த கையளிப்பு**

உள்ளம் சஞ்சிகை 1989 ஆம் ஆண்டிலிருந்து, கொக்குவில் வளர்மதி சனசமூக நிலைய வெளியீடாக வெளிவந்தது. அப்போது நான் பல்கலைக்கழகப் படிப்பை முடித்திருந்தேன். நண்பர் தேவசிகாமணி மூலம், உள்ளம் ஆசிரியர் குழுவினருடன் தொடர்பு கிட்டியது. பல புகழ் வாய்ந்த எழுத்தாளர்களுடன், எனது ஆரம்ப காலப் படைப்புகளையும் பிரசுரித்து எனக்கு ஊக்கம் தந்து மகிழ்ச்சியில் ஆழ்த்தியது உள்ளம். நாட்டுச் சூழ்நிலைகளால் சஞ்சிகை பின்னர் நின்று போயிற்று. இச் சஞ்சிகையை மீளவும் கொண்டு வரும் முயற்சியில் வளர்மதி அங்கத்தவர்கள் ஈடுபட்டு இருப்பதை அறிந்து மிகவும் மனம் மகிழ்கின்றேன். ஒரு தலைமுறை கடந்த கையளிப்பாக நான் இதைப் பார்க்கின்றேன். உள்ளம் மலர எனது வாழ்த்துக்கள்.


**உள்ளத்தில் வெளிச்சம் பாய்ச்சிய 'உள்ளம்'**

80களின் ஆரம்பத்தில் நான் வாசிப் புத்தளத்தில் இருந்தபோது, அதன் நிமித்தம் ஏற்பட்ட மன உந்துதலின் விளைவாக ஏற்பட்ட எழுத்தே எனது 'ஒரு பிடி அரிசி' எனும் சிறுகதையாகும். இச்சிறுகதையை அப்போது கொக்குவில் வளர்மதி சனசமூக நிலையத்தினரால் வெளியிடப்பட்டுக் கொண்டிருந்த 'உள்ளம்' எனும் கலை இலக்கிய மாத சஞ்சிகை எனைப் பற்றிய ஒரு சிறு குறிப்போடு, பிரசுரித்து, என்னை இலக்கிய உலகின் வாசகர்களிடையே கொண்டுபோய்ச் சேர்த்தது.

அதன்பின், எனது சில குறுங்கவிதைகளுக்கும் களம் அமைத்துத் தந்தோடு, 'உள்ளம்' இன, மத பேதம் பாராது பல படைப்பாளிகளையும் அரவணைத்தபடியே அவர்களின் படைப்புகளின் தரத்தையும் முதற் கண் நோக்கமாகக் கொண்டு, வெளிவந்தவண்ணம் இருந்தது.

நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகளின் நிமித்தம், ஏனைய இலக்கிய சஞ்சிகைகள் போலவே 'உள்ளம்' சஞ்சிகையும் தனது வருகையையும் நிறுத்தியிருந்தது. தற்போது புலம் பெயர் தேசங்களில் வசிக்கும் அதன் ஆசிரியர் குழுவினர், மீண்டும் ஒன்றிணைந்து, 'உள்ளம்' இலக்கிய இதழை ஓர் இணைய இலக்கிய இதழாக வெளிக்கொணர்வதையிட்டு, எனது உள்ளமும் உவகை கொள்கிறது.

இன்று இலக்கிய உலகில் நான் அறியப்பட்டு நிற்பதற்கு, 'உள்ளம்' எனும் இலக்கிய சஞ்சிகையே முதற் காரணம்... என்பது வெறும் புனைவல்ல. இன்றிலிருந்து இணைய இலக்கிய இதழாக வெளிவரும் 'உள்ளம்' சஞ்சிகை, தொடர்ந்தும் தங்கு தடையின்றி ஆரோக்கியமான கருத்துகளோடும் படைப்புகளோடும் வெளிவருமெனும் விருப்போடும் அதன் வருகையை வாழ்த்தி வரவேற்கிறேன்.



எழுத்தாளர்

**அலெக்ஸ் பரந்தாமன்**
**புதுக்குடியிருப்பு**

**உள்ளத்தின் மீள் வருகை மகிழ்ச்சி தருகிறது**



**கவிஞர்**
**கே.எஸ். கருணாகரன்**

"உள்ளம்" மீள்வருகையாகிறது என்ற சேதி மகிழ்ச்சியளிக்கிறது. ஏறக்குறைய முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு, இணைய இதழாகவும், அச்சுப் பிரதியாகவும் வருகிறது "உள்ளம்". இது காலத்தின் விந்தையா கால வளர்ச்சியா என்று தெரியவில்லை. எதுவாக இருந்தாலும் மீள் வருகை யென்பது மகிழ்ச்சியே. இந்த மீள் வருகை, இடையிட்ட கால வெளியை நிரப்புமா அல்லது புதிய தளமொன்றை உருவாக்குமா என்ற எதிர்பார்க்கை கேள்வியாக எழுகிறது. நிச்சயமாகப் புதிய தளமொன்றை உருவாக்க வேண்டும்.

அன்று இளைஞர்களாக இருந்தோரால் வெளியிடப்பட்ட "உள்ளம்" இப்பொழுது அதே தரப்பினரால் மீள்வருகை – மீள் எழுச்சி அடைகிறது. இது கவனத்திற் குரிய ஒன்று. ஏனென்றால் முப்பது ஆண்டுகளுக்குப் பிறகும் இவர்களு டைய உள்ளத்தில் அந்தக் கொழுந்து தளிராகவே உள்ளது. அதுவே இந்தச் சாத்தியமாகும். இளமையின் கனல் ஒருபோதும் அணைவதில்லை. உள் ளத்தின் அடியாழத்தில் அது சுடர்ந்து கொண்டோ கனன்று கொண்டோ இருக்கும் என்பதற்கு இதுவும் ஒரு சான்று.

கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு "புதுசு" இதழ்களின் தொகுப்பை "புதுசுகள்" என்று சொல்லப்படும் "புதுசு இதழாளர்கள்" தொகுத்து முழுதாக வெளியிட்டனர். அது ஒரு மாறாத தாகத்தின் வெளிப்பாடு. அது ஒரு வகை என்றால், இங்கே "உள்ளம்" அணியி னர் தங்களுடைய இதழை இணை யத்திலும் , அச்சிலும் கொண்டு வருகி றார்கள். இதுவும் அத்தகைய தீராத தாகத்தின் வெளிப்பாடே.

1980 களின் பிற்பகுதியில் கொக்குவில் வளர்மதி சனசமூக நிலையத்தினால் "உள்ளம்" வெளியிடப்பட்டது. அது சனசமூக நிலையங்கள் செயற்பாட்டுத் தளத்தில் இயங்கிய காலம். அதைப் போல இலக்கிய, அரசியல் இதழ்கள் அதிகமாக வந்த காலமும் அது. இதில் வளர்மதி சனசமூக நிலையம் இலக்கிய இதழாக "உள்ளத்தை" வெளியிட்டது. இது சற்று வித்தியாசமானது. நான் அறிந்த அளவில் இவ்வாறு சனசமூக நிலையம் ஒன்று இலக்கிய இதழை வெளியிட்டதென்பது அபூர்வமான நிகழ்ச்சியே.

அன்றைய சூழலானது அரசியல் நெருக்கடி நிறைந்தது. அதற்குள் இதழொன்றை வெளியிடுவது மிகச் சவாலான விஷயம். அதுவும் சனசமூக நிலையமாக இருந்து கொண்டு இதழை வெளியிடுவது மிகச் சிக்கலா னது. என்னமாதிரியான நிலைப் பாட்டை எடுப்பது என்பது பெரிய சோதனை. அதை விட இளைஞர்க ளால் ஒரு இதழ் வெளியிடப்படுகிறது என்றால் ஆயுதமும் அதிகாரமுமாக நிற்கும் தரப்புகளின் கண்காணிப்புக் குள்ளாக வேண்டும். அவை தங்களு டைய நுணுக்குக் காட்டிகளினூடாகக் கூர்மையாக ஒவ்வொன்றையும் கண்காணித்துக்கொண்டேயிருந்தன.

இதையெல்லாம் எதிர்கொண்டவாறே "உள்ளம்" வெளிவந்தது – வெளியிடப் பட்டது.

உள்ளத்தில் நானும் எழுதினேன். அது எப்படி நடந்தது என்று சரியாக இன்று நினைவில்லை. அந்தளவுக்கு அன்று அரசியல் நெருக்கடிகளால் அங்கு மிங்குமாக அலைந்து கொண்டிருந் தேன். அதற்குள்ளும் உள்ளத்தில் சில கவிதைகளையும் கடிதங்களையும் எழுதினேன். இன்று அந்த இதழ்கள் ஒன்றும் என்னிடமில்லை. யுத்தம் அதனுடைய தீராப் பசியினால் எல்லாச் சேகரிப்புகளையும் அழித்து விட்டது. என்னைப் போலிருந்த பலருக்கு உள்ளம் நல்லதொரு உறவாக இருந் தது.

அன்றிருந்த அவ்வாறான நெருக்கடிச் சூழலிலும் எங்காவது தேடி உள்ளத் தைப் பெற்று விடுவேன். அது தந்த மகிழ்ச்சி பெரிது. அத்தகைய ஒரு மகிழ்ச்சியே இப்பொழுதும் ஏற்படுகிறது. சரியாகச் சொன்னால் இப்பொழுது அதை விட இரட்டிப்பு மகிழ்ச்சி ஏற்படு கிறது. காரணம், அதே அணியினரால், அதே தாகத்தோடு அதே இதழ் மீள வருகிறது. அதில் நானும் எழுதவும் சேர்ந்து பயணிக்கவும் முடிந்திருக் கின்றது என்பதே.

ஆனால் ஒரு மெல்லிய துயரம் இந்தக் கணத்தில் மேலேழுந்து வருகிறது. ஏனென்றால், உள்ளத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக உழைத்த நண்பர் இணுவையூர் திருச்செந்திநாதன். உள்ளத்துடன் அவர் மூலமே தொடர்பு களிருந்தன. இப்பொழுது அவரில்லை. அவரை இழந்து விட்டோம். அவர் இருந்திருந்தால் நிச்சயமாக இப் பொழுதும் அவர் அதில் பங்கேற்றிருப் பார். "உள்ளம்" அணியினர் அந்தள வுக்கு விரிந்த சிந்தனையோடும் பரந்த மனதோடும் உள்ளனர். உள்ளத்தில் இணைந்திருந்த அத்தனைபேரையும் தேடிக் கண்டு பிடித்து இணைத்து வருகின்றனர். இது அவர்களுடைய உயர்ந்த பண்புடன் உள்ளத்தின் தொடர்ச்சியை முறையாகப் பேண வேண்டும் என்ற சிரத்தையையும் காட்டுகிறது.

எல்லாமே சிறப்பாக உள்ளன. மகிழ்ச்சி. நிறைகிறது "உள்ளம்". வாழ்த்து.

# உள்நின்று ஒளிரும் சக்தி



செயல் திற
அரங்க இயக்

# குழந்தைகளின் ஆளுமை வளர்ச்சியில் அரங்கு



மனிதர்களுக்கிடையிலான உறவு புதிய பரிமாணங்களை உருவாக்கத் தொடங்கிய ஒரு கட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அதற்கேற்ப கல்வி மாற்றமடைந்திருக்கிறது. பாரம்பரிய கல்விக்கொள்கைகள் கைவிடப்படுவதும், ஒரு வகையில் இலங்கை போன்ற நாடுகளில் நீண்ட கல்விப்பாரம் பரியங்கள் வழியாகக் கிடைக்கப்பெற்ற பண்பாட்டுப் பின்புலம் இல்லாது செய்யப்பட்டு புதிய பண்பாட்டுக்கான கல்வி திட்டமி டப்படுகின்றது.

இது ஒரு வகையில் நாம் வாழும் மண்ணில் வேரூன்றாது இருக்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்தப்படுவதையும் இனங்காட்டுகிறதெனலாம். பொதுவாக இன்றைய கல்விக் கொள்கைகள் அறிவை வழங்குவதை விட வணிகச்சந்தையில் ஒரு வேலையைப் பெற்றுக்கொள்வதற்கும் அதனைப் பாதுகாப்பதற்குமான செயல் பொறிமுறையைக் கொண்டமைந்திருக்கிறது எனலாம். இங்கு சமூக அறிவும் உணர்ச்சியும் இல்லாத கல்விக் கொள்கைக்குள் செல்லும் துர்பாக்கியம் இருப்பதை உணரலாம். அதிக ஊதியம் பெறும் வேலைவாய்ப்புகளைத் தேட வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்படுவதால், அதுவே நியதியென்றாகிறது. இதனால்தான் கணினி அறிவியல் போன்ற அறிவியல் கல்வி அதிக முக்கியத்துவம் பெறுகிறது. தற்காலிக வேலைவாய்ப்பு புரட்சியின் பெரும் ஓட்டத்தில் நிதி ஆதாயத்தில் மட்டுமே இன்று கவனம் செலுத்தப்படுகின்றது. ஆனால் இந்த நிலைமை மனித வாழ்க்கையின் பல அடிப்படைகளை இழக்கவைக்கிறது என்பதையும் உணர முடிகிறது.

ஒருமனிதனின் உடல் மற்றும் மனநிலை குழந்தைப்பராயத்திலிருந்து மெல்ல வளர்ச்சியை அடைகிறது.

இந்த இரண்டு பகுதிகளின் வளர்ச்சியின் மூலம் அவன் அறிவியலையும் ஆன்மீகத்தையும் சமூக அவதானிப்புகள் மூலம் பெறுகிறான். இந்தக் கொண்டும் கொடுத்துமான அம் சங்களின் வளர்ச்சி ஒருவரின் வாழ்க்கையில் முக்கியமானதாகும். இன்றைய கல்வி முறையில் இத்தகைய வளர்ச்சிக்கு வாய்ப்புக்கள் குறைவெனலாம். அதாவது நாம் வாழும் தானியங்கி யுகத்தில் மனித மனங்கள் நவீன இயந்திரங்களில் நாட்டம் கொண்டுள்ளன, இதனால், மனித மனம் இயந்திரங்களை ஒத்திருக்கிறது. விஞ்ஞானம் இயந்திரங்கள் மூலம் மனிதத் தேவைகளை துரிதகதியில் நிறைவேற்றினாலும், இந்த பிரபஞ்சத்தில் பச்சாதாபத்தை, ஈடுபாட்டை, ஊடாட்டத்தை அது நியாயப்படுத்தத் தவறிவிடுகிறது.

பிரபஞ்சத்தில் உள்ள மில்லியன் கணக்கான உயிரினங்களில், மனிதர்களுக்கு மட்டுமே சிரிக்கும், கவலைப்படும் மற்றும் சிந்திக்கும் திறன் உள்ளது. இந்த எல்லா எண்ணங்களுக்கும் ஆதாரமாக இருப்பது மனம், இது உணர்ச்சியுடன் தொடர்புடையது, சிக்கலானது. ஒரு மனிதனுக்கு அறிவியலைத் தாண்டிய 'உணர்ச்சி திருப்தி முக்கியத்துவம் பெறுகிறது. இந்த அறிவியல் முன்னேற்றங்கள் அதன் பின்னே செல்வது மனம் சார்ந்த எதிரிடை விளைவுகளைத் தருகின்றது. எப்படி மேல்நோக்கி

**அரங்கு உலகம் முழுவதும் ஆளுமை வளர்ச்சிக்கு மிகவும் பயனுள்ள கருவிகளில் ஒன்றாக அங்கீகரிக்கப் பட்டுள்ளது.**



வீசப்பட்ட ஒரு கல், ஈர்ப்பு விசையால் கீழே வருகின்றதோ அதேபோல அறிவியல் வளர்ச்சியின் பின்னால் ஓடுகின்றபோது மனம் சார்ந்த போக்குகளும் செல்வாக்குச் செலுத்துகின்றன. இதனால் மனதோடு பணியாற்றும் துறைகளையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். வெளிப் புற சாதனைகள் மூலம் மகிழ்ச்சியைத் தேடும் போது, நாம் மனம் தொடர்பான உள் நிலைகளை அடிக்கடி மறந்துவிடுகின்றோம். இங்கு மனிதனின் திருப்தி என்றவொரு விடயம் உள்ளது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இது உள் ஒளி சார்ந்தது. இது தான் வாழ்க்கையில் எல்லா பிரச்சனைகளையும் சாதனைகளையும் உருவாக்குகிறது.

ஆகவே இந்த மனத்திருப்திக்கான ஒரு வழியாக சொல்லப்படுவது பொருத்தமான கலை வடிவங்களுடன் மனதைக் கலப்பது என்பதாகும். இது சுய திருப்திக்கு வழி வகுக்கும். இந்த நவீன காலத்தில், வெளிப்புற தேவைகள் தொடர்ந்தும் மனதில் அதிருப்தியுடன் ஓடிக்கொண்டிருக்கும் போது, மனிதன் அடிக்கடி தனது மனத்திருப்திக்கான வழிகளைத் தேடிக்கொண்டிருக்கிறான். நுகர்விற்கு எல்லாவற்றையும் பெற்றுக்கொண்டாலும், அவர் எதையாவது சாதிக்கவில்லை என முழுமையடையாதவராக உணர்கிறான், கவலையில் தன்னை நிரப்புகிறான், எரிச்சலடைகிறான். இதனால் பிறழ்வான செயல்களில் ஈடுபடுகின்றான். அதாவது இயற்கையின் இயல்புக்கு எதிராகச் செல்கிறான். ஆகவே, மனிதர்களை இயற்கையின் ஒரு பகுதியாகத் தக்க வைத்துக் கொள்வதற்கு கலை வடிவங்கள் உதவுகின்றன, உதவ முடியும் எனலாம். குறிப்பாக நாடக அரங்கு இதற்கு சிறந்ததொரு துறையாக விளங்குகின்றது.

**பொருத்தமான கலை வடிவங்களுடன் தொடர்பு கொள்ளும்போது, அவை புலன்களின் கதவுகள் வழியாக நுழைந்து, ஒரு மனோதத்துவ நிலையை அடைய உதவுகின்றன, ஒரு உன்னத நிலையை உருவாக்குகின்றன.**

வாழ்க்கை தொடர்பான ஒவ்வொரு செயலும் ஒரு கலை வடிவமாக கொள்ளப்படுகின்றது. இந்த கலைவடிவங்கள் பிரயோக கலைகள் அல்லது பயன்படு கலைகள் என்றும் நுண்கலைகள் என்றும் வகுக்கப்படுகின்றன. இதில் 64 கலை வடிவங்கள் பற்றிக் குறிப்பிடப் படுகின்றன. நுண்கலைகள் கற்பனை உணர்ச்சிகளை முடிவிலி நிலைக்கு எடுத்துச் செல்கின்றன, ஏன் அதற்கு அப்பாலும் கொண்டு செல்கின்றன.

வாழ்க்கையின் வெளிப்புற காரணிகள் ஒரு கலை அணுகுமுறையுடன் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டாலும், ஆழமாக நோக்குகின்ற போது மனத் தேவைகளை நிறைவேற்ற கலைகள் உதவுகின்றன.

வாழ்க்கையில் எல்லாமே கலை வடிவம்தான் அதில் ஒரு அழகிருக்கிறது என்பாரும் உளர். அனுபவத் திருப்தி அழகை கொடுக்கிறது. அனுபவம் என்பது உணர்வுகள் மற்றும் அதே நேரத்தில் கவனிப்பு ஆகியவற்றின் கலவையாகும். இந்த அனுபவங்கள் பல்வேறு மன நிலைகளில் ஏற்படுகின்றன.

பொருத்தமான கலை வடிவங்களுடன் தொடர்பு கொள்ளும்போது, அவை புலன்களின் கதவுகள் வழியாக நுழைந்து, ஒரு மனோதத்துவ நிலையை அடைய உதவுகின்றன, ஒரு உன்னத நிலையை உருவாக்குகின்றன. இவ்வாறு, சிறந்த கலை வடிவங்களைப் பார்க்கும்போது அதி உன்னத நிலை ஏற்படும். இது உணர்வுகள் வழியாக வெறும் இன்பத்தை அடைவதென்பதல்ல. மாறாக, சிறந்த கலை வடிவங்கள் மூலம் தூய்மையான மற்றும் அர்த்தமுள்ள அனுபவங்கள் கிடைக்கின்றன. இதுவே எப்போதும் கலையின் இலக்காகவும் இருக்க முடியும். அரங்கு அந்தப்பணியை சிறப்




தேவநாயகம் தேவானந்த்

பாகச் செய்ய வல்லது,அரங்கு ஒலி காட்சி பெறுமானங்களைக் கொண் டது. அதன் வழி அந்தப் பெறுமானங் கள் மூலம் தூய்மையான மற்றும் அர்த்தமுள்ள அனுபவங்களை அனு பவிக்க முடியும். இந்த மகத்தான அனுபவத்தை படைப்பாற்றலுள்ள கலைஞன் வழங்குவான். அது பலரின் ஆளுமையை வளர்த்தெடுக் கும். அரங்கு ஆளுமை வளர்ச்சிக் கான ஒரு சிறந்த கருவி எனலாம்.

ஒருவர் பிறந்ததிலிருந்து அவரது ஆளுமையை வளர்க்கத் தொடங்குகி றார். குழந்தை ஒரு மனிதனாக வளர்ந்து, அவனது உடலும் மனமும் வாழ்வின் தன்மையை அடையாளம் காணத் தொடங்கியதும் அவன் ஆளுமையை வளர்க்கத் தொடங் குகின்றான். அவ்வாறு நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமுமாக ஆளுமை வளர்கிறது அதில் தாழ்வு மனப்பாங்கும் அதன்வழி எழும் உணர்வும் நுண்ணியதாகக் கவனிக் கப்பட்டு சிறப்பாக கையாளப்படவேண் டும். அந்தப் பணியை அரங்கு சிறப்பா கச் செய்ய முடியும். சிறுவயதில் எழும் இந்தப் பிரச்சினைகள் கவனிக்கப் படாத போது பின்னர் முதிர்ச்சியடையும் போது கையாள முடியாத வையாகின் றன.

அரங்கு உலகம் முழுவதும் ஆளுமை வளர்ச்சிக்கு மிகவும் பயனுள்ள கருவி களில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட் டுள்ளது. இது ஒருவர் மேடையின் நடிகராக இருப்பதால் மட்டும் நடை பெறுவதல்ல, அரங்கில் ஈடுபடும் ஒருவர் பல்வேறு பயிற்சி தொகுதிகளில் பங்கு கொள்ளும் போது பலவேறு திறன்களையும் மேம்படுத்த முடிகிறது. தன்னிச்சையான உணர்வு, சுய உணர்தல், நம்பிக்கை, உடல்மொழி வெளிப்பாடு, பேச்சு திறன், குழுச் செயற்பாடு, ஒழுக்கம், நேர மேலா ண்மை, பொறுமை, பச்சாபதாபம், இரக்கம், உந்துதல் போன்ற பலவற்றில் பயிற்சி கிடைக் கிறது.

அரங்கப்பயிற்சி பல்வேறு கோட்பாடு கள் சார்ந்தது. அவை ஒவ்வொன்றும் அதற்கான அசைவியக்கம், பணிகள், பயிற்சிகள் போன்றவற்றின் மூலம் செயல்படுகின்றன. இந்தப் பயிற்சித் தொகுதி தகுந்த ஒருவரால் மேற்கொள் ளப்பட்டால் சிறந்த விளைவுகளைப் பெற முடியும். அரங்கப் பட்டறைகளின் முடிவுகள் மேம்பட்ட ஆளுமையை வழங்குகின்றன. பயிற்சியில் பங்கு கொண்ட ஒருவர் தனது பலம் மற்றும் பலவீனத்தை நன்கு அறிந்தவராக, சிறந்த நடிகராகவும், எல்லாவற்றிற்கும் மேலாக, சிறந்த மனிதர்களாகவும்



> “Acting is not about being someone different. It’s finding the similarity in what is apparently different, then finding myself in there.” – Meryl Streep
>
> *நடிப்பு என்பது வேறொருவராக மாறுவது பற்றியதல்ல. வேறொன்றாகப் புலப்படும் ஒன்றுடன் எழும் ஒப்புமையைக் கண்டறிந்து, அதில் என்னைக் கண்டறிவதாகும்.*

மிளிர்வார்கள். அரங்கப் பயிற்சி படைப்பாற்றல், தன்னிச்சை உணர்வு, சுய உணர்தல், நம்பிக்கை, விழிப்பு ணர்வு மற்றும் பலவற்றை உள்ளடக் குகிறது.

ஆகவே குழந்தைப் பருவத்திலிருந்து அரங்கில் ஈடுபடுத்துவது நல்ல விளை வைத்தரும். குழந்தைகளைக் கையா ளும் போது மிகவும் கவனம் தேவை.



அவர்களிடம் எதைச் சொன்னாலும் அது மேலும் பொறுப்பாக்குகிறது. குழந்தைகளின் சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ள வேண்டும், அறி வைப் புதுப்பிக்க வேண்டும் மற்றும் குழந்தைகளுடன் பழகும்போது மிக வும் பொறுமையாக இருக்கவேண் டும், மிகவும் நடுநிலை அணுகுமுறை தேவைப்படுகிறது. இந்த அணுகு முறை குழந்தைகளுடன் சூழ்ச்சி, வன் முறை மற்றும் தீமைகளால் நிரப்பப் பட்ட நாடகங்களைத் தயாரிப்பதை நோக்கமாகக் கொண்டிருப்பதில்லை என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இது அவர்களின் மென்மையான மனதிற்குப் பொருந் தாது. குழந்தைகளுடன் பணிபுரிவது மிகவும் மகத்துவமானது குழந்தை களுக்காக உண்மையான அரங்கை செய்யும் பெரும்பாலானவர் அவர்க ளுக்கேற்ற உள்ளடக்கத்தைக் கொண்ட சுய படைப்புக்களை உருவாக்குகி றார்கள் ஏலவே இருப்பவை போதா மைகளோடு காணப்படுகின்றன என்பதை இங்கு நோக்க வேண்டும்.


அரங்கு சிறந்த நடிகர்களை உரு வாக்கு வது மட்டுமல்லாமல், அவர்க ளின் ஆளுமையின் சாத்தியக்கூறுகள் மற்றும் அதன் எல்லைகள் பற்றி நன்கு அறிந்த, ஒரு காரியத்தில் அர்ப்பணிப் புடன் செயல்படும் சிறந்த மனிதர்களை உருவாக்குகிறது. குழந்தை பருவத்தில் அரங்கில் ஈடுபட்ட பலரை இன்று அவர் கள் பெரியவர்களாக வளர்ந்தவர்க ளாகக் காணுகின்ற போது, அவர்களை சிறந்த நடிகர்களாகக் காணவில்லை மாறாக அவர்கள் அர்ப்பணிப்புள்ள மருத்துவர்கள், உணர்ச்சி மிக்க ஆசிரியர் கள், சமூக உணர்திற னுடன் தொழில் முனைவோர், ஆளுமை மிக்க பல்துறை சார்ந்தோர், அரசு ஊழி யர்கள், கற்பனை ஆற்றலுள்ள பொறி யியலாளர்கள், எழுத்தாளர்கள் மற்றும் பலரை நான் காண்கிறேன். எமது பிரதேசத்தில் நடிப்பு தொழிலாக இல்லாத போது அரங்கப்பயிற்சி நடி கர்களை உருவாக்கியது என்று குறிப் பிடுவது பொருந்தாது. ஆனால் ஆளு மைமிக்க சமூக உணர்திறன் மிக்க வர்களை உருவாக்கியிருக்கின்றது என்பேன்.

இதனால் அரங்கின் முக்கியத்துவத்தை யும் பயன்பாட்டையும் கருத்தில் கொண்டு, குழந்தைகளுடன் அரங்கை செய்வது அவர்களின் ஆளுமைத் திறனில் சாதகமான விளைவைத் தரும்.

மக்கள் மற்றும் நிறுவனங்கள் இதில் கவனம்செலுத்தவேண்டும். ஆனால் இதற்கு உண்மையான பயிற்சியா ளர்கள் தேவை. குழந்தைகளுக்கான உண்மையான பயிற்சியாளர்களின் பற்றாக்குறை தொடர்ந்து எமது சமூ கத்தில் இருக்கிறது என்ற உண்மை யையும் புரிந்து கொண்டாக வேண் டும். பாடசாலைகள் தமது ஆசிரியர் ஒருவரைப்பயிற்றுவித்து மாணவர் களுடன் அரங்கைச் செய்வது பொருத்தமானது. பொதுவாக எமது பாடசாலைகளில் அவர்களின் வரு டாந்த தின விழாவில் ஒரு பொருளாக மட்டுமே நாடக அரங்கு நோக்கப்படு கின்றது இது மாற வேண்டும். தொடர்ந்தேர்ச்சியான செயற்பாட்டுக் கான வெளி உருவாக்கப்பட வேண் டும்.

குழந்தைகளின் ஒட்டுமொத்த ஆளு மைகளை வடிவமைப்பதிலும், அவர் களில் எண்ணற்ற உணர்வுகளை வளர்ப்பதிலும், ஆளுமை வளர்ச்சி யின் பெரும்பங் காற்றும் அரங்கை முழு மனதுடன் அதன் மகிமையுடன் பயன்படுத்தவேண்டும். அதில் விருப் புக் கொள்ளவேண்டும். குழந்தைக ளுடன் அரங்கைச் செய்ய விரும்புப வர்கள் குழந்தைகளுடன் 'நாடகம்' தயாரிப்பது என்பதை முன்னிலைப்ப டுத்தாது, பல நன்மை தரும் அரங்கின் பெரும் பயனை அதன் வகிபங்கை முதலில் நோக்க வேண்டும். ■


Maruthi
Money Exchange (PVT) LTD
(for all your money exchange needs)
MoneyGram.
money transfer
WESTERN UNION
MONEY TRANSFER
Ria
MONEY TRANSFER
விரைவான
சேவைக்கு
நம்பகரமான
ஓர் ஸ்தாபனம்
மாருதி
துரித பணமாற்றுச் சேவை
அனைத்து
விதமான
பணப் பரிவர்த்தனை
சேவைகளுக்கும்
இல.285 காலி வீதி ,
வெள்ளவத்தை
011 236 2086
இல.390 ஆஸ்பத்திரி வீதி ,
யாழ்ப்பாணம்
021 221 4433
076 284 4443



தாட்ச




# ஓய்வு

புள்ளி இறகொன்று
முற்றத்தில் வீழ்ந்து கிடந்தது
வானெல்லாம் அளந்த சிறகு
ஆயுள் கணக்கை எங்கு பார்க்க?

அந்தப் புள்ளிகளில் உறைந்திருக்கும்
அள்ள முடியாத வெயிலும்
அளக்க முடியாத குளிரின் திரவமும்

மலைகளின் உயரத்தை அளந்த சிறகு
பள்ளத்தாக்குகளின்
ஆழத்தையும் பார்த்து வந்திருக்கும்
சமவெளிப் பரப்புகளெங்கும் துழாவி
நாணல் புதர்களுக்குள்
நங்கூரமிட்டிருக்கும்
கடல் நீளங்களைக் கடந்திருக்கும்
உயிருக்கான உத்தரவாதத்தைக்
காலகாலமாய்
அள்ளிக் கொடுத்திருக்கும்
மாலை மயக்கில் மரம் மீதிருந்து
இலைகளைக் கொஞ்சிக் கொஞ்சி
விழி செருகிக் கிளர்ந்திருக்கும்

இப்போது முற்றத்துக் குறுமணலில்
ஓய்ந்து கிடக்கிறது,
சாய்மணையில் படுத்திருக்கும்
தாத்தாவைப் போல



சாயணி

# மணியோசை



வானத்திலிருந்து காற்றின் குரல் பற்றி
அந்த நெடுமணியின் ஓசையை
யாரோ இழுத்து வந்திருந்தார்கள்
முருகன் கோவிலிலிருந்து,
ஏதோ ஓர் தேவாலயத்திலிருந்து
எதுவாகவும் இருக்கட்டும்
தேவனுக்கோ, முருகனுக்கோ
கேட்கட்டுமென்று
யாரோ பிடித்திழுத்த
அந்தக் காண்டாமணியின் ஒலியைக்
காற்று இழுத்து வந்து
என் முற்றத்தில்
கால் கடுக்க நிற்க வைத்தது
எந்தக் கன்றுக்குட்டி பிடித்திழுத்த
மணியோவெனப் பதைத்து
வாசலுக்கு வருகிறேன்
வரும் வழியில் வாகனத்தில் முட்டிய
செம்பசுவின் காயத்தின் நினைப்பு
என் மனதில்
உதிரமாய் வழிந்து கொண்டிருக்கிறது



# கொக்குவில் வளர்மதி முன்பள்ளி

கொக்குவில் வளர்மதி நிறை வாழ்வகத்தின் கீழ் இயங்கும் கொக்குவில் வளர்மதி முன்பள்ளி ஆனது வருடந்தோறும் பலநிகழ்வுகளை சிறுவர்களுக்காக நடத்தி வருகிறது.

இருப்பினும், தற்போது நாட்டில் நிலவிய கொரோனா இடர்காலத்தில் எமது சிறார்களுக்கு எம்மால் வழமை போன்று நிகழ்வுகளை நடாத்த முடியாமல் போனாலும், எம் சிறார்களின் எதிர்காலத்திற்காக எம்மால் இயன்ற சகல செயற்பாடுகளையும் எந்தவித தடையும் இன்றி வழங்கியுள்ளோம்.

அதில் முதற்கட்டமாக கல்விநடவடிக்கையில் எந்தவித தடையும் இன்றி ZOOM வகுப்பின் ஊடாக கற்றல் செயற்பாடுகளைத் தொடர்ச்சியாக நடத்தி வருகின்றோம்.

மேலும், இணையவழி கல்வி முறையையும் (LMS) அறிமுகப்படுத்தி, அதன் ஊடாகவும் கற்றல் செயற்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றோம்.




இச்செயற்பாடுகள் மட்டுமன்றி, மாணவர்களின் திறன்களை விருத்தி செய்யும் நோக்குடன் அவர்களுக்கு திறன் விருத்திப் போட்டியும் ZOOM மூலம் நடத்தப்பட்டது.

மேலும், விஜயதசமி விழாவை முன்னிட்டு (15 10 2021) எமது முன்பள்ளியில் விஜய தசமிபூஜையும் இடம் பெற்றது. அதனைத் தொடர்ந்து திரு. S.V. மகேந்திரன் (ஓய்வுநிலை கல்விப்பணிப்பாளர்) அவர்களால் ஏடு தொடக்கல் வைபவமும் இடம்பெற்றது. பின்னர் எமது சிறார்களின் கலை நிகழ்வுகள் சிலவும் நடாத்தி, எம் சிறுவர்களின் சகலவித செயற்பாடுகளையும் இந்த இடர் காலத்திலும் எத்தடையு மின்றி வழங்கி வந்துள்ளோம் என்பதை நினைத்து மகிழ்ச்சி அடைகிறோம்.

இனிவரும் காலங்களிலும் நாட்டில் எவ்வித சூழ்நிலை வந்தாலும், எமது சிறார்களின் எதிர்காலத்தை முன்னேற்றுவதற்கான சகல செயற்பாடுகளையும் எவ்வித தடையு மின்றி வழங்குவதற்கு நாமும் எமது முன்பள்ளியும் தயாராக உள்ளோம்.

# கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழக மகளிர் குழு



கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகத்தின்கீழ்அமையப்பெற்ற மகளிர்குழு, பலகாலங்களாக தனது சேவைகளை கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழகத்திற்கும் நிறைவாழ்வகத்திற்கும் மற்றும் எமது கிராமத்திற்கும் ஆற்றி வருகின்றது. அதன் தொடர்ச்சியாக எமது கிராமத்தில்சிறிது காலமாக பெண் தலைமைத்துவத்தை ஊக்குவிக்கும் முகமாக மகளிர்குழுவினால் சில செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அந்த வகையில், தற்பொழுது வளர்மதி முன்னேற்றக்கழக ஆதரவுடனும் வளர்மதி நிறைவாழ்வகத்தின் உதவியுடனும் வளர்மதி வளாகத்தில் 08 03 2021 அன்று உள்ளூர் உற்பத்திகளை விநியோகம் செய்யும் ஒரு சிறிய அளவிலான மாலை நேரக்கடையினை உருவாக்கி எமது உற்பத்திகளை விநியோகித்து வந்தோம்.

இதனால் கிராமவாசிகளிடம் ஏற்பட்ட பெரும் நன்மதிப்பு மற்றும் ஆதரவு காரணமாக எமது கடையினை மேலும் விஸ்தரிக்க எண்ணியிருந்தோம். அந்தவகையில், எமது வளர்மதி சமூகத்தின் ஆதரவுடன் நிலையான கடையினை ஸ்தாபித்து எமது செயற்பாடுகளை செய்து வருகின்றோம். இவ்வகையில் கிராமத்திற்கு 3மில்லியன் என்ற திட்டத்தின் கீழ் கௌரவ அங்கஜன் இராமநாதன் அவர்கள் கொக்குவில் கிராமத் தைப் பார்வையிட வந்தவேளை எமது கடையினைப் பார்வையிட்டு, அதனை விஸ்தரிக்க வேண்டும் என்றும் பெண் தலைமைத்துவம் மற்றும் பொருளாதார ரீதியாக நலிவுற்ற குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பினையும் ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாகவும் இந்தக் கடையினை விஸ்தரிக்க வேண்டும் என்று கூறி, இதுவரை கடையினை நடாத்திய மகளிர் குழுவிற்கு பாராட்டுகளையும் தெரிவித்தார்.

மேலும், 3மில்லியன் ரூபாதிட்டத்தின் கீழ் எமது உள்ளூர் உற்பத்திகளை விஸ்தரிப்பதற்கு ஒரு மில்லியன் ரூபாவினை ஒதுக்கியுள்ளார். இதன் மூலம் வளர்மதி மகளிர்குழு தனது செயற்பாடுகளை சிறப்பாக முன்னெடுத்துச் செல்கின்றது என்பதுடன், எதிர்வரும் காலத்தில் இன்னும் பல செயற்பாடுகளை முன்னெடுத்துச் செய்வோம்என்பதனையும்பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.






## OFFICE FEATURES

- Broadband
- Contemporary design
- Furnished
- Network
- Reception
- Meeting Rooms
- Virtual Offices
- Tea and coffee making facilities

Call Satkin on: 07766562557
now for booking or viewing

SATKIN'S
THE BUSINESS HUB




# நீலம் பாரித்த மன



எனது வீட்டின் இடது பக்கமாய் நான்கு வீடுகள் தாண்டி அவர் வீடு இருந்தது. ஆற்று மணல் பரப்பிய பெரிய வாசல் நடுவுக்கு சற்று விலகி வண்டறுத்து வீரியம் கெட்டு நீதி வேண்டிய அபலைப் பெண்ணாய் தலை குலைந்து தொய்ந்து கிடந்த தென்னை. தென்னையின் நிழல் தரையில் படியும் தூரத்தில் தகடால் வேயப்பட்ட முதுகு கூனிய குடிசை கைவிட்டுப்போன பழைய Hillman காரின் சாயலில் இருந்தது. வெயில் எரிக்கும் காலங்களில் பிட்டாய் அவிய வேண்டியதுதான். ஆனால் அவர் உள்ளிருந்து அவியாமல் அவருடைய பழைய செயின் பெட்டியும் முன் பிறேக்கும் இல்லாத சைக்கிளை எடுத்துக் கொண்டு கடல் பக்கம் சென்று விடுவார். அவரின் சைக்கிளின் கர...கர...கொர...கொர... ஒலியை கேட்டு விச ஜந்துக்கள் விலகி யோடும். நாய்களுக்கு அவரது சைக்கிள் தான் ஆயுட் கால எதிரி. அவர் ஆறு சக்கர அரச வாகன நடத்துனராக இருந்து ஓய்வு பெற்றவர். நல்ல புத்தகப் பிரியர். ஒரு தொகை மலிவுப் பதிப்பில் வந்த ஆங்கில புத்தகங்களையும் பழைய புராண இதிகாசங்களையும் கொஞ்ச உண்மை யும் நிறைய புனைவுமாய் எழுதப்பட்ட வர லாற்று நாவல்களையும் அவர் வாங்கி கன நாளாய் அடுக்கில் வைத்திருந்ததில் அவை மஞ்சளித்துப் போயிருப்பதை நான் அவதானித்துபெருமூச்செறிந்திருக்கிறேன். அவரின் 'நின்ஜா' சொட்களையும் காது கெடும் வசவுகளையும் தாங்கவொண் ணாத அவர் மனைவி இருபது வருடங் களுக்கு முன்பதாகவே அவரின் சகவாசம் தவிர்த்து குவைத்துக்கு சென்று தினார் களில் சம்பாதித்து நிம்மதி பெரு மூச்சை

# ளங்களின் திருப்தி





பாலை நிலங்களில் கலக்க விடுகிறார். அனேகமான சாப்பாடு உண்டு முடிந்த இரவுகளின் முற்றாத பகுதிகளில் நான் அவரின் வாசஸ் தலத்துக்கு செல்வதுண்டு. வாசலில் முன் கூட்டியே தயாராக அரைவட்டத்தில் மூன்று பிளாஸ்ரிக் கதிரைகள் இருக்கும் நான் உட்கார்ந்து கொள்ள. அவர் அவரின் பயண அனுபவங்களில் கிடைத்தவற்றை உப்பும் புளியும் அஜினோமோட்டோவும் சேர்த்து கடைவாய் நீர் சுரக்க சுவைபடச் சொல்வார். துப்பறியும் நாவலொன்றின் குணங்குறிகளோடு அவர் விபரிப்பதை என்னோடு சேர்த்து அவர் வளர்த்த நாட்டுக் கோழிகளும் மௌனித்து கேட்கும். நிலவு மட்டும் "எத்தனை நாட்களுக்குடா இந்த ரீலையே ஓட்டப்போகிறாய்" என்று கேட்கும் தோரணையில் தூக்க கலக்கத்தில் கிடக்கும்.

ஒரு நாள் சூரியன் இரண்டு சூரியன்களின் பலத்தோடு வெப்பம் உதிர்த்துக் கொண்டிருந்த பகல் கிராம சேவகர் தந்த வாக்காளர் படிவத்தை கொடுக்க அவர் வாசலுக்கு போகிறேன். அவர் தினம் உருகும் வெயிலில் குந்தியிருந்து சிறு குச்சியொன்றை நிலத்தில் அசைத்துக்கொண்டிருந்தார். முகம் வெயிலின் சூட்டில் வெம்பியிருந்தது. அருகே நெருங்கினேன். கபாலம் சூழ் அதிர்வு. கண் விடுக்காத மூன்று எலிக் குஞ்சுகள். தோலுரிந்த சைனாக்காரனின் சாயலில் அழுந்தி துடித்து 98.5% உயிரை விட்டிருந்தன. "என்ன செய்கிறீர்கள்?" பதைத்து கேட்டேன். "பாழாய்ப் போனதுகள் பொத்தகங்களின் மூலைய வெட்டி கறவாக்கிற்று." என்றார். இவையா இவற்றை பெற்ற

வையா?" கேட்டேன். பெற்றவை தப்பி விட்டதாகவும் இவையும் இன்னும் காலம் கழிந்து இந்த அழிச்சாட்டியம்தான் செய்யும் என்று நிறுவினார். "இந்த தண்டனை கடுமையானதாக தெரியவில்லையா?" என்றேன். அவருக்கு புரியவில்லை. அவர் அவரது கருத்தில் திட்டாகியிருந்தார். ஒரு கொலையை கூட நாகரிகமாக செய்ய தெரியாதவனோடு எதற்கு உறவு. அன்றோடு தெற்கு பக்க வீட்டை மறந்தேன்.

* * *

**மூ**க்கி சைக்கிள் மிதித்தால் வெறும் இருபது நிமிடங்களில் போய் சேர்ந்து விடுகிற பக்கத்தின் பக்கத்தூர். அங்கு. அப்போதுகளில் வயது அத்து மீறிய ஒரு முதிர் நண்பர் ஒருவர் வாய்க்கப் பெற்றிருந்தார். மிக குறுகிய காலத்தில் வந்து கழிந்த நட்பு அவருடையது. வளாகம் செல்லும் சேவிர்ஸ் பஸ்ஸை தவற விட்டு அதனை பிடிப்பதற்காக ஓடிய போது குறுக்காக வந்த அவருடைய பெரிய மரக் கரியர் பூட்டிய Humber பைசிக்கிளில் முட்டி யதில் ஏற்பட்ட உறவு அது. பஸ் போய் விட்டிருந்த போதும் அறிதலும் அறியாமையும் சரி சமவிகிதத்தில் சேர்ந்து பிசைந்தெடுத்த நண்பர் ஒருவர் கிடைக்கப் பெற்றது ஒரு கொடுப்பினை தான்.

நண்பர் தனது கருவாட்டு வியாபாரத்துக்கு அடுத்தபடியாக எம்.ஜி.ஆரை நேசித்தார். அவர் பேசும் பத்து கதைகளில் ஐந்து கதைகள் எம்.ஜி.ஆரின் படம் பார்க்க மட்டகளப்புக்கு சென்று வந்த வரலாற்று சரிதங்களாக இருக்கும்.

பலமுறை வீட்டுக்கு அழைத்து வழியும் சொல்லித் தந்திருந்தார். ஆனால் போனதில்லை. ஒரு முறை கொடியேற்ற பெருவிழாவுக்கு ஒரு நண்பனின் வலுக் கட்டாயத்தில் சென்றபோது அவரின் வீடு சென்று வந்தால் என்ன என்ற அரிய வகை உணர்வு எழ நண்பனிடம் சொன்னேன். ஒத்துக் கொண்டான். சென்றோம். 'கேற்'றுக்கு நான்கு குட்டு வைத்தோம். ஒரு இரண்டு நிமிடம் தாமதமாகி கேற் திறக்கப்பட்டது. ஒற்றைத் தோளில் சேட் ஒன்றை கொழுவியபடி அவர் நின்றார். மிக ஆச்சரியம் கலந்த பூரண மகிழ்ச்சியோடு எங்களை அழைத்தார்.

> **"இரண்டு மீனவச் சமுகங்களிடையே உள்ளிறங்கி பெருங் குழப்பத்தை உண்டு பண்ணி குடியை கெடுத்த நம்பியாரை எம்.ஜிஆர் கொன்றிருக்க வேண்டும். அதனை விடுத்து பொலிஸில் பிடித்துக் கொடுத்துவிட்டார். இந்த தண்டனை அவருக்கு போதாது- என்றார்."**



*அடுத்த இதழில்*
*பேராசிரியர் மா. சின்னத்தம்பி எழுதும்*
*தமிழர்களது புலம்பெயர்தலும்*
*கல்விச் செயற்பாடுகளும் கட்டுரை தொடராக*
*வெளிவரவுள்ளது.*

எறும்புகள் குடி கொண்டு சாற்றை உறிஞ்சிக் கொண்டிருக்கிற குறோட்டன்கள் இரண்டு பக்கமும் வரிசையாய் நின்று ஒரு ஒற்றையடி பாதையை மட்டும் அனுமதித்திருக்கும் வளவின் அந்தத்தில் அவருடைய பூசாத வீடு இருந்தது. இரண்டு வயர் பின்னிய மரக் கதிரையை பழைய சீலையால் துடைத்து விட்டு உட்காரச் சொன்னார். உள்ளே இருட்டு மூலையொன்றில் இருந்த ரீவியில் பொலித்தின் பையில் அடைக்கப்பட்ட பற்பொடியின் நிறத்தில் படம் ஓடிக் கொண்டிருந்தது. அதில் பாசிப் பச்சை நிற முகத்தோடு எம்.ஜி.ஆர். தெரிந்தார். அவர் 'படகோட்டி' என்றார். அந்த வார்த்தைக்கு பின்னால் அவர் மௌனியானார். ஆழ் நிசப்த மொன்றுள் தீர்க்கமாக மூழ்கிப்போனார். இடையில் அவர் மனைவி கொண்டு வந்து வைத்த மூன்று




பிளேன்ரிகளுள் அவருடைய பிளேன்ரியை கோப் பையின் விளிம்பில் இருந்து ஈயொன்று குடலேறக் குடித்தது. அவர் கவனிக்கவில்லை. எம்.ஜி.ஆரை விழுங்கி ஏப்பமிடும் மன நிலையில் இருந்தார். நாங்கள் அவரின் மனைவி உபரியாய் வைத்த கிழங்குச் சீவலை நறும்பிக் கொண்டிருந்தோம். 'அலை கடல் மேலே அலையாய் அலைந்து உயிரைக் கொடுப்பவர் இங்கே' என்று தரையில் நின்று கடலை கற்பனை செய்தார் எம்.ஜி.ஆர். அந்த பாடல் இடைவெளியிலாவது திரும்புவார் எனப் பார்த்தால் 'ம்ஹூம்' அதுவும் தோல்வியே. பொறுமை கடந்த ஒரு மணித்தியாலமும் பதினேழு நிமிடங்களுக்கு பின் படம் முடிந்திருந்தது. இப்போது அசடு வழிய எங்களைப் பார்த்தார். அவர் முகத்தில் குழப்பக் கோடுகள் ஓடுவதை அடையாளம் கண்டு கொண்டேன். "என்ன…". என்றேன். அவர் சொன்ன நெடிய பதிலின் சாரம் இப்படி இருந்தது. "இரண்டு மீனவச் சமுகங்களிடையே உள்ளிறங்கி பெருங் குழப்பத்தை உண்டு பண்ணி குடியை கெடுத்த நம்பியாரை எம்.ஜிஆர் கொன்றிருக்கவேண்டும். அதனை விடுத்து பொலிஸில் பிடித்துக் கொடுத்துவிட்டார். இந்த தண்டனை அவருக்கு போதாது." என்றார். அதிர்ந்து போனேன்." அதற்குத்தான் பொலிஸ் பிடித்துச சென்றிருக்கிறார்களே அவர்கள் பார்த்துக் கொள்வார்களே பொலிஸின் பிடியுள் இருப்பது பத்து தரம் கொல்லப்படுவதை விட கொடியது." என்று அவர் வயதுக்கு ஏறிக் கதைத்தேன். அவர் ஏற்கவில்லை. அவர் கருத்தில் விடாப் பிடியாக இருந்தார். இறுதியாய் எம்.ஜி.ஆர் இறந்து விட்டார். நம்பியார் சாவை அண்மித்து இருக்கிறார் (அப்போது நம்பியார் இறந்திருக்கவில்லை) என்றும் சொல்லிப் பார்த்தேன். அவர் ஏற்கவில்லை. அவரது அறிவுப் பரப்பின் விஸ்தாரம் புரிந்தும் இத்த ஆபத்தான மன வெளிப்பாட்டினை அவரிடம் இல்லாமலாக்க அவரோடு வாதிட்டு பொருதிப் பார்த்துதோல்வியோடேதிரும்பவேண்டியிருந்தது.

இந்த மனங்கள்தான் எத்தனை விசித்திரமானது ஒரு மனிதனை நீலம்பாரிக்க கொல்ல வைப்பதில்

வயது கடந்து அறிவு கடந்து திருப்தி கொள்ள வைக்கிறதே.

* * *

பள்ளி விடுப்புக் காலம். அரையாண்டுப் பரீட்சைக்கு பின்னதாக சுடும் நாட்களில் வரும் விடுமுறை அது. விடுமுறை வந்தால் சந்தோசங்கள் கொத்து கொத்தாய் பூக்கும் பூத்த அத்தனையும் காய்க்கும். அணில் கொறிக்க முத்தும். விடுமுறை வந்தால் பயணம்தான். பயணம் என்றால் மூட்டை முடிச்சு கட்டிக் கொண்டு, பெரிய காசுத்தாள் பத்தையும் மணிபர்சில் சுருட்டிக் வைத்துக் கொண்டு "அப்ப...போய்ட்டு வரட்டுமா தாயே..." என்று சொல்லி விடை பெறுகின்ற நீண்ட தூர இடப் பெயர்வு கிடையாது. ஊரின் மேற்குப் பக்கமாக ஒரு முழு புரியாணியை மென்று சாப்பிடுகிற நேரத்தில் வந்து விடுகிற ஊர் அது. அவ்வூரில் என் ஆஸ்தான நண்பன் ஒருத்தன் இருந்தான். என்னோடு பள்ளியில் படித்தவன்தான். கல்வியை அன்பாக இராகம் தளும்பும் அழகிய மொழியில் அழைத்தான். அது அவனிடம் வரவில்லை. கெஞ்சிப் பார்த்தான். அது வரவில்லை. கட்டிப் புரண்டு ரத்தம் வடிய சண்டை போட்டுப் பார்த்தான். அது மசியவில்லை. அது அவனை விட்டு கிழக்காக நடந்தது. அவன் அதனை பாதி வழி விட்டு விட்டு அதன் எதிர்த்



திசை நடந்தான். இப்போது அவன் முழு நேர விவசாயி. வயலும் வயல் சார்ந்த நிலமும் அவன் வாழ்வாகிப் போனது. அவன் ஒரு மீசை வைத்த நாகேஷ். அவன் நளினங்களும் சேட்டைகளும் குரலும் நிறமும் அச்சு அசல் அவர்தான்.. அவனே ஜோக்கடித்து அவனே குலுங்கிச் சிரிப்பான். எதிரே இருப்பவர்கள் அவனை பரிதாபமாகப் பார்ப்பார்கள். வாய்க்குள் எதனையோ திணித்த வன் போல் நாக்கை அடிக்கடி சுழற்றி கொள்வான்.

அன்று அவனைக் கண்டடைவ தாய்த்தான் எங்கள் பயணம். நண்பன் மேல் கீழ் மூச்சு வாங்க சைக்கிள் மிதித்தான் நான் பாரில் தொங்கிக் கொண்டிருந்தேன். எதிர்க் காற்று. எழும்பி மிதித்தான். எதிர் பாராமல் கல்லெறி வாங்கிய நாய் போல சைக்கிள் அணுகிக் கொண் டோடியது. அவன் மூச்சில் 'லாவா' குழம்பின் சூடு. கை விட்டுக் கன நாளான தியேட்டர் கடந்து வந்த செக் போஸ்ற்றில் நிறுத்தினான். அடை யாள அட்டையை சிப்பாய் புரட்டி நிமித்தி புரட்டி நிமித்தினான். சிங் களத்தில் கேட்டான். தமிழில் பதில் சொன்னேன் போக விட்டான். இப் போது என் முறை நண்பன் மிதிக்கச் சொன்னான். இரண்டு நிமிடங்கள். எனது பரிதாபத்தை தாங்குமள வுக்கு அவன் கல் நெஞ்சன் அல்ல. ஒரு சிட்டுக் குருவியை வதைக்கும் பாவத்திலிருந்து அவன் தப்பினான். சைக்கிள் மேற்கு பக்கம் திரும்ப சோதனை தொடங்கியது. பாதை குஸ்டரோகியின் முதுகாய் கிடந்தது. தொலை நோக்கியில் நிலவை பார்க்காதவன் இந்த பாதைக்கு ஒரு தடவை வந்து போகலாம். பயணம் முடிந்தால் ஏதாவது நோவுக் கழிம்பு உள்ளவன் மட்டும் இரவில் ஓரளவு புரளாமல் தூங்கலாம். சைக்கிள் ஓடிக்கொண்டிருந்தது. நெல்லின் ஊறிய மணம்.. வாலை கிளப்பி பழுப்பு பச்சை சாணம். போடும் மாடு கள்.."மீனே..மீனே.." கூப்பிடு குரல் கள்...சல்பீனிய ஊதாக்கள்....ஊர் வந்திருந்தது. மஞ்சள் போடரும் 'திகீர்' பச்சை நிறமும் உடைய தீபா வளி பட்டுப் புடவை போல முன்னே வயல் படுக்க பின்னே ஊர் கிடந்தது. நண்பன் மேல் வரிசை பற்கள் கீழ் வரிசை பற்களில் அமர வரவேற் றான். உட்கார்த்தினான். இளநீர் தலை சிரைத்து தேசிச் சாறு விட்டு நீட்டினான். சள்ளல் மீன் கறியையும் கீரைச் சுண்டலையும் பரத்தி சோறு வைத்தான். சூரியன் முகம் சிவந்து மேற்கில் விழ புகை மணக்கும் தேநீர் தந்தான். குளிக்க அழைத் தான். வாய்க்கால் நாறிய மீனின் செதிலாய் வரண்டு வெடித்து கிடந் தது. பள்ளத்தில் சொட்டாய் சொட்டாய் சுரி நீர். மைதானமொன்றின் அருகி ருந்த குளக்கரைக்கு அழைத்துச் சென்றான். பாசி விலக்கி நீரில் இறக்கினோம். எருமை மாடுகள் ஒரு பக்கம் குளித்தன. நாங்கள் ஒரு பக்கம் குளித்தோம். இரவு பகல் உண்ட மீதக் கறியோடு தயிரும் இருந்தது. ஒரு வெட்டு வெட்டினோம். அவன் தோட்டம் செய்த வரலாற்றை அடி முதல் நுனி வரை சொன்னான். கேட்டுக் கிடந்தோம். அவன் உழைப் பின் வியர்வையின் வாசம் எங்கள் நாசியுள் இறங்கிற்று.


விடிகாலையில் தோட்டத்தை பார்க்கலாம் என்ற உத்தர வாதத் தோடு தூங்கச் சொன்னான். சீமெந்து நிலத்தின் குளுமையில் சுருண்டு படுத்தோம். காற்று தலை கோதிற்று. நுளம்பு ஆர்மோனியப் பெட்டியோடு அலைந்தது. தூங்கிப் போனோம். விடிகாலையில் விர லால் பல் துலக்கி கிணற்றின் குளிர்ச்சியை முகத்தில் அடித்தோம். ஒற்றையடிப்பாதையில் இரவு விழுந்த சாரலின் ஈரம் பிள்ளை மலமாய் பிசு பிசுத்தது. மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கும் தூரத்தில் அவன் தோட்டம் இருந்தது. 'பூனைப் புடுக்கு கொடி 'வளர்ந்திருந்த வேலியில் இருந்த படலையை திறந்தவன் தலையில் கையை வைத்து உட் கார்ந்து விட்டான். உதடு பக்கவாட் டில் கெழிந்தது. கண்கள் நீரை உற்பத்தியாக்கும் பணியில் கவனம் எடுக்க தொடங்கியது. மகா துஷ்டர் கள் சிலர் அவனது பதின் மூன்று வாழையை நடுவால் வெட்டியிருந்த னர். நான்கு குலை தள்ளிய வாழை. குலையையும் எடுத்துச் சென்றி ருந்தனர். மிக கஷ்டப்பட்டு அவை கள் உயிரை விட்டிருக்க வேண்டும் என்பதற்கு ஆதாரமாக அதன் வயிற்று பகுதியிலிருந்து இன்னும் சாறு வடிந்து கொண்டிருந்தது. அவன் தோள் தொட்டு. ஆதரவாய் அழுத்தினேன். அவன் நிமிர்ந்து பாராமலே குலுங்கினான். மனிதர்

> **"மனித மனங்கள் எத்தனை வக்கிரமானது. துடித்து அடங்கும் அம்மனிதர்களின் அவலக் குரல் அவர்களின் காதுகளில் சேரவேயில்லையே. புவியியல் பாடத்தில் 'தீப் பாறை' என்று ஒன்று படித்தது ஞாபகம். அதற்கு உதாரணம் தேடி ஓடத் தேவையில்லை கெட்டித்த அவர்களின் மனங்களை காட்டினாலே போதும்."**

களில்தான்.எத்தனை வெறைற்றி. ஒரு உயிரை துடிக்க துடிக்க கொன்று பார்ப்பதில்தான் அவர்களுக்கு எவ்வளவு அடங்கா இன்பம்.

* * *

அன்றைய காலை சாம்பல் பூத்திருந்தது. கடிகாரத்தில்7;20 நிமிடமுள்ளும் மணி முள்ளும் வேலைக்கு ஓடச் சொல்லி துரத்த பதட்டம் தொற்ற வெளியில் வருகிறேன். மோட்டார் சைக்கிளை தள்ளத் தொடங்க அது தள்ளாட தொடங்கியது. முன் ரயர் பேதிக்கு குடித்த வயிறாய் கிடந்தது. பஞ்சர். நெற்றியில் வியர்வைப் புள்ளி. பிரதான தெருவீட்டிலிருந்து பத்து செகண்ட் தூரம்தான்.தெரு வுக்கு வந்து விட்டேன்.அன்று இரண்டு பேரதிசயம் நிகழ்ந்தது.ஒன்று சந்திக்கு வந்ததும் பஸ் அதுவும் உடைந்து உடைந்து மனக் காயமில்லாமல் ஒரே தடவையில் வேலைத்தளத்துக்கு அருகில் இறக்கவிடுகிற கதிர்காமம் செல்வது. இரண்டாவது சூரியன் படாத பக்கம் உட்காரும் ஆசனம். பஸ் எனக்கு புதிதில்லை. ஏறக்குறைய என் வாலிபத்தின் பெரும் பகுதி அந்த தகர டப்பாவின் உட் சூட்டில்தான் கிடந்து செரித்தது. ஒரு வகையில் யோசித்தால் பஸ் பயணம் வாழ்க்கையில் எல்லோருக்கும் கிட்ட வேண்டும் அது கிட்டாதவன் அபாக்கியசாலிதான் அன்று பஸ்ஸை சாரதி குதிரை போல ஓட்டினான். உண்டியல் சில்லறை காசாய் பயணிகள் குலுங்கினர்.எனக்கு முன் ஆசனத்தில் இருந்த தம்பதிகளில் ஒன்றுக்கு அறுபத்தாறும் ஒன்றுக்கு அறுபதும் இருக்கலாம்.மலை வெற்றிலையை வாய் கொள்ளுமட்டும் அடக்கி மூன்று அடிகள் வாங்கிய நாயகன் போல வாய் அந்தம் சிவப்பு வடிய தவளை பாஷையில் கதைத்தனர்.



ஏ.எம். குர்ஷித்

திடீரென அறுபத்தாறு அறுபதின் தோளில் கையை ஊன்றி ஓணான் சாதியாய் தலையை வெளி நீட்டி துப்பினார். பக்கவாட்டு கண்ணாடியெங்கும் செம்மழை. திட்டத் தெரிந்த அத்தனை பேரும் திட்டினர். நேராய் ஓடிய பஸ் மேற்கில் வளைந்தது. முன்னே நிறுத்தம்.ஒரு தொகை கதிர்காம யாத்திரிகர்கள் சீலை முடிச்சு களோடு ஏறிக் கொள்ள சத்திர சிகிச்சை செய்த மூல வியாதிக்காரனாய் பஸ் பையப் பைய உருண்டது.உள்ளே விறகடுப்பு மூட்டியது போல் வெக்கை. சனக் குவியலின் கீழ் நடத்துனர் சிக்கியிருந்தார். சில நிமிட பிரயத்தனத்தின் பின் “வேற ரிக்கற்...” என்று கேட்டபடியே வெளியே பற்பசையாய் பிதுங்கினார் நடத்துனர். இடுப்புப்பட்டியின் தலை முதுகுப் பக்கம் நகர்ந்திருந்தது.ஒரு பக்க சேட் வெளியே நீண்டிருந்தது. அனர்த்தநிவாரணம் கிடைக்காதவனின் முகமாய் அவர் முகம் மாறியிருந்தது. பஸ்ஸின் மிதிபலகையில் தொங்கிய மூன்று பேருக்கிடையில் வந்து நின்று வயல் காற்றை உள்ளெடுத்தார். பஸ்பிரிட்டிஸ்காரன் முஸ்பாத்திக்கு போட்ட பாலத்தை கடந்திருந்தது. பஸ்ஸுள் கற்பூரமும் அக்குள் வியர்வையும் சேர்ந்த ஒரு கசகசவாசம் உற்பத்தியாக தொடங்கியிருந்தது.பஸ் பயணங்களில் பல வேளை சந்திக்கின்ற இந்த வாசத்தை எவன் தாங்கிக் கொள்கிறானோ அவன்தான் உண்மையில் உலகத்தில் பலவான்.சித்திரவதை முகாம்கள் நடாத்தும் ‘கனவான்கள்’ வேறு தண்டனைகளை தெரிய வேண்டியதில்லை. குற்றவாளிகளுக்கு இந்த வாசத்தை நுகரக் கொடுத்தாலே போதும் உண்மையையும் முந்திய வேளை சாப்பாட்டையும் பித்தம் வெளியேற கக்குவான்..அந்தப் பெரிய மருத மரம் வந்திருந்தது.பஸ்



வெயிலில் மினுங்கும் நீரலை - நதி
விழுந்து நிரவும் குளக்கரை.

உள்ளே குளித்தொரு பறவை - ஈரம்
உலர்த்த விரிக்கும் சிறகை.

பச்சிலை உடுத்திய தாமரை - மலர்
இதழிற் தவழும் புன்னகை.

எங்கும் அழகின் செழுமை - தூவி
இயற்கை எழுதும் கவிதை.

**படம் : சிவகுகன்**
**வரிகள்: புராந்தகன்**

அவ்விடத்திலேயே திடுக்கிட்டு நின்றது. பயணிகள் பாய்ந்து இறங்கினர். பாதையின் அருகில் மேய்ந்து கொண்டிருந்த இரு மாடுகளை தீர்த்துக் கட்டி விட்டு வலது பக்க வாய்க்காலில் மின் கம்பம் ஏற்றி வந்த லொறி யொன்று பாய்ந்து மல்லாந்த ஆமையாய் கிடந்தது. சாரதி ஏற்கனவே காப்பாற்றப் பட்டு அருகி ருந்த ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டிருந்தார். அருகிருந்த இருவரையும் மீட்பதற்கான பிரயத்தனம் பத்து நிமிடங்கள் தாண் டியிருந்தது. மீட்கப்பட்டார்கள். ஒருவரின் வலது தோள் மூட்டு விலகியிருந்தது. ஒருவனின் கால் பகுதி சிதைந் திருந்தது. நீளமாக கிடத்தப்பட்டிருந்த அவர்கள் துடித்தனர். இரத்தம் தாறுமாறாக தலைகாட்டிற்று. வலமும் இடமும் வளைந்தனர். அள்ளி அம்பியூலன்ஸ் ஸில் போடுவதற் கிடையில் புஜபலவானானாகிய மனிதர்கள் சிலர் 'பொம்பிளப் பிள்ளை'களின் ஐந்தாறு லைக்குகளை வாங்கிக் கொள்வ தற்காக இடுப்பை வளைத்து நெளித்து குதிகாலில் நின்று கழுத்தை பக்கவாட்டில் சாய்த்து என மாறுபட்ட கோணங்களில் அவர்களை படமாக்கிக் கொண்டிருந்தனர். மனித மனங்கள் எத்தனை வக்கிரமானது. துடித்து அடங்கும் அம்மனிதர்களின் அவலக் குரல் அவர்களின் காதுகளில் சேரவேயில் லையே. புவியியல் பாடத்தில் 'தீப்பாறை' என்று ஒன்று படித்தது ஞாபகம். அதற்கு உதாரணம் தேடி ஓடத் தேவையில்லை கெட்டித்த அவர்களின் மனங்களை காட்டினாலே போதும். நான் மௌனமாக செத்துக் கிடந்த அந்த மாடுகளை பார்த்துக் கொண்டிருந்தேன்.

* * *

அறம் பெருக்கெடுத்த சங்கமருவிய காலம். திரு வள்ளுவர் என்கிற பொய்யா மொழிப்புலவர் எழுதிப் போனார்.

'அன்பின் வழியது உயிர் நிலை அஃதிலார்க்கு என்பு தோல் போர்த்த உடம்பு'
பொருளையும் கருத்தையும் கண்டடைவது உங்கள் பாடு.

# ஓர் இலக்கியகாரன் பற்றிய பதிவுகள்





**இணுவ**
**சிதம்பர திருச்**



கந்தையா
ஸ்ரீ கணேசன்

திருச்செந்திநாதன் பத்திரிகை எழுத்துக்கள் ஊடாக பல்வேறு விமர்சகர், ஆய்வாளர் கருத்துக்களை புதிய வாசகர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தவர். சிதம்பரநடராஜன், நி.இராஜ நாயகி, நடராஜன் மைந்தன், இணுவிலான் எனப் பல புனை பெயர்களுடன் தனது பதிவுகளை மேற்கொண்டிருந்தார். சமகால இலக்கிய செல்நெறிகள் பற்றியும், தரமான இலக்கிய விமர்சனங்களை அறிமுகப்படுத்தியும் இலக்கியப் பணி புரிந்தவர். 'தளவாசல்' சஞ்சிகை அவரது இலக்கிய இதழாக பரிணமித்து வந்த வேளையில் நோயின் கடுந்தாக்கத்தினால் 2019 இல் தம்முயிரை நீத்து புகழுடல் எய்தினார். தெல்லிப் பளை பிரதேச செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தராக கடமை யாற்றி ஓய்வு நிலையை 2016 இல் பெற்றிருந்தார்.





## வையூர் செந்திநாதன்:

இளவயதில் தந்தைவழி நின்று தந்தையார் சிதம்பரநாதபிள் ளையின் கலை உலகினால் உற்சாகம் பெற்று ஒரு சில நாட கங்களை எழுதி மேடையேற்றி யிருந்தார். 'தேவயானி', 'சுக்கிராச் சாரியார்', 'அரங்கேற்றம்' போன்ற நாடகங்களுடாக ஊர் மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றிருந்த திருச்செந்திநாதன் 1978 இல் பாடசாலை மாணவனாக இருந்த காலத்தில் தமது சிறுகதைகள் ஊடாக குறிப்பாக வீரகேசரி வார மலரில் வெளிவந்த கதைகள் ஊடாக நாடளாவிய ரீதியில் புகழ் ஈட்டியிருந்தார்.

**போரின் எல்லாவிதமான தாக்கங்களுக்கும் ஈடுகொடுத்து ஊர் விட்டு ஊர்மாறி தமது குடும்பத்தையும் இணைத்துக் கொண்டு அவர் ஆற்றிய எழுத்துப் பணி காலத்தால் என்றும் போற்றப்படும்.**

அக்காலத்து முன்னணி எழுத்தா ளர்களின் படைப்புக்களினால் உந்தப் பெற்று சிறுகதை உலகில் பிரவேசித்து மித்திரன், வீரகேசரி எனத் தொடங்கி பின்னாளில் ஈழநாடு, ஈழமுரசு, முரசொலி, ஈழநாதம், உதயன், தினக்குரல் எனப் பல்வேறு பத்திரிகைகளி லும் மல்லிகை, அமிர்த கங்கை, செய்திக்கதிர், வெளிச்சம், ஆதா ரம், உள்ளம், எனப்பல ஈழத்து சஞ்சிகைகளிலும் எழுதி முன் னணி எழுத்தாளராகப் பரிண மித்தார்.

150 க்கும் மேற்பட்ட சிறுகதை களை எழுதி வெளியிட்ட திருச்செந் திநாதன் அவர்கள் 4 சிறுகதைத் தொகுதிகளையும் இலக்கிய உலகிற்கு அளித்துள்ளார். வெட்டுமுகம் (1973), என்னுடை யதும் அம்மாவினதும் (1998), மணல்வெளி அரங்கு (2002) என்பன தேசிய கலை இலக்கிய பேரவை வெளியீடுகள் ஆகவும்; 'மருத்துவர்களின் மரணம்' (2016), எழு கலை இலக்கியப் பேரவையின் வெளியீடாகவும் வெளிவந்துள்ளன.

சமகாலத்து ஈழத்து தமிழர் வாழ் வின் பாடுகளை போருக்கு முந் திய, போர்க்காலத்து, போருக்குப் பிந்திய காலத்து மக்கள் துயர் களைத் தமது எழுத்தினூடாக கொண்டு வந்தவர் இணுவையர் சிதம்பர திருச்செந்திநாதன். ஓர் இலக்கியகாரனின் சிந்தனைத் தடத்தில் மனிதர்களின் நடத்தைக் கோலங்களும் அதனூடாக அவர்களின் சமூக ஊடாட்டங் களும் பதிவு பெறுகின்றன. அப்பதி வுகள் கால ஓட்டத்தில் அழியாச் சுவடுகளாக மாறிக் காலந்

தோறும் மனித இருப்பின் அவலத்தை, சுவையை, இன்பத்தை அடுத்த சந்ததியினருக்கு எடுத்துச் செல்லும் தகைமை உள்ளவை ஆகின்றன.

எண்பதுகளின் ஆரம்பத்தில் இணுவில் கலை இலக்கிய வட்டத்தின் செயற்பாடுகளோடு தன்னைப் பிணைத்துக் கொண்டு தலைவராகவும் பணி ஆற்றியதோடு பல்வேறு கருத்தரங்குகள், விமர்சன அரங்குகள், நூல் வெளியீடுகள், என்பவற்றையும் ஒழுங்கு செய்து தமது இளவல்களுக்கு வழிகாட்டி னார்.

இணுவில் கலை இலக்கிய வட்டத்தின் நிகழ் வொன்றில் 1988 இல் 'என்றாவது ஒரு நாள்?' என்னும் குறுநாவலிலை வெளியிட்டதன் மூலம் பிரசுர உலகிலும் தம்மை வெளிக்காட்டிக் கொண்ட திருச்செந்திநாதன் தொடர்ந்து 'முடிவல்ல ஆரம்பம்' எனும் நாவலை மீரா வெளியீடாக வெளியிட்டதன் மூலம் நாவல் உலகிலும் தம்மைப் பதிவு செய்து கொண்டார். சீதனம், சாதி, போராட்டச் சூழல் என யாழ்ப்பாண நிலைமைகளை படம் பிடிக்கும் இந்நாவல் போராட்ட காலத்தைப் பகைப்புலமாகக் கொண்டுள்ளது. (ஜீவநதி, கார்த்திகை, 2018). 1991 இல் அவரது அடுத்த நாவல் 'முள்முடி மன்னர்கள்' மீரா வெளியீடாகவே வெளி வந்தது. குடும்பச் சுமையுடன் கல்வி, வேலைவாய்ப்பு என அலையும் யாழ்ப்பாண இளைஞர்களின் வாழ்வியலை எடுத்துக் காட்டும் படைப் பாக காணப்படுகின்றது. 1992இல் மீரா வெளியீடாகவே பிரசுரிக்கப்பட்ட 'மீண்டும் புதிதாய்ப் பிறப்போம்' எனும் நாவல் போரின் பாதிப்புக்கள், பெண்களின் இக்கட்டான சூழ்நிலை, இடப்பெயர்வு என கதைக்களம் விரிகின்றது.

தொண்ணூறுகளில் தீவிரமாக எழுத்துப் பணி யோடு பத்திரிகைப் பணியிலும் ஈடுபட்டு தேசியம் சார்ந்த கலை இலக்கிய பத்திரிகைச் செயற்பாட்டில் முழுமூச்சாக ஈடுபட்டார். போரின் எல்லாவிதமான தாக்கங்களுக்கும் ஈடுகொடுத்து ஊர் விட்டு ஊர்மாறி தமது குடும்பத்தையும் இணைத்துக் கொண்டு அவர் ஆற்றிய எழுத்துப் பணி காலத்தால் என்றும் போற்றப்படும்.

இடப்பெயர்வு காலத்தில் தாம் வாழ்ந்த சூழலிலும் வன்னி இலக்கிய இளவல்களுக்கு ஒரு வழிகாட்டி யாக இருந்து எழு கலை இலக்கியப் பேரவையை உருவாக்கினார். அவ்விலக்கிய குழுவின் வெளியீடாக சிறுகதைத் தொகுப்பு மற்றும் நூல்களை வெளியிட்டதோடு கருத்தரங்குகளை யும் வன்னிப் பகைப்புலத்தில் நடாத்தியதோடு மீண்டும் யாழ்ப்பாணத்தில் வேலை செய்த காலத்தில் 'தளவாசல்' என்னும் புதிய சஞ்சிகையின் 4 இதழ்களை தமது இலக்கிய இளம் நண்பர்களான கை. சரவணன், நிசாகரன், மயூரரூபன் ஆகியோ ரோடு இணைந்து வெளியிட்டிருந்தார்.

யாழ்ப்பாண மத்தியதர வர்க்கத்து வாழ்நிலைகள், போர், இடப்பெயர்வு, நெருக்கடிகள் என்பவற்றோடு போர்க்காலத்து இளைஞர் அவலங்கள் என்பன சிறுகதை கருப்பொருட்களாக அடையாளம் கண்டு கொண்டுள்ளார். போருக்குப் பிந்திய காலச் சூழலில் மக்களின் அவலங்களை 'மருத்துவர்களின் மரணம்' என்னும் சிறுகதைத் தொகுப்பின் ஊடாக வெளிக்கொணர்ந்துள்ளார்.

**நாடகம், நாவல், சிறுகதை எனும் வடிவங்களூடாக இலக்கியத் தடம் பதித்த திருச்செந்திநாதன் அவர்கள் ஒரு பத்திரிகையாளனாக, பத்திரிகை ஆசிரியராக பணியாற்றிய வேளையில் இளைய படைப்பாளிகளை அரவணைத்தும், வழிகாட்டியும் நின்ற பக்குவம் பல இளைய தலைமுறை எழுத்தாளர்களால் இன்றும் போற்றப்படுகின்றது.**

நாடகம், நாவல், சிறுகதை எனும் வடிவங்களூடாக இலக்கியத் தடம் பதித்த திருச்செந்திநாதன் அவர்கள் ஒரு பத்திரிகையாளனாக, பத்திரிகை ஆசிரியராக பணியாற்றிய வேளையில் இளைய படைப்பாளி களை அரவணைத்தும், வழிகாட்டியும் நின்ற பக்குவம் பல இளைய தலைமுறை எழுத்தாளர் களால் இன்றும் போற்றப்படுகின்றது. புதுக்குடியி ருப்பில் போரின் உக்கிரத்தில் மறைந்த பத்திரிகை யாளர் அமரர் சத்தியமூர்த்தி எழுகலை இலக்கியப் பேரவையை உருவாக்க திருச்செந்திநாதனுடன்



தோளுக்கு தோளாக நின்றவர். 2017 இல் தனது வாழ்க்கைத் துணைவியை இழந்ததிலி ருந்து உற்சாகம் குன்றியி ருந்த நண்பர் திருச்செந்திநாதன் தனது இரு ஆண் பிள்ளைகளையும் இரு பெண் பிள்ளைகளையும்தவிக்க விட்டுமறைந்து விட்டமை ஈழத்து இலக்கிய உலகிற்கு ஒரு பெரும் இழப்பு ஆகும். அன்னாரின் ஆத்ம சாந்திக்காக நாமும் பிரார்த்திப் போம்.



## அதிர்வு – 1

# ஜெய்பீம்






நவம்பர் மாதம் அமேசன் பிரைம் சூர்யா நடிப்பில் வெளிவந்த ஜெய் பீம் படம் பல்வேறுபட்ட கருத்தியல்களை சிந்தனைகளை வெளிக் கொணர வைத்துள்ளது. தமிழக சமூக அமைப்பில் ஒடுக்கப்படும் இருளர் பழங்குடியினரின் நீதிக்கான போராட்டத்தின் ஒரு துகள் திரையில் கதையாய் விரிந்திருக்கிறது .தமிழகச் சூழலில் பெருந்துயரம் சாதியம். பார்ப் பனியம், மேல் தட்டு, விளிம்பு நிலை என சாதியப் படிநிலைகள் மாறிக் கொண்டிருந்தாலும் எல்லாச் சமூகங்களும் மற்ற சமூகங்களை சாதியத்தின் பெயரில் ஒடுக்குகின்றன இது நீளும் வரலாறு. ஜனநாயக தேர்தல் முறைகளும் சாதீய வாக்குகளுக்காய் இன்னமும் சாதியத்தை கூர்மை படுத்துகின்றது.

ஜெய்பீமின் ஒவ்வொரு காட்சிகளிலும் ஓர் சமூகத்தின் மீது நிகழ்த்தப்படும் தீண்டாமையை வெளிப்படுத்தி நிற்கின்றது. சொந்த நிலமின்மை, கல்வியறிவின்மை இனக்குழும அடையாளத்தால் குற்றவாளிகளாக்கப்படும் அவலம் தத்ரூபமாய் திரையில் செதுக்கப்பட்டுள்ளது.

ஜெய்பீம் வெளிவந்த சமகாலத்தில் நரிக்குறவர் சமுதாய பெண்ணொருவர் ஆலய அன்னதானமொன்றில் நிந்திக்கப்பட்டமை அதற்கு தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டமை. அச்சமூக மக்களுக்காக நிலம் கல்வி வசதிகளைப் பெற்றுக் கொள்ள முயற்சித்தமை போன்ற செய்திகளை காண முடிந்தது இன்னமும் தமிழகச் சூழலில்

சாதியத்தின் பெயரால்
படுவதை காட்டி நிற்கி
வன்முறை என்றொ
இயந்திரம் தன் அதிக
விழ்த்துவிடும் வன்மு
களை என்றைக்கும்
அதற்கு ஏனைய துறை
அதை ஜெய்பீமும் பூட
லாத் தேசங்களிலும் ஒ
இருந்து கொண்டு த

# ▪ யுவனி ▪




ஜெய்பீம் ஒடுக்குமுறைக்கு எதிரான வெற்றியின் திரைக் கதை . அதுவெறும்அதிகாரவர்க் கத்திற்கு எதிரான கலகக்குரல் மட்டுமல்ல ஒரு சமூகத்தினை அடையாளப் படுத்தும், எழுத் தறிவை நோக்கி அச்சமூகம் நகர்வதை காட்டும் ஓர் ஆவ ணம். ■

“இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் உறுப்பு எண் 17 தீண்டாமை ஒழிக்கப்பட்டு விட்டதாக பறைசாற்றுகிறது. 1955 ஆம் ஆண்டு தீண்டாமை குற்றங்கள் சட்டமும் 1976 ஆண்டு குடியுரிமை பாதுகாப்பு சட்டம் கொண்டுவரப்பட்டன .ஆயினும் ஆதிக்க சாதிகளின் வெறியாட்டம் அடங்கவில்லை . எனவே 1989 செப்டம்பர் 11ஆம் நாள் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்று 30 1 1990 இருந்து தாழ்த்தப் பட்டோர் மற்றும் பழங்குடியினர் மீதான வன் கொடுமை தடுப்புச் சட்டம் இந்தியா முழுதும் அமுலுக்கு வந்தது”

**சாதியம்: வேர்கள் -விளைவுகள்- சவால்கள் எனும் நூலில் சு.பொ அகத்தியலிங்கம்**

டுக்குமுறைகள் நிகழ்த்தப்
றது. நீதி என்பது அரசின்
ரு கூற்று உண்டு அரசு
ார அமைப்புகளால் கட்ட
றைகளை, ஒடுக்குமுறை
நியாயப்படுத்த முயலும்.
களும் துணை செய்யும்.
மாக காட்டியிருக்கிறது .எல்
டுக்குமுறைகள் எப்போதும்
ன் இருக்கப் போகிறது.


இனம், பிரதேசம், சாதியம் என ஒடுக்குமுறைகள் தொடரத்தான் போகிறது. ஒன்றிணைந்த புரட்சி குரல்களும் நீதிக்கான போராட்டங்களும் ஒடுக்கு முறைகளைக் களையச் செய்யும். புரட்சிகளும் போராட்டங்களும் ஓய்ந்து விட்டால் ஒடுக்கு முறைகளும் சுரண்டல்களும் உத்வேகம் கொண்டு விடும். நீதிக்கான போராட்டத்தின் ஒரு துகள் திரையில் வந்திருக்கிறது. நீதி மறுக்கப்பட்ட, மறைக்கப்பட்ட துயர் தோய்ந்த சம்பவங்கள் எத்தனை இம்மண்ணில் நிகழ்ந்திருக்கும்

# அதிர்வு -2

# போரிலக்க
# வரலாற்று கட்



சாத்திரி




ஈழத்துப் போர் இலக்கியச் செல்நெறியில் ஒரு தள மையத்தை எதிர்பார்க்க இயலாது. தமிழ் மக்களுக்கான போராட்டங்களை பல்வேறு தலைப்புகள் சமநேரத்தில் முன்னெடுத்தன. அவற்றுள் சில முடிவுறுத்தப்பட்டன. ஒவ்வோர் இயக்க கருத்தியல் சார்ந்த படைப்புகள் வெளிவந்தன. இவை ஏதோ ஒரு வகையில் பக்கச் சார்பான படைப்புகளாக விளங்கின. லங்கா ராணி, புதியதோர் வீடு, யாழ்ப்பாணம் எரிகிறது, எமன், மரணத்துள் வாழ்வோம், கடலம்மா எனத் தொடங்கிய போர் இலக்கியங்கள் இரண்டாயிரத்தில் இன்னொரு தளத்தை எட்டியது.

'யுத்தத்தின் முதல் பலி உண்மை. பலியிடப்படும் உண்மைக்கு சாட்சியாக இருப்பதே போர் இலக்கியம். அது எந்தளவுக்கு உண்மைக்கு கிட்டவாக வருகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அது போர் இலக்கியமாக மேலெழுகிறது. எவ்வளவுக்கெவ்வளவு அது உண்மையில் இருந்து விலகிச் செல்கிறதோ அது அவ்வளவுக்கவ்வளவு பிரச்சாரமாக அல்லது தனிநபர் துதி அல்லது உள்நோக்கம் உடையவையாக தாழ்ந்து போகிறது' என்பது நிலாந்தனின் கருத்து.

போர் படைப்புக்களை எழுதியவர்களை 'நிலாந்தன்' வகைப்படுத்துகின்றபோது போராளி எழுத்தாளர்கள், சக பயணிகள், அதிருப்தியாளர்கள் எதிர்ப்பிலக்கியகாரர்கள் என வகைப்படுத்துகின்றார். இத் தரப்பினரிடமிருந்து அளவுக்கதிகமான இலக்கியப் பிரதிகள் தமிழ் பரப்பிற்கு போரின் பின்னரான காலத்தில் கிடைத்துள்ளது. ஷோபாசக்தி, நட்சத்திரன் செவ்விந்தியன், தீபச்செல்வன், ஜயர், சாத்திரி, புஷ்பராஜா, புஷ்பராணி, ரவி என ஒரு நீளும் பட்டியல் இருக்கிறது. போரின் பின்னரான போர் இலக்கியப்பரப்பில் தன் வரலாறு சார்ந்த படைப்புக்கள் அதிகம் வெளிவந்

துள்ளன. இ
கட்டமைக்க
யாக விளங்கு
குறி. இவை
தன் கருத்திய
காட்டுவதாக
தோல்வியுற்
லிருந்து தம்
முயல்கின்றன

ஈழத்துத் தமி
தனக்கான வர
யில் தவறு இ
வரலாற்றில்
களும் பக்கச்சா
நிலையான அ
கையோடு
களோ காண
பிரதான கார
ரான வரலாற்
அவை பற்றிய
தலைமுறை
இப்படைப்புக
போகிறது. இ
வேனும் உண்
அமைகின்றன

போர்க்கால
பெயர் இலக்கி
மிகப் பெரியது
உள்ள எழுத்
அதற்கு ஓர் கா
டத்தில் புலம்
அனுபவங்க
வெளிப்படுத்
பின்னரான
வைத்து பு
கையில் தமிழ
கருத்தில் கொ
வேறொன்ற
ஈர்ப்பிற்காய் சி
கின்றார்கள் .
அண்மிக்காம
றாகும்.

ஷோபாசக்தியி
விபச்சார விடு

# கியங்களும்
# டுமானங்களும்

வை ஓர் வரலாற்றை ஓர் வரலாறு சொல்லி மா என்பதே கேள்விக் நம்மை புனிதர்களாக ல்களை வெற்றியாக எழுதப்படுகின்றன. ற போராட்டங்களி மை புனிதப்படுத்தவும் .

ழினம் இன்றுவரை லாற்றினை எழுதுகை ழைத்து வருகின்றது. தனிமனித புகழ்ச்சி ர்புகளும் தொடர்கிறது. ரசு ,வரலாற்று எழுது தாடர்புபட்ட அமைப்பு ப்படாமை துயரின் ணம். போரின் பின்ன றைப் போதிப்பதற்கு விடயங்களை அடுத்த க்கு கடத்துவதற்கு ள் துணை செய்யப் ப்படைப்புகள் ஓரள மைத் தன்மையோடு வா?

படைப்புகளில் புலம் ியகாரர்களின் பங்கு . புலம்பெயர் சூழலில் துலக சுதந்திர வழி ரணம். ஈழப்போராட் பெயர்ந்த பலர் தம் ளைப் படைப்புகளாக கின்றனர். போரின் கால சம்பவங்களை னவுகளை கட்டமைக் க வாசகச்சந்தைகளை கிறார்கள். யதார்த்தம் ய் அமைய வாசக லதை வலிந்து திணிக் இது உண்மைகளை ல் போவதற்குச் சான்

ின் **BOX** இல்வரும் தி ஒன்று தொடர்பான கட்டுமானங்களும் சாத்திரியின் ஆயுத எழுத்தில் வரும் தமிழகச் சூழலில் வரும் சம்பவங்களும் எந்த அளவு தூரம் யதார்த்தத்தோடு பொருந்திப் போகிறது என்பதே கேள் விக்குறி.

சுய வரலாறுகள் ஒவ்வொரு அரசியல் நிலைப்பாடு சார்ந்தும் எழுதப்படுகிறது. இங்கே முதன்மைப்படுத்தப்படுவது புனிதப்படுத்தும் துதிப் பாடல்களே. இது காலம் செல்லச் செல்ல ஈழத்து வரலாற்று ஏடுகள் எழுதுகையில் எந்தளவு தூரம் தாக்கம் செலுத்தப் போகிறது என சிந்திக்க வேண்டியுள் ளது. இவற்றை புனைவுகள் என்று கடக்க இயலாது. புனைவுகளில் இருந்தும் வரலாறு கட்டியெழுப்பப்பட போகிறது என்ற வரலாற்று உண் மைக்கு பொறுப்பாளிகள் யார்?.


ஈழத்தில் தொடங்கிய போர் இலக்கியப் பாரம்பரியம் புலம்பெயர்வின் பின் அங்கிருந்தும் வெளிவரத் தொடங் கியது. யுத்தம் நடைபெறும்போது ஒன்றாய் இருந்த தளம் போரின் பின் அதன் செல்கள் இன்னொரு தளத் திற்கு மாறி இருக்கிறது.

ஈழத்துப் போர் இலக்கியப் படைப்புகள் பற்றி மு.பொ. 'புலம்பெயர் எழுத் தாளர்கள் உண்மையில் எங்களது இலக்கியத்திற்கு முழுமையான பங் களிப்பை செய்தவர்களாக நாங்கள் கருத முடியாது .எங்களுடைய போராட்டத்தை வளர்க்கக் கூடியதாக, உரிமைகளைப் பெறக் கூடிய positive approach அவர்களது எழுத்துக்களில் இல்லை எங்களை மிக கேவலப்படுத் தும் போக்குகளும் அவர்களது எழுத்துக்களில் உண்டு. அதுவே தூக்கலாகத் தெரிகிறது. நடுநிலையில் நின்று வித்தியாசமாக எழுதியவர்கள் மிகக் குறைவு' என்கிறார். இந்த நடு நிலைமை இன்மை. இனி செலுத்தப் போகும் தாக்கம் என்ன. இதன் பொறுப்பாளிகள் யார்?

■



ஷோபாசக்தி



# நவீன உலகில் கைத்தொலைபேசிகள் அவசியமா? அவலமா?



**வைத்திய கலாநிதி ம.சுபேந்திரன்**

*உளநல மருத்துவ நிபுணர்*

மனித வாழ்வு சவால்கள் நிரம்பியது. பண்டைய காலம் தொட்டு பரிணாம வளர்ச்சியின் உச்சத்திலுள்ள நாம், இச்சவால்களிலிருந்து மீளெழும் தன்மையே எம்மை உயிர்களிடையே ஓர் உன்னத படைப்பாக உருமாற்றியிருக்கின்றது. நாகரிகத்தின் பிடியில் சிக்கித்தவிக்கும் எம்மை, எந்தவித பராபட்சமுமின்றி தன்வசப்படுத்தியுள்ளது இக்கைத்தொலைபேசி என்னும் ஓர் சாதனம். ஒரு குழந்தை கருவுற்ற காலம் முதல், முதுமை எம்மை தொட்டு தாலாட்டும் வரை இக்காலத்தின் கட்டாயம் இத்தொலைபேசி தானோ என எண்ணத்தோன்றுகின்றது. இக்கட்டுரையில் கைத்தொலைபேசி அல்லது அலைபேசி என்னும் பதங்கள் இன்றைய நவீனஉலகின் ஸ்மார்ட் தொலைபேசிகளை (smart phones) சுட்டி நிற்கின்றது.

எவ்வளவோ நன்மை பயப்பதாக நாமெண்ணும் இக் கைத்தொலைபேசி அவ்வளவுக்கவ்வளவு பிரச்சனைகளை நம்மத்தியில் விட்டுச்செல்ல மறந்ததில்லை. கூட்டுக்குடும்பமாக கதைபேசி, ஊனுண்டு, உவகையுற்ற காலம் மலையேறி, இன்று கூட்டாக குடும்பம் ஒவ்வொருவர் கையிலும் ஓர் அலைபேசியுடன் சங்கமித்துள்ள இக்காலம் பரிதாபத்திற்குரியது. கணவன் மனைவியிடமோ, பிள்ளைகள் பெற்றோர்களிடமோ, நண்பர்கள் தம் சக நண்பர்களிடமோ தமது உள்ளக்கிடக்கைகளை வெளிப்படுத்த முன்னர் சமூகவலைத் தளங்களில் தமது உணர்வலைகளை தரவேற்றம் செய்யத் துணிந்துவிடுகின்றது இன்றைய சமூகம். அரைகுறையாக தமது உள்ளக் கிடக்கைகளை வெளிக்கொணரும் இத்தகவல்கள், பெரிதும் பரிச்சயமில்லாத சமூகவலைதளவாசிகளை பலவழிகளில் ஊகிக்க இடமளிக்கின்றது. இத்தகவல் பரிமாற்றங்கள் தரவேற்றியவரின் தனிப்பட்ட வாழ்க்கையை, அவர்தம் ஆளுமையை, மற்றும் குடும்ப சூழ்நிலை தொடர்பில் ஏனையோர் பலவித அனுமானங்களை எடுத்துக் கொள்ள வழிசமைக்கின்றது.

குழந்தைப் பிராயத்திலேயே அறிமுகம் செய்துவைக்கப்படுகின்ற அலைபேசியால், பெற்றோர்கள் கணிசமான சந்தர்ப்பங்களில் சவால்களையும், இன்னபிற சந்தர்ப்பங்களில் மகிழ்ச்சிப்பெருக்கும் அடைவதுண்டு. தன் பிள்ளை நன்றாக இங்கிலிஷ் கதைக்கின்றான் அல்லது உச்சரிக்கின்றான், நேசரி றைம்ஸ் பாடுகின்றான், YouTube இயக்குகின்றான், வீடியோக்களில் வரும் விளம்பரங்களை ஸ்கிப் (skip) செய்கின்றான் என்பது முதற்கொண்டு அவன் பாட்டு கேட்டுத்தான் கண்முழிக்கின்றான், YouTube பார்த்தால் தான் சாப்பிடுவான், பலமணி நேரம் மெல்லாமல் விழுங்காமல் வைத்த கண் வாங்கியபடியே உறைந்து போகின்றான் என்பது வரை கைத்தொலைபேசி பச்சிளம் குழந்தைகள் பால் அவ்வளவு செல்வாக்கு செலுத்துகின்றது. பாட்டுப்போட்டு வீடியோ காட்டித் திரியும் பெரியவர்களுக்கு அலைபேசி செயலிழந்தால் குழந்தைகளை இயக்குவதற்கான மாற்று வழிமுறைகள் ஏனோ பெரியளவில் தெரிவதில்லை.

மருத்துவ ரீதியாக நோக்கில், இவ்வலைபேசிப் பாவனையானது, இக்குழந்தைகளிற்கு பல உடல், உள, சமூக ரீதியாக அசௌகரியங்களை உடனடியாகவும், காலப்போக்கிலும் கொணரக் காரணமாகிவிடுகின்றது. உடலியல் ரீதியாக துள்ளித்திரிந்து, ஓடிவிளையாட





வேண்டிய பராயத்தில் ஒரேயிடத்தில் அமரப்பண்ணி உடற்பருமனை அதிகரிப்பதோடு, இன்னபல உடலியல் சிக்கல்களையும் உருவாக்கி விடுகின்றது. இவற்றில் முக்கியமானவை விழிப்புலன் தொடர்பான பிரச்சினைகள், உடல் சமநிலையில் ஸ்திரமற்றதன்மை (balance issues) மற்றும் பிந்திய தெறிவினைகளால் (delayed reflexes) ஏற்படக்கூடிய பிரச்சினைகள்.

உளவியல் ரீதியாக நோக்கில், கவனக்குவிப்பில் பிரச்சினைகள் (attentional problems), மனச்சோர்வு (depression), எண்ண மீள்சுழற்சி நோய் (obsessive compulsive disorder) அடிமையாதல் (addiction) போன்ற பல குறைபாடுகள் காலப்போக்கில் விருத்தியாக வழிகோலுகின்றது. குழந்தைகள் பலவிடயங்களை ஒரே நேரத்தில் கவனம் செலுத்தக் கூடிய வல்லமையை (multitasking ability) இழக்க நேரிடலாம். கைத்தொலைபேசி அடிமை நிலை காலபோக்கில் வேறு பல அடிமை நிலைமைகளுக்கு இட்டுச்செல்ல காரணமாகலாம். உதாரணமாக போதைவஸ்து பாவனை (psychoactive substance use), internet gaming, நீலப்படங்களின் அதீத பாவனை (pornographic addiction), பந்தயங்களிற்கு அடிமையாதல் (gambling) போன்றவற்றை குறிப்பிட்டு கூறலாம். இவற்றை விட சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை வெளித்தூண்டல்களிற்கு புலனை செலுத்தாத அபாயகரமான தன்மையையும் (not responding to external cues) இப்பாவனை எம்மில் விருத்தியாக வழி வகுக்கின்றது. சிறுபராயத்தில் தனது சூழலை ஆராய்ந்து, பரீட்சித்து,

பரிச்சயமாகும் இயல்பு இதனால் தானாகவே நலிவுறுகின்றது. எமது பரம்பரை இடைவெளி (generation gap) காரணமாக அலைபேசியில், மடிக்கணணியில் சிறுவர்கள் எமக்குத்தெரியாத பலவிடயங்களை செய்யத்துணித்து விடுகின்றனர். இதன்விளைவாக பிள்ளைகள் காலப்போக்கில் நடத்தைப் பிறழ்வான காரியங்களில் ஈடுபட எத்தனிக்கின்றனர். இதுபற்றி நாம் பெரிதளவில் தெரிந்துகொள்ள வாய்ப்பில்லாமலே போய்விடுகின்றது.



சமூக ரீதியான பிரச்சனைகளை நோக்கில், சமூக இடைத் தொடல்பாடல்பிரச்சினைகள் (inter personal issues), தனிமை (social isolation), சமூக திறன்கள் விருத்தியாகாத தன்மை (lack of social skill development) போன்றவற்றை குறிப்பிடலாம். சமூக வலைத்தளங்களில் உறவுகளை சேகரிக்கத் தெரிந்த எம்மவர்களிற்கு ஏதோ தமக்கென பிரச்சினைகள் வரும் போது சமூக வலைத்தளங்களில் தீர்வுகள் கிடைக்குமென ஏங்கிநிற்பது அவலம்தான். பிரச்சனைகளை தீர்க்கும் ஆற்றலின்மையால், அழுத்தங்களிற்கு முகம் கொடுக்கும் தன்மையற்று போவதால் தன்னை தானே மாய்த்துக்கொள்ளும் அளவிற்கு கூட துணிந்து விடுவது ஏதோ துர்ப்பாக்கியமே.

எது எவ்வாறிருப்பினும் சரியான விதத்தில், சமநிலையில் இப்பாவனையிருப்பது எமது தொழில்நுட்ப வளர்ச்சியின் ஒரு மிகப்பெரும் வெற்றியே. இக்கொடிய தொற்றுக் காலத்தில் (COVID - 19) எம்மை, எம்மவர்களிடையே இணைக்கும் பாலமாக, எமது கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்ள ஓர் ஏதனமாக, வீட்டிலிருந்தே பணி எனும் அடிப்படைக்கு (work from home concept) வித்தாக அமைந்தது ஏனோ இப்பாவனை தான் என்பதை மறந்தோ, மறைத்தோ விடமுடியாது. Viber, WhatsApp groups பெருமளவில் தொல்லையளிப்பனவாக சித்தரிக்கப்பட்டாலும், எம் சக சமூகத்தினருடனான தகவல் பரிவர்த்தனைகளுக்கு கணிசமானளவு பங்களிப்பு செய்கின்றன.


பரிமாண வளர்ச்சியில் புதுப்புது தொழில்நுட்பங்களிற்கு எம்மை முன்னிலைப்படுத்துவது காலத்தின் தேவை. ஒவ்வொரு காலத்திலும், இன்னோரன்ன வளர்ச்சிப்படி நிலைகளிற்கு முகம் கொடுத்த நாம், நிச்சயம் யதார்த்தமான முறையில் ஸ்மார்ட்தொலைபேசிகளை பாவிப்பதில் தேர்ச்சி பெறவேண்டும் என்பது திண்ணம்.

**உளவியல் ரீதியாக நோக்கில், கவனக்குவிப்பில் பிரச்சினைகள் (attentional problems), மனச்சோர்வு (depression), எண்ண மீள்சுழற்சி நோய் (obsessive compulsive disorder) அடிமையாதல் (addiction) போன்ற பல குறைபாடுகள் காலப்போக்கில் விருத்தியாக வழிகோலுகின்றது. குழந்தைகள் பலவிடயங்களை ஒரேநேரத்தில் கவனம் செலுத்தக்கூடிய வல்லமையை (multi-tasking ability) இழக்க நேரிடலாம். கைத்தொலைபேசி அடிமை நிலை காலபோக்கில் வேறு பல அடிமை நிலைமைகளுக்கு இட்டுச்செல்ல காரணமாகலாம்.**

அபரிமிதமான பாவனையால் ஏற்படும் தீமைகளை அறிதலும், அவை தொடர்பான பிரச்சினைகளை தீர்க்க, உடலுள வைத்தியஆலோசனைகளை பெற்றுக்கொள்வதிலும் நாம் பின்னிற்றல் தகாது. Prevention is better than cure எனும் ஆங்கில சொற்றொடர் சுட்டுமாறு, நாம் எம்மை, எம் சார்ந்தவர்களை,

குறிப்பாக நமது இளைய சமூகத்தவரை சரியாக வழிநடத்த தெரிந்திருத்தல் அவசியமாகின்றது. சரியான முறையில் அனைத்து செயல்பாடுகளிற்கும், பங்கீடு அடிப்படையில் நேரம் ஒதுக்குதல் அந்நேரத்தில் கணிசமானளவு, தரமான நேரம் குடும்பத்துடன் செலவழிப்பது (quality time with family) பற்றி நாம் சிந்திக்கவேண்டியவர்களாக உள்ளோம். பெற்றோர் சரியான குழந்தை வளர்ப்பு பற்றிய நுட்பங்களை அறிந்திருத்தல் அவசியம். தமது வலையமைப்பினரின் (network providers) உதவியைப்பெற்று, எவ்வாறு சில தகாத செயலிகள் (Apps) தரவிறக்கம் செய்வதைத் தவிர்த்துக்கொள்ளலாம் என்பது தொடர்பான அறிவுறுத்தல்களை அவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

‘தக்கன பிழைக்கும் தகாதன செத்துமடியும்’ எனும் சார்ள்ஸ் டார்வின் அவர்களின் கூற்றுக்கிணங்க தொழில்நுட்பங்களை எமது தேவையை முன்னி லைப்படுத்தி சரியான முறையில் பாவனை செய்வதே சாலச் சிறந்ததாகும். இப்பண்பை நாம் எக்காலத்திலும் வளர்த்துக் கொள்ளவேண்டியவர்களாகின்றோம்! ■

## சமூகச் செயற்பாட்டாளர்கள் எனத் தம்மைக் கூறிக் கொள் வோர் தம்மை நோக்கி விமர் சனங்கள் வைக்கும் எதிராளி களை மன நோயாளிகள் எனச் சாடுவது குறித்து என்ன

(எமக்குள் எழுந்த கேள்வி ஒன்றினை பல்வே
அதற்கான அவர்களின் பதில்கள் இங்கே. ஒவ்
தொடரும்)

# ஐயம்


**இளவாலை**
**விஜயேந்திரன்**
**கவிஞர், எழுத்தாளர்**

**நோர்வே**




சமூகச் செயற்பாட்டாளர்கள் எனத் தம்மைக் கூறிக் கொள்வோர்` என்ற வகைக்குள் வருவோர், தம்மைத் தாமே விளம்பரம் செய்வோர் என்றே கூறவேண்டும். சமூகம் சார்ந்து செயற்படுவோர் யாராயினும், அவர்கள் உளச்சுத்தியுடன் செயற்படுவார்களாயின் தம்மைத் தாமே அவ்வாறு சமூகச் செயற்பாட்டாளர்கள் எனக் கூறிக்கொள்வதை ஒருபோதும் செய்ய மாட்டார்கள் என்றே நினைக்கிறேன்.

விமர்சனங்கள் முன்வைப்போர், அவற்றை விமர்சனமாகவே முன் வைக்கிறார்களா அல்லது குறுகிய நோக்கங்களுக்காக அவற்றை அவதூறாக வடிவமைக்கிறார்களா என்பதும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியது. பொதுவெளியிற் சொல்லப்படும் ஒவ்வொரு வார்த்தைக்கும் ஒரு கனதி உண்டென்று சொல்பவர்கள் அறியவேண்டும். அவற்றைப் பொறுப்போடு வெளிப்படுத்த வேண்டும். எமது சமூகத்தில் நானறிந்த வரையில் சகமனிதர் களைப் பற்றி எந்தவிதப் பொறுப்பும் இல்லாமல் அபிப்பிராயம் சொல்வதும், பிடிக்காதவர்களைப் பற்றி ஆதாரமற்ற விதத்தில் அவதூறு சொல்வதும் ஒரு நோய் போலப் பரவியிருக்கிறது. இது எமது சமூகத்துக்கு மட்டுமேயான பிரச்சனையா என் பது தெரியவில்லை.

எனது அனுபவத்தில் மற்றவர்களைப் பற்றிக் குறைகூறாமல், தம்மீதான விமர் சனங்களை/ அவதூறுகளைப் பொருட்படுத்தாமற் செயற்படும் பலரைக் கண்டிருக் கிறேன். அவர்கள் செயல் வீரர்கள் என்றே கூறவேண்டும். இவர்கள் தொகையில் மிகச் சிறியோரே. ஆர்வம் காரணமாய்த் தமது நேரத்தைப் பொது வேலைகட்கு அர்ப்பணிக்கும் பலருக்கும் `புறம்கூறல்` இடைஞ்சலாகவே இருப்பதையும் அவதானித்திருக்கிறேன்.

விமர்சனமாக ஒரு கருத்தை யாரேனும் முன்வைக்கும்போது அவற்றைச் சீர்தூக்கிப் பார்ப்பது நல்லது. அதுவே அவதூறாக முன்வைக்கப்படும்போது (ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள்) அவற்றைக் கடந்துபோவதே நல்லது. பொருட்படுத்துவதே அவசிய மற்றது. எனது நேரடி அனுபவத்தில் எமது சமூகத்தில் தம்மை (மன)நோயாளிகள் என்று அறியாத பலரும் உலா வருகிறார்கள் என்பதைச் சொல்லியே ஆகவேண்டும். தமக்கு மரியாதை கிடைக்கவேண்டும் என்பதாலோ மற்றவர்கள் மரியாதை பெறுவதைப் பொறுக்க மாட்டாமலோ இவர்களின் செயல்கள் மற்றோர் பற்றி அவதூறு பரப்புவதில் முடிகின்றன. இவர்களையிட்டு அனுதாபம் கொள்வதோ அவர்களுக்குரிய மருத்துவ ஆலோசனைகளை வழங்க முயல்வதோ சமூகத்துக்கு நல்லது.

ஒருவரை மனநோயாளி எனக் குறிப்பிடுவதிலும் பார்க்க, அவருக்குத் தேவையான உளவளச்சிகிச்சைக்கு உதவ முன்வருவது உண்மையில் நல்லது. ஆனால் இது எப்போதும் சாத்தியமா என்பது தெரியவில்லை. தம்மீது வைக்கப்படும் நேர்மையான விமர்சனங்களைத் தாங்கமுடியாத சிலரும்கூட, விமர்சனம் வைப்போரை மனநோயாளிகள் எனக் குறிப்பிடுவது உண்டுதான். அது பெருந்தவறு. சமூகத்துக்கு எதிர்மறையான விளைவு களையே அது தரும். அவ்வாறு சொல்பவர்கள் சமூகத்துக்கு நல்லது செய்கிறார்கள் என நான் சொல்ல மாட்டேன்.

வி தி வி ல
இல்லை. விமர்ச
சரியான திசையில் பயன
கொள்ளுதலும் வெற்றியின்
பாட்டாளர்கள் என்று அழைக்கப்ப
வைக்கும் எதிராளிகளை மன நோயா
தக்கதல்ல. சமூகச் செயற்பாட்டாளர்கள் எ
அவர்கள் மற்றவர்களை மதிக்கவும், தொடர்பு
சிலவேளை அவர்களை நோக்கி ஆரோக்கிய
அவர்களைச் சீண்டுகின்ற விமர்சனங்கள் கூட
ஆராய்ந்து ஆரோக்கியமான விமர்சனங்களை ஏற்
அவற்றையும் ஏற்றுக்கொள்வதும், வேண்டுமென்றே
அவர்களது வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும். அத்துட
நோக்கி முன்னேறலாம்.
மனநோய் என்பது பரம்பரையலகு, நரம்புத் தொகுதியி
குறைபாடு, போதைமருந்து பாவனை, தலையில் காயம் ஏற்பட
ஆனால் இன்னொருவகையில் வசைபாடுவதற்கு "மனநோ
மற்றவர்களை நோக்கிப் பாவிக்கும்போது மிகவும் கொடுரமான
நோய்களுக்கு மருந்து எடுத்தால் சுகமாகக்கூடிய தன்மையு
கோடல்களும், புரிதல்களும் வேறானது.

## நினைக்கின்றீர்கள்? மன நோயாளிகள் குறித்து என்ன விதமான பார்வையை இவர்கள் கொண்டிருக்கி றார்கள்?

று துறை சார் பிரபலங்களிடம் முன்வைத்தோம்.
வொரு இதழிலும் இவ்வாறான கேள்வி பதில் பகுதி

# தெளி

# ?



க. ஆதவன்
மெய்யியலாளர், நாடகர்
டென்மார்க்

இந்த விடயத்தில் மூன்று முக்கிய விடயங்களை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கருத்து * விமர்சனம் * மனநோயாளிகள் பற்றியது.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கருத்து இருக்கும். ஒருவரது கருத்து அவரது கோட்பாட்டின்படி இருக்கும். ஒரு கருத்துக்கு எதிரான மாற்றுக் கருத்தினை முன்வைப்போர், கருத்தைத் தர்க்க ரீதியாக எதிர்கொண்டு, அதனை மறுதலிக்கும் மனப்பக்குவம் கொண்டிருக்க வேண்டும். கருத்தொன்றை மறுதலிப்பதற்கான அடித்தளங்கள் தர்க்க ரீதியாக மாற்றுக் கருத்தொன்றினால் கட்டியெழுப்பப்பட வேண்டும். இச்செயன்முறை ஓர் அறிவுத்தளத்தில் நடைபெற வேண்டும்.

அடுத்து விமர்சனம். ஒரு கருத்து சம்பந்தமான விமர்சனம் என்பது அக்கருத்தினைப்பற்றி நன்கு தெரிந்தவர்களால் மட்டுமே தெரிவிக்கப்பட வேண்டும். ஒரு கருத்து எந்தத் தளத்தில் நடைபெறுகின்றதோ அந்தத்தளத்தைத் தெரிந்து கொண்டவர்களால் மட்டுமே அக்கருத்தைப் பற்றிய விமர்சனம் முன்வைக்கப்பட வேண்டும். வெவ்வேறு தளங்களில் ஊடாடுபவர்கள் ஒரு கருத்துக்கு வேறு ஒரு தளத்தில் இருந்து கொண்டு விமர்சனம் செய்ய முடியாது.

உதாரணமாக உதைபந்தாட்ட வீரரொருவர் கிரிக்கெட் ஆட்டத்தின் சட்டதிட்டங்களை விமர்சனம் செய்ய முடியாது. ஏனெனில், உதைபந்தாட்ட விதிமுறைகளை கிரிக்கெட் ஆட்டத்தில் பின்பற்ற முடியாது. ஒரு கருத்தை விமர்சிப்பவர் அந்தத்தளத்தில் இயங்குபவராகவும் அந்தத் தளத்தை நன்கு தெரிந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

மூன்றாவதாக, மனநோயாளி என்ற சொற்பதத்தையே நாம் தற்போது பயன்படுத்துவதில்லை. மனநலம் தேவையானோர் எனக் குறிப்பிடுவது பொருத்தமாகும். ஒரு கருத்தை விமர்சிக்கும்போது மனநோயாளி என விமர்சிப்பது தவறானது. ஏனெனில், மேலே கூறியவாறு ஒரு கருத்தை விமர்சிக்கின்ற நபர் அதே தளத்தில் இருக்க வேண்டும். அந்தத் தளத்தைத் தெரிந்தவராக இருக்க வேண்டும். இல்லாவிடின், மனநோயாளிகள்... என விமர்சிப்பவர்கள்தான் மனநலம் குன்றியவர்களாக இருக்கின்றார்கள் என்பதே எனது கருத்தாகும்.

விமர்சனத்திற்கு
க்கானவர்கள் எவரும்
னங்களை ஏற்றுக்கொண்டாலே
ளிக்க முடியும். விமர்சனங்களை ஏற்றுக்
நுட்பங்களில் ஒன்று. இதற்கு சமூகச் செயற்
படுகின்றவர்கள் , தம்மை நோக்கி விமர்சனங்கள்
ளிகள் அவ்வாறு கூறியிருந்தால் அது ஏற்றுக்கொள்ளத்
விமர்சனங்களை ஏற்றுக்கொண்டாலேயே, அதன்மூலம்
களை விருத்திசெய்யவும் முடியும்.
மான விமர்சனங்களும், ஆரோக்கியமற்ற, வேண்டுமென்றே
வக்கப்பட முடியும். அவ்வேளை அவர்கள் விமர்சனங்களை பகுத்து
றுக்கொள்வதும், மற்றைய விமர்சனங்களில் உண்மையிருந்தால்
சீண்டக்கூடியதான விமர்சனங்களை பொறுமையுடன் விட்டு நகர்வதும்
ன் தவறுகளை திருத்தி, செயற்றிறனையும் மேம்படுத்தி, சிறப்பான செயல்

ல் ஏற்படும் நோய்கள் (மூளைக்காய்ச்சல் போன்றவை), மூளைவளர்ச்சிக்
தல், சில வேளை வயோதிபம் போன்ற பல்வேறு காரணிகளால் ஏற்படக்கூடியது.
ாயாளிகள்" என்ற சொல் பாவிக்கப்படுகின்றது. இந்தச் சொல்லை அவர்கள்
அர்த்தம் தொக்கிநிற்கின்றது. சாதாரண தலைவலி, வயிற்றுவலி, காய்ச்சல் போன்ற
ள்ள மனநோயும், அவர்கள் கூறும் "மனநோயும்" வித்தியாசமானது. பொருள்



அம்ரிதா ஏயெம்
எழுத்தாளர்,
சுற்றுப்புறச் சூழல்
ஆர்வலர்

இலங்கை



**எஸ். கே. விக்னேஸ்வரன்**
**ஊடகர், சரிநிகர் ஆசிரியர்**

**கனடா**

இந்தக் கேள்வியில் பொதிந்துள்ள விமர்சனம் புரிகிறது. ஆயினும் இதிலுள்ள 'எனத் தம்மைக் கூறிக் கொள்வோர்', 'எதிராளிகள்' என்ற விமர்சனக் குறிப்புச் சொற்களைத் தவிர்த்து, இக்கேள்வியை இப்படிப் புரிந்துகொண்டு பதிலளிக்க விரும்புகிறேன் 'சமூக செயற்பாட்டில் ஈடுபடுபவர்கள் தம்மீது விமர்சனங்களை முன்வைப்பவர்களை மனநோயாளிகள் என்று சாடுவது குறித்து என்ன நினைக்கிறீர்கள்?

சமூக செயற்பாட்டாளர்கள் என்ற பதம் சமூக நலன் சார்ந்து செயற்படுபவர்களைக் குறிக்கும் ஒரு பதமாகும். சமூக நலன் என்றால் என்ன என்று ஒருவர் கேட்டால் அதற்கு திட்டவட்டமான ஓரிரு வரிகளில் சொல்லக் கூடிய ஒரு பதிலை எவராலும் சொல்லிவிட முடியாது. பாரதி சொன்னதுபோல் 'ஆங்கொரு ஏழைக்கு எழுத்தறிவித்தல்' முதல் தாம் வாழும் காலத்தின் ஒடுக்கப்படும் மக்களது விடுதலைக்காக தம்மை அர்ப்பணித்துச் செயற்படுவது வரை எத்தனையோ செயற்பாடுகளை நாம் பட்டியலிட முடியும். ஆனால் இந்தச் செயல்கள் எல்லாம் உண்மையில் மக்களின் நலனுக்கு உதவுகின்றனவா என்ற கேள்வியை எழுப்பாமல் ஒருவர் அந்தச் செயலில் இறங்க முடியாது.

பாரதி சொன்ன எழுத்தறிவித்தல் என்ற விடயம் மிகவும் அடிப்படையானதும் எளிமையானதுமான ஒரு விடயம். அந்தச் செயற்பாட்டில் ஒருவருக்கு மாற்றுக் கருத்து இருக்க நியாயமில்லை. ஆனால் சமூகத்தில் நிலவும் பல்வேறு சிக்கல்களை சமூக நலனை நோக்கமாகக் கொண்டு கையாளும் போது, அவை தொடர்பாக ஒன்றுக்கு மேற்பட்ட பல்வேறு கருத்துக்கள் இருக்க முடியும். அந்தச் சிக்கல்கள் சம்பந்தமாக, அவற்றின் அடிப்படைகள் என்ன, அவற்றின் வரலாறு என்ன, அவை எத்தகைய பின்னணிகளைக் கொண்டுள்ளன, அவற்றிற்கும் நாம் வாழும் சமூகத்துக்குமிடையிலான உறவு என்ன போன்ற விடயங்கள் தொடர்பாக இருக்கும் புரிதலின் அளவின் அடிப்படையில், அந்தச் சிக்கல்களுக்கு ஒவ்வொருவரும் ஒரு தீர்வை இனங்காண்கிறார்கள். இதனால் பலரிடமும் பல கருத்துக்கள் தீர்வுகளாக இருக்க முடியும் . ஆனால் இவற்றில் எது அல் லது எவை சரி ,அல்லது ஏறக்குறைய சரியானவை என்பதை உரையாடல்களின் மூலமாகவே அடையாளம் காண முடியும். ஆகவே மாற்றுக் கருத்துக்களும் விவாதங்களும் மிகவும் அவசியமானவை. ஆகவே மாற்றுக் கருத்துக்கள், விமர்சனங்கள் வரவேற்கப்பட வேண்டுமே ஒழிய, இழிவுபடுத்தலுக்கோ, நிராகரிப் புக்கோ உட்படுத்தப்படக் கூடாது ஆனால், வேறுசில, நமது சமூகவியலும் வரலாறும் கண்டறிந்து உண்மையென நிறுவப்பட்ட பலவிடயங்கள் விவாதத்துக்கு அப்பாற்பட்டளவு நிதர்சன உண்மைகளாக அறியப் பட்டவைகள் உள்ளன. இவற்றைக் கேள்விக்குள்ளாக் குவது என்றால், அதற்கு முன்பாக அவைபற்றிய பூரணமான அறிவு இல்லாமல் கேள்விக்குள்ளாக்க முயலக் கூடாது என்பதும் உண்மையே. ஆயினும், சமூக வாழ்வு சம்பந்தமான விடயங்களில், அவ்வாறான கேள்விகளும் கூட எழுப்பப்படவே செய்யும். அதற்காக, அவ்வாறு எழுப்பப்படும் கேள்விகளைப் புறக்கணிக்க முடியாது. அங்கேயும் விவாதங்களும் கலந்துரையாடல்களும், விளக்கங்களும் தான் சரியானதை நோக்கிய பயணத்துக்கு உதவ முடியும்.

உண்மையில், ஒரு சமூகத்தின் நலனை நோக்கமாகக் கொண்டு செய்யப்படும் எந்தவொரு சிறிய செயலும் கூட சமூக நலன் சார்ந்த செயல் தான் என்பதை மனதில் இருத்திக் கொள்வதே அடிப்படையான சமூக செயற்பாட்டாளர்களின் அடிப்படை 'வேதம்' ஆகும்.. ஆனால், அந்தச் சிறு செயல் பற்றிக் கூட, அது கொண்டுள்ள நோக்கம், அது செய்யப்படும் விதம், அதனால் வரப்போகும் விளைவுகள் என்ற பல்வேறு கோணங்களில் கேள்விகள் அல்லது விமர்சனங்கள் எழக் கூடும். அப்படி எழுவது இயல்பானது தான். கூடவே அது ஆரோக்கியமானதும் கூட. மாற்றுக் கருத்துக்களும் விவாதங்களும், செய்யும் செயலை மேலும் திருத்தமாகச் செய்ய உதவுபவை அவசியமானவை வரவேற்கப்பட வேண்டியவை. செய்யப்படும் விடயம் தொடர்பாக மாற்றுக் கருத்தைச் சொல்பவர்கள் உண்மையில் தமக்குத் தெரிந்தோ தெரியாமலோ, அந்தச் செயலை மேலும் பலப்படுத்தவே செய்கி றார்கள். உலகின் இன்றுவரை வெற்றிகரமான

சாதனைகளைச் சாதித்த எந்தத் தத்துவமோ, சிந்தனைப்போக்கோ எந்த விமர்சனமும் இல்லாமல் வெற்றி பெற்றவையோ வளர்ந்தவையோ அல்ல.

ஆகவே, மாற்றுக் கருத்தை, விமர்சனத்தை முன்வைப்பவர்களை எதிரிகள் என்றோ,மன நோயாளிகள் என்றோ ஓரம் கட்டுவது மிகத்தவறான ஒரு நடவடிக்கை. வெறும் தவறு மட்டுமல்ல, மாபெரும் இழப்புகளைத் தரக்கூடிய தவறான பாதைக்கு இட்டுச் செல்லவும்கூடியதுஅது. உண்மையில் களையப்பட வேண்டியது தவறான கருத்தே அன்றி தவறான கருத்தைக் கொண்டிருக்கும் நபர்கள் அல்ல. ஆகவே அவர்களது கருத்துக்களைப் பரிசீலனைக்கு எடுத்து விவாதிக்கவும் அதில் உள்ள விடயங்கள் உண்மை தானா என்பதை ஆராயவும் தயாராக இருப்பதே கருத்துவாக்கத்தில் வெற்றிகரமாக முன்னேறவும், அதை நோக்கிப் பலரையும் வென்றெடுக்கவும் உள்ள ஒரே வழி. இந்த விடயத்தைச் சமூக வரலாறு பலதடவை திரும்பத் திரும்ப இடித்துரைத்துச் சொல்லியிருக்கிறது.. அவர்களது கருத்துக்கள் தவறாயின் அவை ஒதுக்கப்பட வேண்டுமே ஒழிய அவர்கள் அல்ல. இதன் விளைவாக நடக்கப் போவது, சமூகத்தில் தொடர்ச்சியான பிளவுகள் உருவாகுவதைத்தவிர வேறொன்றும் அல்ல. சுருக்கமாக சொல்வதானால், விமர்சனங்களை எதிர்கொள்வதும், அந்த விமர்சனங்கள் தொடர்பாக உரையாடுவதும் மட்டுமே விமர்சங்களிலுள்ள தவறுகளை அல்லது அத் தவறுகளுக்குக் காரணமான தகவல்கள், கண்ணோட்டங்கள், கருத்து நிலை பாடுகள் என்பவற்றைப் புரிந்து கொள்ளவும் நாம் சரியானதென்று கருதும் நிலைப்பாட்டை மேலும் கவனமாகச் சரிபார்க்கவும் அல்லது சரியென உறுதிப்படுத்தவும் உள்ள ஒரே வழிமுறை. இதற்கு வேறு மாற்று வழிகள் கிடையாது! பேசுவோம்!




# உறவும் – உணர்வும் -1



செ.ஸ்ரீனிவாசன்



# தாய்

ஒரு நல்ல தொழிலில் இருக்கும் ரங்கன் தனது மனைவி மீது கொண்ட அன்பினால் அவள் கண்களில் கண்ணீரை காண விரும்புவதில்லை. அவன் தனது தாயை வைத்து இறுதிவரை காப்பதிலும் குறியாக இருந்தான். ஆனால் மனைவி ரவளிக்கும் மாமியாருக்கும் வீட்டுக்குள் பனிப்போர். குடும்ப மகிழ்ச்சி ஊஞ்சலாடியது. முடிவில் மனைவியின் தொல்லை தாங்க முடியாது ஒரு விடியற்காலை தாயை காரில் ஏற்றிக்கொண்டு ஒரு சந்தி முனையில் இறக்கிவிட்டு இதில் இருங்கள் நான் அலுவலக வேலை முடித்து மதியம் வருகிறேன். நான் வர தாமதித்தால் அதோ நீலக்கலரில் தெரிகிறதே கட்டிடம் அங்கே செல்லுங்கள் நான் அங்கு வந்து சந்திக்கிறேன் என சொல்லிவிட்டு சென்ற ரங்கன் மாலையாகியும் வரவில்லை. உணவும் நீரும் இன்றி தவித்த தாய் மெல்ல எழுந்து மகன் சொன்ன இடம் நோக்கி நடக்கமுற்பட்ட வேளை கால் இடறி தடுக்கி விழ காரில் சென்ற ஒருவர் ஓடிச்சென்று அவரைத் தூக்கி முதலுதவி செய்து நடந்த விடயங்களை கேட்டறிந்து விட்டு நீல நிறக் கட்டிடத்தை பார்த்தார். அது ஒரு



முதியோர் இல்லம். வீட்டின் பெயரோ அன்னை இல்லம் அன்னை இருப்பதோ முதியோர் இல்லம் என்ற வாசகம் பொறித்த முச்சக்கரவண்டி அப்போது தான் அவர்களைக் கடந்து செல்கிறது. அந்த அன்னையை பார்த்து பரிதாபப்பட்ட குமார் அந்த அம்மாவை தனது வீட்டிற்கு அழைத்துச் செல்கிறார்.

ஒரு வாரம் கழித்து ரங்கன் தனது மனைவி இரண்டு பிள்ளைகள் சகிதம் குடும்பமாக தனது பாடசாலைக்கால நண்பர் ஒருவரின் அறிமுகம் மூன்று தினங்களுக்கு முன் கிடைத்ததாகவும் அவர் இன்று தனது வீட்டிற்கு விருந்துக்கு அழைப்பதாகக்கூறி புறப்பட்டு செல்கின்றனர்.


அங்கு நண்பர் அன்பாக வரவேற்று கதைபேசி உணவருந்த அழைத்தனர். அறு சுவை உணவு உண்டு மகிழ்ந்து ரங்கனும் மனைவியும் நண்பர் குடும்பத்தைப் பாராட்டினர். எனது அம்மா வீட்டில் சாப்பிட்டதன் பின் இப்ப தான் இப்படியொரு சாப்பாடு சாப்பிட்டுள்ளேன். என ரங்கன் வாயார புகழ நண்பன் இந்த புகழ் எல்லாம் எமக்கல்ல கடந்தவாரம் எம்முடன் இணைந்து கொண்ட இந்த அம்மாவுக்கே சாரும் என வீதியில் கண்டெடுத்த அந்த முதுசொத்தை அழைக்க ரங்கனின் அம்மா தூரத்தே இருந்து வந்து ஒதுக்கமாக எட்டி தலைகாட்டியபோது வானமே அதிர்ந்தது போல் விறைத்து நின்றது ரங்கன் மட்டுமல்ல அவனது மனைவி பிள்ளைகளும் தான். பிள்ளைகள்

அப்பம்மா என ஓடிப்போய் கையை பிடிக்க ரங்கனும் மனைவியும் கையைப்பிசைந்து கொண்டு மன்னிச்சிடம்மா என்று தனது கரம் தூக்கி வெதும்ப தழுதழுத்த குரலில் விடயத்தை நண்பனுக்கு சொல்ல மாமியிடம் அருகே சென்று மன்னிப் புக்கோரிய மருமகளே மீண்டும் மாமியை வீட்டுக்கு அழைத்து செல்ல அன்னை இல்லம் மகிழ்கிறது. இது அண்மையில் வெளிவந்த ஒரு குறும்படம். இதை பார்த்தபோது உலகில் எங்கும் எப்போதும் எதிலும் தாய்மை உன்னதமானதே..!

கருவுற்ற நாள் முதல் பல்வேறு அவஸ்தைகளையும் தாங்கி ஒரு குழந்தையைப் பெற்றெடுப்பவள் அம்மா.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்....!

மாதா பிதா குரு தெய்வம்...!



உலகில் ஒவ்வொரு கணமும் பிள்ளைகளால் புறக்கணித்து ஒதுக்கப்படும் பெற்றோர்களின் பட்டியல்கள்நீண்டுசெல்வதைஉணர வைத்தது. தாய் என்ற பாத்திரம் விலை மதிக்க முடியாத சொத்து.

தாயிற்சிறந்த கோயிலும் இல்லை தந்தை சொல்மிக்க மந்திரமில்லை..!

என்ற வரிகளில் எல்லாம் தாயை முன் நிறுத்தி அழகு பார்த்துள்ளனர் நமது முன்னோர்கள் ..!

பிறக்கும் பிள்ளை அம்மாவின் பாசத் தையே முதலில் உணர்கிறது.

தான் பட்டினி கிடந்து பிள்ளைகளின் பசிபோக்கி தூங்க வைத்துப்பார்த்து மகிழ்பவள் அம்மா..!

தனது மகனின் சந்தோசத்திற்காக தனது உயிரையே கொடுத்த அம் மாவின் கதை நீங்கள் எல்லோரும் அறிந்ததே..!

உன்னை திருமணம் செய்ய வேண்டுமானால் உன் தாயின் இதயத்தை கொண்டுவா என காதலி கேட்க தாயின் சம்மதத்துடன் தாயைக்கொன்றுவிட்டு இதயத்தை எடுத்துக்கொண்டு ஓடும் மகன் கால் இடறி கீழே விழ தூக்கி வீசப்பட்ட தாயின் இதயம் மகனே அடி பலமா கப்பட்டுவிட்டதோ என பதறிய தன்ன லமற்ற தாயின் பாசம் பற்றி அறிந் துள்ளோம்.

கைகளை தொட்டிலாக்கி... கண்களை விளக்காக்கி...

இரத்தத்தைப்பாலாக்கி தருபவள் அம்மா..!

தன்னை மெழுகாக்கி உருக்கி பிள் ளைகளை இரும்பாக்கிப்பார்ப்பவள் அம்மா..!

உங்கள் ஒவ்வொருவரது வாழ்விலும் தாயின் பாசம் வாசமாக வாழ்நாள் முழுவதும் தொடர்வதை உணர்வீர் கள்..! பஞ்சணை தரும் சுகத்தைவிட தாயின் சேலைத்தலைப்பில் இருந்து வரும் நறுமணம் அலாதியானது.

காலையில் எல்லோரையும் விட முத லில் விழிப்பவள் அம்மா..!

கிராமங்களில் பல அம்மாக்கள் தெய் வங்களாக வாழ்ந்து முடித்துள்ளனர். இன்றும் வாழ்கின்றனர். அதிகாலை 4 மணிக்கு எழுந்து சிம்னி விளக்கில் முற்றம் கூட்டி விறகடுப்பில் தேனீர் வைத்து காலை உணவு செய்து பிள் ளைகளை துயிலெழுப்பி நீராட்டி சீராட்டி பாடசாலைக்கு அனுப்பி வைத்து பிள்ளைகள் வீடுதிரும்புமுன் சமைத்து உணவூட்டும் அம்மாக்க ளின் பாசம் வேசமல்ல...!

ஒரு பிள்ளையின் வாழ்வின் வெற்றி தோல்வி தாயின் கருவறையில் இருந்தே தீர்மாணிக்கப்படுகிறது. மகாபாரதத்தில் வரும் அபிமன் யூவின் வாழ்வு அருச்சுனனின் மனைவி சுபத்திராவின் கதைகேட் கும் இயலுமையால் தீர்மானிக் கப்படுகிறது. வீர சிவாஜிக்கு தனது தாய்ப் பாலிலேயே வீரத்தை ஊட்டி வளர்த்தார் தாயார்.

தாயன்பு துறவிகளைக்கூட கட்டிப் போட்டது. சீனாவில் நடைபெற்ற பூகம்பத்தில் தனது பிஞ்சுப்பால கனை காப்பாற்ற தன்னுயிர் தந்த தாயை நாம் கண்கூடு கண்டோம்.

எந்தக்குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே அது நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே என்றார் கவிஞர் புலமைப்பித்தன்.

இங்கு தோமஸ் அல்வா எடிசனின் கதை சொல்லத்தக்கது. வகுப்பில் படுமக்காக இருந்த எடிசனின் ஆசிரியைகள் இந்த முட்டாளுக்கு நாம் கற்பிக்க முடியாதென கடிதம் அனுப்ப அதை ஒழித்து வைத்து உன் அறிவிற்கு கற்பிக்க பள்ளியில் யாருமில்லையாம் என தனது மகனுக்கு நம்பிக்கையூட்டி சிறு வயதில் தானே கற்பித்து பெரியவ னாக்கி பின்னாளில் பெரும் விஞ்ஞா னியாக்கிய. தாயின் பெருமையை அறியாதவர்கள் இல்லை. இதனால்

“பாலூட்டும் அன்னை அவள் நட மாடும் தெய்வம்”

அன்னையிடம் நீ அன்பை வாங்க லாம்

“தந்தையிடம் நீ அறிவை வாங்க லாம்” என்பது போன்ற வரிகள் எந்த தாய்க்கும் பொருந்துவதைப் பார்க் கிறோம்.

தாயொடு அறுசுவை போம் என்பார் கள்..!

தாயின் அருமையும் நாம் வளரும் போது தெரியாது. நாம் எமது பிள் ளையை வளர்க்கும் போதே தெரிய வரும்.

ஒரு மனிதனால் 45 டெல் யூனிட் அளவுதான் வலியைப் பொறுத்துக் கொள்ள முடியும் ஆனால் தாயான வள் பிரசவத்தின் போது 57 யூனிட் வலியை நமக்காக நம் தாய் பொறுத் துக்கொள்கிறாள். 20 எலும்புகளை ஒன்றாக உடைத்தால்ஏற்படும் வலியை தாய் தாங்கிக் கொள்கிறாள்.

உலகில் நீ தேடி அலைந்தாலும் மீண்டும் அமர முடியாத சிம்மாசனம் தாயின் கருவறை தான்.

குயிலின் முட்டையை தனது முட் டையாக நினைத்து அடைகாக்கும் காகம். எந்த கடற்கரையில் தான் பிறந்ததோ அதே கடற்கரைக்கு

**“கைகளை தொட்டிலாக்கி...; கண்களை விளக்காக்கி...;**
**இரத்தத்தைப்பாலாக்கி... தருபவள் அம்மா..!”**
**தன்னை மெழுகாக்கி.. உருக்கி ...**
**பிள்ளைகளை இரும்பாக்கிப்...**
**பார்ப்பவள் அம்மா..!”**

தான் தாய் மனசு தங்கம் என் றார்கள். தாயின் பெருமைகளைப் பாடாத கவிஞர்களும் இல்லை.

வந்து குழிதோண்டி முட்டையிட்டு அவற்றைப்பாதுகாப்பாக மூடிச் செல்லும் பெண் ஆமை.

முட்டையிட்ட பின் இரண்டு மாதங் கள் எந்த உணவுமே உண்ணாது முட்டைகளை 60நாட்கள் அடைகாக் கும் மலைப்பாம்பு. இதெல்லாம்

**உலகில் நீ தேடி அலைந்தாலும் மீண்டும் அமர முடியாத சிம்மாசனம் ‘‘தாயின் கருவறை’’ தான்**

தாய்மைக்கு நல்ல இலக்கணங்கள்.

முற்காலத்தில் யப்பானில் 60 வயது கடந்து விட்டால் தாய் தந்தையரைக் கொண்டு சென்று உயர் மலைக ளில் விட்டுவந்து கழுகுகளுக்கு இரையாக்குவது வழமையாக இருந்தது. அப்படி ஒரு இளைஞன் தனது தாயை காட்டுவழியே தோளில் தூக்கிச்செல் கிறான். போகும் வழியில் எல்லாம் அந்த தாய் இலைகளைப்பறித்து போட் டுக்கொண்டு செல்கிறாள். மகனுக்கு ஒன்றும் புரியவில்லை. மலை உச் சியில் தாயை இறக்கிவிட்டு ஏதுமே பேசாது திரும்பிச்செல்ல மு ற்பட்ட மகனை அழைத்து மகனே நான் வரும் போது ஒரே வகை இலை களைப்பறித்து நீ நடந்த பாதை வழியே போட்டுவந்தேன். காட்டுப் பாதை தனியே திரும்பிச்செல்லும் நீ பாதை தவறிவிடக்கூடாது என்ப தற்காக இலைகள் போட்டுள்ளேன். அதைப்பார்த்து நட வீடு செல்வாய் எனச்சொன்ன தாயின் அன்பைக் கண்டு மனம் மாறிய மகன் தாயை தன்னுடன் மீண்டும் அழைத்துச் சென்றான் என்றும் அன்றிலிருந்து முதியோரைக் கழுக்கு இரையாக் கும் முறை இல்லாதொழிந்தது என்பதும் யப்பான் கதை தந்த படிப் பினை.

தொடரும்.......!


# பனம்பால்... பா!

பனையடிப்பாடகன்

### *காட்சி 1:*

**ஆவணிக் கடைசி ஞாயிறு 1981**

*உந்தாள முந்தியும் ஒருக்கா*
*கொண்டுபோய் வைச்சு விட்டவ*
*மூதேசி திருந்தாது - தன்ரை*
*சந்திக்கடைக் கோடிக்கை*
*சனியன் சனத்தை இருத்தி*
*விலாசமாப் போத்தல் உடைச்சு*
*கிளாசில வாத்து வித்தாராமெண்டு*
*வாசுத்தம்பியை ஏத்திக்கொண்டு*
*ராசவாகனம் பறந்தது*



### *காட்சி 2:*

**புரட்டாதி முதல் சனி 2021**

*சாராயக் கடைதிறந்து*
*காவலுக்கு துரைநிற்க*
*'நேராக வரிசையில*
*இடைவிட்டு நிண்டு வாரும்'*
*எண்டு கறாறாய் சொல்லி*
*பேந்து கள்ளன் உவன்*
*ஆருக்கும் தெரியாமல்*
*அதுக்கை ஒளிச்சு*
*அரிசி மா சீனி*
*பருப்பும் வித்தானாமெண்டு*
*அருந்தவ பாலனை*
*அள்ளிச் சென்றார்கள் ஜீப்பில்*

# காலம் என்னும் பெரு வலையின் இழைகள்



சஞ்சயன்


வாழ்வு பல நகரங்களுக்குள் என்னை அழைத்துப்போய் ”வாழ்ந்து பார்” என்றிருக்கிறது. வாழ்ந்துமிருக்கிறேன். கெட்டுமிருக்கிறேன். அவற்றுள் முக்கியமானது ஒஸ்லோ.
பெரும் மனப்பாரத்துடன், இற்றைக்கு 14 வருடங்களுக்கு முன், இரண்டாம் முறையாக இந்நகரத்தினுள் குடிவந்தபோது தங்குவதற்கு இடமிருக்கவில்லை, நிலக்கீழ் வாகனத்தரிப்பிடத்தில், ஒரு பழைய வாகனத்தினுள் சில காலங்களைக் கடந்து கொண்டேன். வேலை யில்குளித்துக்கொள்வேன். கடைகளிலே உணவு. இருகரங்களையும் நீட்டி என்னை அணைத்துக் கொண்டது இந்நகரம்.

நண்பர்களைத் தேடிப்போக விரும்பாத மன அழுத்தம் நிறைந்த காலம் அது. அதன்பின் மெது மெதுவாக வேரூன்றி எழுந்து, நிமிர்ந்து சில காலங்களின்பின், மீளவும் விழுந்து, அடியுடன் சாய்ந்து, தற்போது மீளவும் உயிர்த்துக் கொண்டிருக்கிறேன்.

முன்பைப் போலல்லாமல், பல விடயங்களில் இருந்து ஒதுங்கியி ருப்பதால், மனம் அமைதியாகவும் ஆறுதலாகவும் இருப்பது போல வும், வாழ்வு என்னை தன் தோளில் தூக்கிப்போகிறது போலவும் உணர்கிறேன்.

1989 ஆண்டுக் காலத்திலும் 5 ஆண்டுகள் இங்கு குடியிருந்திருக்கி றேன். நான் நண்பர்கள் புடைசூழ அலையும் மனிதனல்லன். தன் னந்தனியே அலையும் பிரகிருதி. அன்றும் இன்றும்.

நகரின் மத்திய பகுதி, புறநகர்கள், வெளிநாட்டவர் செறிந்துவாழும் பகுதிகள், சமூகத்தின் கடைநிலை மனிதர்களான போதைப்பொருள் நுகர்வாளர்கள், பால்வினைத்தொழில் புரிபவர்கள், வதிவிட அனு மதியற்றவர்களின் இரகசியச் சந்திப்பிடங்கள், திருட்டுப்பொருட்கள் விற்பனை செய்யுமிடங்கள், செல்வச் செழிப்புள்ள பகுதிகள், நூதன





சாலைகள், பிரபல்யமான உணவகங்கள், புரா தனக் கட்டடங்கள், வாசிகசாலைகள், கலையகங் கள், கண்காட்சி நிலையங்கள், பூங்காக்கள் என நகரின் அனைத்து இடங்களும் பெரும்பாலும் எனக்குப் பரீட்சயமா னவை.

நன்மையாகவும் தீமையாகவும் நகரின் அனைத்து இடங்களிலும் அவைபற்றிய ஒரு சிறு நினைவாவது மனதின் ஆழத்தில் உறங்கிக் கொண்டிருக்கும். அவ்விடங்களைக் கடந்து செல்லும்போது அவை உயிர்பெறுவதுண்டு.

***

முதன் முதலில், எனது இளைய மகளை இந் நகருக்கு அழைத்து வந்தபோது அவளுக்கு 3-4 வயதிருக்கும். Disney on ice பார்ப்பதற்காக 600 கி. மீ கடந்து வந்திருந்தோம். அப்போதுதான் முதன் முதலாக நிலக்கீழ் தொடரூந்தையும், வீதியின் நடுவே தண்டவாளத்தில் ஓடும் ட்ராம்ப் வண்டியையும் கண்டாள். பெருவீதிகளில் இராட் சத அட்டைகள்போல் ஏதோ நகர்வது அவளுக்கு அதிசயமாக இருந்திருக்கவேண்டும். அதில் பயணிக்க வேண்டும் என்றாள். அவளுக்காகவே ஒரு மாலை முழுவதும் ட்ராம் வண்டியில் ஏறி, இறங்கி, நிலக்கீழ் தொடரூந்தில் நீண்ட தூரம் பயணித்துக் கொண்டிருந்தோம். ஜன்னலோ ரங்களில் உட்கார்ந்திருந்தபடியே கண்களில் பெருங் கனவுடன் எனது கைகளைப்பற்றியபடி வந்து கொண்டிருந்தாள்.

அவள் அயர்ச்சியுற்று, சற்று நேரம் பயணிகளின் வாங்கு ஒன்றில் காலைநீட்டி எனது மடியில் உறங்கிப்போனாள். நான் அவளின் கேசத்தினை கோதியபடி ஆழ்ந்த அவளின் உறக்கத்தினை ரசித்துக் கொண்டிருந்தேன்.




18 ஆண்டுகளின் பின் இன்றும், பயணிகள் ஒய்வெடுக்கும் ”அந்த வாங்கு”, நகரின் மத்திய நிலக்கீழ் தொடரூந்து நிலையத்தில் இருக்கிறது. தினமும் அதனைக் கடந்து வேலைக்குச் செல்லும்போது மகளின் வாசனையை உணர்வேன்.

***

இதேபோன்று பல வேதனையான, அவமானப்பட்ட நிகழ்வுகள் நடந்த இடங்களும் இந்த நகரத்தில் உண்டு. நகரமும் போதி மரங்களாகலாம் என கற்றுக்கொண்டது இங்குதான்.

இந்நகரத்தில் ஒரு அரசனின் பெயரைக்கொண்ட, நீண்டதொரு வீதியிருக்கிறது. நகரத்தின் மத்தியிலுள்ள புகையிரத நிலையத்தில் தொடங்கி அரசனின் மாளிகையில் முடிவடையும் அது.
நான் துன்புற்றிருக்கும்போதும், மகிழ்வுடன் இருக்கும்போதும் அவ்வீதியில் நடந்துகொண்டிருப்பேன். தோழனைப்போன்று மனநிலைக்கு ஏற்ப என்னுடன் துணைநிற்கும் பெருவீதி அது. அவ்வீதியைப் பற்றிச் சொல்வதற்கு அத்தனை இருக்கிறது.

***

சில நாட்களுக்கு முன் கடும் மழை. நகரத்தின் மத்தியில் ஒரு நிகழ்வில் கலந்துகொள்ள வேண்டியுமிருந்தது. நண்பர் ஒருவரும் தன்னைச் சந்திக்குமாறு கேட்டுக்கொண்டிருந்தார்.

நகரின் கிழக்கே, நண்பரைச் சந்தித்துவிட்டு நடந்து வந்துகொண்டிருக்கிறேன், காற்றின் வேகத்தில் குடை உடைந்துபோனது, வானம் உடைந்து விட்டதுபோன்று மழை கொட்டிற்று. அருகிருந்த கட்டடத்தினுள் கால்கள் என்னை இழுத்துப்போயின. வாசல் திறந்தேயிருந்தது, பழக்கமான இடமாயிற்றே என்று மனம் முணுமுணுத்தபோது நிமிர்ந்து சுற்றாடலைப் பார்த்தேன்.

***

1980களின் இறுதி, புகைப்படமெடுப்பது எனது முக்கிய பொழுதுபோக்காக இருந்த காலம். ஒஸ்லோவில் பழமைவாய்ந்ததொரு “புகைப்பட ஆர்வலர்களுக்கான சங்கம்” உண்டு. அங்கு அங்கத்தவனாக இருந்து கற்றதும் பெற்றதும் ஏராளம். வாரத்தில் பல நாட்கள் அங்கு செல்வேன். பயிற்சிப்பட்டறைகள், கருத்தரங்குகள், புகைப்படப் போட்டிகள், தொழில்நுட்ப அறைகள் என பல வசதிகள் அங்கிருந்தன.

ஒரு நாள், நகரத்தின் அடையாளம் என்ற தலைப்பில் படம் எடுத்து வரச்சொன்னார்கள். நண்பர்கள் இருவருடன் இணைந்து இதுபற்றி இயங்கிக் கொண்டிருந்தோம்.

ஒரு வாரமாயிற்று. திருப்தியாக எதுவும் கிடைக்கவில்லை. அப்போதுதான் அவர் நினைவில் வந்தார். வீதியில் அலையும், அழுக்கான, நல்வாசனையற்ற வயதான பெண்மணி. குப்பைகளுக்குள் இருக்கும் பெறுமதியான பொருட்களையும் போத்தல்களையும் சேகரிப்பது, பிச்சையெடுப்பது, நகரத்தினுள் தனது தள்ளு வண்டிலுடன் அலைவது, தேவாலயத்திற்குச் செல்வது, திடீர் திடீர் என்று வடக்கு நோர்வேயின் மொழியாடலில் தூசணத்தில் திட்டுவது மறுநிமிடம் கர்த்தரை நோக்கிப் பாடுவது என்று வாழ்வைக் கடத்திக்கொண்டிருந்தவர் அவர். சற்று மனசமநிலை குழம்பியவர்.



தான் சேகரித்துக்கொள்ளும் பணத்தில் பிச்சையெடுப்பவர்களுக்கு உணவு வழாங் குவார். இராமாயணத்தில் வரும் கூனி போன்று வளைந்த முள்ளந்தண்டு. பெயர் Aagot Hanshaugen. பல முறை வீதியில் நின்றபடி உரையாடியி ருக்கிறோம். எனவே சற்றுப்பழக்கம் இருந்தது. நகருக்குள் அவர் பிரசித்தமானவர். அனைவரும் அவரை அறிவர்.

நண்பர்களிடம் அவரைப்பற்றிச் சொன் னேன். சம்மதித்தார்கள். அவரைதேடிப்பிடிக்க இர ண்டு நாட்களாயிற்று. தேநீரகத்தில் இருத்தி விடயத்தைச் சொன்னோம். உண வும், சற்று பணமும் வேண்டும். எத்தனை படம் வேண் டுமாலும் எடுங்கள் என்றார்.
வீதிச் சூழ்நிலைகளில் அவரைப் படம் எடுத் தோம். அவரது வீட்டுக்கு அழைத்துப்போக மறுத்துவிட்டார். மறுநாளும் படங்கள் எடுப் பதற்கு ஒப்பந்தம் செய்துகொண்டபோது, ஒரு குறிப்பிட்ட இடத்தைச் செல்லி, ‘‘அங்கே நில்லுங்கள் வருவேன்” என்றுவிட்டு விடை பெற்றார்.

மறுநாள், அவர் குறிப்பிட்ட இடத்தில் நின்றி ருந்தேன். தூரத்தே அவர் தனது கூனிய முதுகுடன் மெதுவாக வந்துகொண்டிருந்தார். இரண்டு கைகளிலும் குப்பைகளில் பொறுக் கிய பொருட்கள்.

அருகில் இருந்த பூக்கடைக்கு வெளியே தனது பைகளை வைத்துவிட்டு உட்சென்றார். பிச்சை எடுக்கிறாராக்கும் என்று நினைத்தேன். கையில் அழகிய பூங்கொத்துடன் வெளியே வந்தார். எனக்குள் “யாருக்கு இந்தப்பூக்கள்?” என்ற ஆர்வம் வந்திருந்தது. எனவே மறைந்து நின்று அவதா னிக்கலானேன்.

***

வடக்கு நோர்வேயை பிறப்பிட மாகக்கொண்டு 24. september 1919 பிறந்த இவருக்கு எட்டு சகோதர சகோதரிகள் இருந்தனர். இரண் டாம் உலக மகாயுத்தத்தின்போது சுவீடனுக்கு இடம்பெயர்ந்து, ஒரு வீட்டில் வேலைக்காரியாக தொழில் புரிந்த அந்நாட்களிலேயே மன அழுத்தங்களினால் பாதிக்கப்பட்டி ருந்திருக்கிறார். சுவீடனில் அவர் வேலைசெய்த வீடு எரிந்துபோன போது அனைத்தையும் இழந்து மேலும் மனஅழுத்தத்திற்கு உட் பட்டு நோயாளியாகினாராம்.

பின்பு, வடக்கு நோர்வேயில் Bod என்னும் இடத்திலும் Oslo விலும் மனநல மருத்துவமனைகளில் சிகிச்சை அளித்திருக்கிறார்கள். இந்நாட்களில் அவரது நோயினை கட்டுப்படுத்த நினைவுகளை அகற்றும் Lobotomy சத்திர சிகிச்சை நடைபெற்றதாம். பிற்காலத்தில் இச்சத்திர சிகிச்சை முறை நாடாளவிய ரீதியில் தடைசெய்யப்பட்ட போது, இவருக்கு அரசு நட்ட ஈடும் வழுங்கியது.



இவர் திருமணம் செய்திருந்தார் என்று ஒரு இணையைத்தளத்தில் வாசித்தேன். பிற்காலத்தில் வயோதிபர்களை பராமரிக்கும் இடத்தில் சுத்திகரிப்புத் தொழில் செய்து வந்தாராம்.

***

வித்தார். உரத்து கிறீஸ்தவப் பாடலைப் பாடியபடி வீதியைக் கடந்து, அருகே இருந்த தேவாலயத்தினுள் புகுந்தார். எனது நண்பர்களைக் காணவில்லை யாதலால் நான் அங்கு நின்றிருந்தேன். சற்று நேரத்தில் நண்பர்கள் வந்தார்கள்.

முதலாவது வாங்கில் எம்மை இருத்தி விட்டு, தேவாலயத்தினுள் மெழுகுதிரிகளை ஏற்றினார். முழந்தாளிட்டு செபித்தார். எடுத்துவந்த பூக்களை உதிர்த்து சிலுவையின் காலடியில் பரப்பிவிட்டு உருக்கமான குரலில் தேவாரம் ஒன்றைப் பாடினார்.

அவரது உருக்கமான குரல் தேவாலயமெங்கும் பரவிற்று.

***

அவரைப்பற்றிய எமது புகைப்படங்களை ஒரு பத்திரிகை நடுப்பக்கம் முழுவதிலும் பிரசுரித்திருந்தது. எமக்கு பலத்த பாராட்டும் கிடைத்தது.

இப்பத்தியை எழுதிவிட்டு இணையத்தில் அவரைப் பற்றி என்ன எழுதப்பட்டிருக்கிறது என்று தேடினேன்.

Krvikhamn என்பவர் 13 September 2019 அன்று தனது முகப்புத்தகத்தில் இவ்வாறு எழுதியிருந்தார்:

***

1990இல் ஒரு நாள், ஒஸ்லோவின் பழைய விமானநிலையத்தில் Wien நகருக்குச் செல்வதற்காய் காத்திருந்தேன். ஒரு வயதான பெண் அனைவரிடமும் பிச்சை எடுத்துக்கொண்டிருந்தார்.

என்னிடமும் வருவார். ஏன் பிச்சை போடமாட்டேன் என்பதற்கான வாதங்களை மனது தயார்ப்படுத்தியிருந்தது. அங்கிருந்த அனைவரும் வசதிபடைத்தவர்கள். எவரும் அவருக்குப் பிச்சை போடவில்லை. என்னிடம் வந்தார். நானும் பிச்சை போடவில்லை.

> **“பிச்சை கேட்பது என்பது, நான் என்னிடம் இருப்பதை பகிர்வதற்கான சந்தர்ப்பம் என்பதைப் புரிய ஆரம்பித்தேன். தவிர, இன்னொருவரது வாழ்வினை முன்அபிப்பிராயங்களுடன் அணுகுவது தவறு என்பதும், வாழ்வு எனக்குத் தந்திருக்கும் வசதிகளை கடைநிலை மனிதர்களுடனாவது பகிர மறுப்பது, நான் எத்தனை மனவறுமையைக் கொண்டிருக்கிறேன் என்பதைக் காட்டுகிறது என்பது புரிந்தது”**

அவர் நான் நின்றிருந்த இடத்தை நோக்கி வந்து கொண்டிருந்தார். நான் மறைந்து கொண்டேன்.

அவர் வந்த வழியில் ஒருவர் விழுந்து கிடந்தார். போதைப்பொருள் பாவனையாளராக இருக்கலாம். அவரருகே சென்று உரையாடுகிறார். தனது கையில் இருந்த உணவினையும் ஒரு பிஸ்கட் பெட்டியையும் அவருக்குக் கொடுத்து விட்டு, வீதியைக் கடந்து செல்ல தயாராகியபோது வாகனங்கள் அவருக்கு வழி விட்டன. கையைத் தூக்கி நன்றியறி


காத்திருந்தோம்.

தேவாலயத்தில் இருந்து வெளியே வந்து எம்மை உள்ளே அழைத்துச் சென்றார்.

மிகப் பழமைவாய்ந்த 1869ஆம் ஆண்டு கட்டப்பட்ட தேவாலயம் அது. பழங்காலத்து தேவாலயங்களுக்கு இருக்கும் தெய்வீக உணர்வும் வாசனையும் பேரமைதியும் அங்கிருக்க, “வாருங்கள் வாருங்கள்” என்று எம்மை உள்ளழைத்துச்சென்ற அவர் குரல் தேவாலயத்தினுள் எதிரொலித்தது.







என்னைக் கடந்துபோனபோது "நீயும் உன்னை கிறீஸ்தவன் என்கிறாய்?" என்றுவிட்டுக் கடந்துபோனார்.

அவரது வார்த்தைகளை உள்வாங்கிப் புரிந்துகொள்ள எனக்கு நேரம் எடுத்தது. பிச்சை கேட்பது என்பது, நான் என்னிடம் இருப்பதை பகிர்வதற்கான சந்தர்ப்பம் என்பதைப் புரிய ஆரம்பித்தேன். தவிர, இன்னொருவரது வாழ்வினை முன் அபிப்பிராயங்களுடன் அணுகுவது தவறு என்பதும், வாழ்வு எனக்குத் தந்திருக்கும் வசதிகளை கடைநிலை மனிதர்களுடனாவது பகிர மறுப்பது, நான் எத்தனை மனவறுமையைக் கொண்டிருக்கிறேன் என்பதைக் காட்டுகிறது என்பது புரிந்தது என்றும் Aagot அவர்கள் 31. oktober 2003 இல் இறந்துபோனார் என்றும் அவர் எழுதியிருந்தார்.

***

தனது வறுமையிலும் நோய்மையிலும் சக மனிதனையும், மற்றையவரது வலிகளை தனதாகவும் உணர்ந்த பெருமனம் கொண்ட மனிதர் Aagot Hanshaugen. வறுமையிலும், அன்பு என்பதே கிறீஸ்தவத்தின் அடிப்படைத் தத்துவம் என்பதைப் புரிந்தவர். அதன்படி வாழ்ந்தவர்.

1992ஆம் ஆண்டு நான் ஒஸ்லோவை விட்டு இடம்பெயர்ந்தேன். வாழ்வு என்னும் பெருங்காற்றில் Aagotஐ நினைவுகள் அகன்றுவிட்டிருந்தன.

***

வானமுடைந்து கொட்டிய பெருமழை, ஏறத்தாழ 31 வருடங்களின்பின், அவரைச் சந்தித்த அதே தேவாலயத்தினுள் என்னை ஒதுங்க வைத்திருக்கிறதே, ஏன்?

**காலத்தைப்போன்று வலைபின்னக் கூடியவர்கள் எவருமில்லை.**

■

## வெல்லுங்கள் ரூபா 5000

### இடமிருந்து வலம்

1. இலங்கையில் தற்போது இரசாயன உரத் திற்குப் பதிலாக இதனை ஊக்குவிக்கின்றார்கள்.

6. பிரபல சமூக வலைத் தளத்தை ஞாபகமூட்டும். முதல் சொல்

8. தமிழில் உள்ள ஒரு வகைப்பள்ளு

10. ஒரு வகை வித்தை விளையாட்டு ஒரு சொல் மறைந்துள்ளது.

13. முஸ்லீம் விவாக நீதிமன்றங்களை இப்பெயரை அடையாக வைத்து அழைப்பர்.


14. ஆப்கானில் உள்ள தற்போது பிரபல்யம் பெற்ற மாநிலம் ஒன்று

15. 16 வகை இராகங்களில் ஒன்று

16. கணவன்- மனைவி இல்லற வாழ்வு- குழம்பியுள்ளது.

தொகுப்பு : செ.ஸ்ரீனிவாசன்

# சொல்லிழை



### மேலிருந்து கீழ்

1. பிரபல இந்திய கிரிக்கெட் துடுப்பாட்ட வீரர்.

2. காலநிலை வேறுபாடு

3. வெள்ளி கிரகம் - இவ்வாறும் அழைப்பர் - குழம்பியுள்ளது.

4. பட்சி

5. துறவி

7. நல்ல மகளை இவ்வாறும் சொல்வர் - குழம்பியுள்ளது

9. கடும் கோபம் - குழம்பியுள்ளது.

11. கடும் வறுமையை இவ்வாறும் அழைப்பர்.

12. இமயமலையில் உள்ள மலைச் சிகரம் - குழம்பியுள்ளது.

15. போட்டிகளில் விளையாடும் குழுக்களை இவ்வாறும் அழைப்பர்.

சொல்லிழை போட்டியில் வெற்றிபெறும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 5000 ரூபா பரிசு வழங்கப்படும். அடுத்த வெற்றியாளர்கள் நால்வரின் பெயர், விபரங்கள் இங்கே பிரசுரிக்கப்படும்.

சரியான பதில்களை sollilai@ullamm.Com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு உங்கள் பெயர், தொலைபேசி இலக்கம், முகவரி, புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் விபரங்களுடன் அனுப்பி வையுங்கள்.



# மஹாகவி என்

இந்த ஆண்டு மஹாகவி உருத்திரமூர்த்தியின் ஐம்பதாவது நினைவாண்டு நினைவு கூரப்படுகிறது. கொரோனா வீட்டு முடக்கம் உலகின் பல பாகங்களிலும் இருக்கின்ற மஹாகவியின் வாசகர்களை மெய்நிகர் வழியாய் பல இடங்களிலும் இருந்து ஒன்றிணைக்க வைக்கிறது. மஹாகவியின் நூல்களை வெளியிட்டு வரும் பேராசிரியர் நுஃமான் இவ்வாண்டும் ஜீவநதி பதிப்பகம் மூலம் மஹாகவி கவிதைகள், மஹாகவி காவியங்கள், மஹாகவி நாடகங்கள் எனும் மூன்று நூல்களை வெளியிடுகின்றார். ஏற்கனவே வெளியிடப்பட்டிருந்த நூல்களின் மீள்வருகை புதிய வாசகர்களைச் சென்றடைய வாய்ப்பொன்றை ஏற்படுத்தியிருக்கிறது.

மஹாகவி உருத்திரமூர்த்தி 1927ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9ம் திகதி அளவெட்டியில் பிறந்தார். மஹாகவி, பண்டிதன், புதுநாப் புலவன், மாபாடி, மகாலட்சுமி எனும் புனைப்பெயர்களில் படைப்புக்களை இதழ்களில் எழுதி வெளியிடத்தொடங்கிய அவருக்கு மஹாகவி எனும் பெயரே நிலைத்து விட்டது. மறுமலர்ச்சி, ஈழகேசரி, கலைமகள் போன்ற இதழ்களில் மஹாகவியினுடைய படைப்புக்கள் வெளி வந்தன. கவிஞனாக, நாடகாசிரியராக தன் படைப்புக்களுக்கான விமர்சகராக பல தளங்களில் மஹாகவி செயற்பட்டார். அரசபணியில் பெறும் அனுபவங்கள் அவர் படைப்புக்களுக்கான கருக்களாக விளங்கின. ஈழத்தில் கவிதை மூலவர்களில் ஒருவராக மஹாகவி அடையாளப்படுத்தப்படுகின்றார்.

மஹாகவி ஏனைய கவிஞர்களிடமிருந்து தன்னை தனித்துவமாக அடையாளப்படுத்த யதார்த்தத்தை காட்சிப்படுத்துகிறார். கவிதையின் பொருள் பரந்தமை என்பதையும் சம கால கவிஞர்கள் பாடவேண்டிய பொருள் பரந்தது என்பதையும்


*‘இன்னவைதாம் கவிஎழுத*
*ஏற்ற பொருள் என்று*
*பிறர் சொன்னவற்றை,*
*நீர் திருப்பிச் சொல்லாதீர்,*
*சோலை கடல் மின்னல்*
*முகில், தென்றலினை*
*மறவுங்கள், மீந்திருக்கும்*
*இன்னல், உழைப்பு,*
*ஏழ்மை, உயர்வு*
*என்பவற்றை பாடுங்கள்’*

என்று தன் கவிதையில் வெளிப்படுத்துகிறார்.

மஹாகவி தன் படைப்பாற்றலை கவிதைகள், பாநாடகங்கள், நவீன காவியங்கள் என பல தளங்களில் வெளிப்படுத்தியிருக்கிறார். குறும்பா, கவியரங்கக் கவிதைகள், வாழ்த்துக்கவிதைகள், முன்னுரைக்கவிதைகள் என பல தளங்களில் வெளிப்படுத்தியிருக்கிறார். உரைநடைமரபு தமிழில் வேரூன்றிய பின் முன்னுரைகள் உரையாகவே எழுதப்பட்டன. ஆனால் மஹாகவியோ முறப்பாட்டு, முன்னீடு என செய்யுள் மரபில் எழுதுகிறார். முருகையனின் ஒருவரம் மொழிபெயர்ப்புக் கவிதைத்தொகுதிக்கு

*சற்றெம் நிலையைச்*
*சரிபார்த்துக்*
*கொள்வோமே:*
*மற்றோர் படைப்பின்*
*மகத்துவத்தை ஆய்வோமே:*

## றோர் ஆளுமை



*உற்றார் உறவார் உணர்விற்*
*பிறந்தவற்றைக் கற்று*
*மகிழ்வோமே:*
*அன்னவர்கள் காவியத்துட்*
*பெற்ற அனுபவத்தை நம்பாற்*
*பெயர்த்தளிக்கும் நற்றவத்தில்*
*ஈடுபட்டார் நன்றே*
*புரிகின்றார்*

என செய்யுள் மரபில் எழுதுகிறார். மஹாகவியின் படைப்பு தளங்களில் தன் முன் வாழ்ந்த ஆளுமைகளை போற்றி பாடிய பாடல்களும் முக்கியமானவை. பாரதி, காந்தி, சுவாமி விபுலானந்தர், அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் போன்றவர்களை புகழ்ந்து கவிதைகளை இயற்றியுள்ளார். மறுமலர்ச்சி இதழிலே பாரதியை

*'அலையெடுத்த கடலென*
*ஆற்றல் கொண்ட பாரதிக்*
*கலைஞனின் கவிதை இக்*
*காசினியெலாம் பெரும்*
*ஒலிகிளர்த்த வேணும் நாம்*
*ஒன்றுபட்டு நின்று பல்*
*சிலைசெதுக்கி நாட்டுவோம்*
*செந்தமிழர் நாடெல்லாம்'*

என புகழ்ந்து பாடுகிறார். விபுலானந்தரை

*'ஆங்கிலத்துக் கவிதை*
*பலப்பல*
*அருமையாகத் தமிழ்*
*செய்து தந்தனன்*
*நாங்கள் மொண்டுபருகி*
*மகிழவும்*
*நன்று நன்றென உண்டு*
*புகழவும்...'*

என தன் கவிதைகளில் புகழ்ந்து பாடுகிறார்.

மஹாகவியின் படைப்புக்களில் குறும்பா தனித்துவமுடையது. தமிழ் சித்தர் மரபில் காணப்படும் பாடல் வடிவங்களை ஒத்த வடிவத்தை உள்ளீர்த்து சமூக முரண், சீரழிவுகள் போன்றவற்றை தத்ரூபமாக குறும்பாவில் வெளிப்படுத்துகின்றார். கோட்டோவியங்களோடு வெளிவந்த குறும்பா சமூக கண்ணாடியாய் விளங்குகிறது. சமூகத்தில் காணப்படும் சீதன நிலையை

*'சொந்தத்திற் கார்,*
*கொழும்பிற் காணி*
*சோக்கான வீடு, வயல்,*
*கேணி*
*இந்தளவும் கொண்டுவரின்*
*இக்கணமே வாணியின் பாற்*
*சிந்தை இழப்பான்*
*தண்டபாணி'*

என தத்ரூபமாக காட்டுகிறார். மஹாகவியின் காலத்தில் தொலை பேசி பாவனை பரவலடைகின்றது. தொலைபேசிக் காதல் ஒன்றை

*'தொலைபேசியிற் பேசிப்*
*பேசித்*
*தொந்தரவுக் குள்ளானான்*
*காசி*
*மலரை மணந்தான்! எனினும்*
*வாழ்கின்றான் - மீண்டும்*
*அதே*
*தொலைபேசியிற் பேசிப் பேசி'*

என குறும்பாவில் தத்ரூபமாக காட்சிப்படுத்துகின்றார். சிரிப்பிற்கும்

சிந்தனைக்கும் கருத்திற்கும் கற்பனைக்கும் பெருவிருந்தாய் இக்குறும்பாக்கள் அமைகின்றது. மஹாகவியின் இக்குறும்பா மரபை கோவேந்தன், ஈரோடு தமிழன்பன், கவிஞர் மீரா போன்றவர்கள் பின்பற்றினர்.

கோடை, புதியதொரு வீடு, முற்றிற்று, திருவிழா, கோலம், பொய்மை, சேனாதிபதி, வாணியும் வறுமையும், அடிக்கரும்பு முதலிய பாநாடகங்களை மஹாகவி எழுதியுள்ளார். கோடை, புதியதொரு வீடு, முற்றிற்று முதலியன மேடைக்காகவும் ஏனையவை வானொலிக்காகவும் எழுதப்பட்டன. கோடையும் புதியதொரு வீடும் பல தடவைகள் இலங்கையிலும் புலம் பெயர் தேசங்களிலும் மேடையேற்றப்பட்டுள்ளன. கோடை காலனித்துவ கால சமூகமாறுதல்களையும், புதியதொரு வீடு கரையோர கிராமமொன்றில் வாழும் குடும்பம் அங்கு நிகழும் இன்னல்களையும் வைத்து எழுதப்பட்டிருக்கின்றன. முற்றிற்று நோயகம் ஒன்றில் நிகழும் சம்பவங்களை வைத்து எழுதியுள்ளார். சாதாரண உரையாடல் வழக்குகள் நாடகத்தினுள் உள்நுழைந்து செல்வாக்கு செலுத்திய காலத்தில் செய்யுள் மரபில் சமூகத்தினை படம்பிடித்து காட்டியமை மஹாகவியின் படைப்பாற்றலை வெளிப்படுத்துகின்றது. யாழ்ப்பாண பண்பாட்டையும் சமூகச்சூழல், சாதியக் கட்டமைப்பு என்பவற்றையும் பா நாடகங்களில் காட்டுகிறார். நெய்தல் நிலத்தின் வாழ்வியலை புதியதொரு வீட்டில் தத்ரூபமாய் காட்சிப்படுத்துகிறார்.

*‘சிறுநண்டு மணல் மீது*
*படம் ஒன்று கீறும்*
*சிலவேளை அதைவந்து*
*கடல் கொண்டு போகும்*
*கறிசோறு பொதியோடு*
*தருகின்ற போதும்*
*கடல் மீதில் இவன்*
*கொண்ட பயம் ஒன்று*
*காணும்’*

என்று கடற்கரை சூழலையும் இரங்கல் ஒழுக்கத்தையும் படிமமாய் காட்டுகிறார். 1950களின் பின் வானொலி நாடகங்களும் ஈழத்து கவிஞர்களால் பரவலாக எழுதப்படுகின்றன. மேடையேற்றத்திற்கு அல்லாது கவியரங்க கவிதைகள் போல் இவை வானொலிகளில் ஒலிபரப்பு செய்யப்பட்டன. மஹாகவி ஏழு வானொலி நாடகங்களை இயற்றியுள்ளார். யதார்த்த வழக்கையும் யாழ்ப்பாண மொழி வழக்கையும் செய்யுள்களில் கையாண்டுள்ளார். புராண மரபுகளை விடுத்து சமகால சம்பவங்களை நாடகமாக்க வேண்டிய தேவை இருந்ததை

**மஹாகவி தன் படைப்புக்களுக்கான விமர்சகராகவும் விளங்குகிறார்......**

**....... தன் படைப்புக்கள் மீதான மதிப்பீட்டை மேற்கொள்ளும் ஒருவராக தன்னை தமிழ் சூழலில் அடையாளப்படுத்தியிருக்கிறார்.**



**சாரங்கன்**

மஹாகவி

*‘புதிய களங்கள்,*
*புதிய போர்கள்*
*புதிய வெற்றிகள் -*
*இவை புனையும்*
*நாடகம் வேண்டி*
*நம்மொழி கிடந்தது*
*கோடையை எழுதும்*
*காலமும் குதிர்ந்தது’*

என்று கோடையின் பிறப்பில் குறிப்பிடுகின்றார்.

மஹாகவியின் கவி ஆளுமைத் திறன் அவரின் நவீன காவியங்களில் வெளிப்பட்டு நிற்கிறது. கல்லழகி, சடங்கு, ஒரு சாதாரண மனிதனது சரித்திரம், கண்மணியாள் காதை, கந்தப் பசபதம், தகனம் என்பன அவர் எழுதிய நவீன காவியங்களாகும். தகனம் மஹாகவியும் முருகையனும் பரிசோதனை முயற்சியாக இணைந்து எழுதிய படைப்பாகும். இவை சமூக யதார்த்த படைப்புக்களாகவும், விஞ்ஞான கற்பனை படைப்புக்களாகவும் காணப்படுகின்றன.

மஹாகவி தன் படைப்புகளுக்கான விமர்சகராகவும் விளங்குகிறார். தன் படைப்புக்களை நல்லவை, அல்லவை என வகைப்படுத்துகின்றார். நல்லவைக்குள் காவியங்கள், குறும்பா, பொருள் நூறு, பெரும்பாலான நாடகங்கள் என்பவற்றையும் அல்லவையாக அடிக்கரும்பு, வாணியும் வறுமையும், சேனாதிபதி, பொய்மை ஆகிய வானொலி நாடகங்களையும் உள்ளடக்குகின்றார். தன் படைப்புக்கள் மீதான மதிப்பீட்டை மேற்கொள்ளும் ஒருவராக தன்னை தமிழ் சூழலில் அடையாளப்படுத்தியிருக்கிறார்.

மஹாகவி ஓர் வித்துவ செருக்கோடு தன் படைப்புகளில் புதுமைகளை புகுத்திய அதே வேளையில் சமூகம் கவிஞர்களை அங்கீகரிக்காது இருப்பதைக் கண்டு வேதனைப்பட்டிருக்கிறார்.

*‘சீ! கற்ற மக்கள் சிறந்த*
*கவிதைக்கா*
*ஆகக் குறைந்த*
*தரைலட்சம் தாரார்கள்*
*போகட்டும் நண்பா,*
*புலவர்கள் பாட்டெழுதிச்*
*சாகட்டும். பின்னர்*
*சமைக்கட்டும்*
*கற்சிலைகளை’*

என வாணியும் வறுமையும் நாடகத்தில் வெளிப்படுத்தியிருக்கிறார்.

மறைந்து ஐம்பதாண்டுகளின் பின் அக்கவிஞன் பேசப்பட அக்கவிஞனின் மொழி புனையும் ஆற்றலும் கவியாற்றலுமே காரணம். அக்கவிஞனுக்கு செய்யும் கைமாறு அவரது படைப்புக்களை பேசலும் எழுதலும் பகிர்தலும் பயன்படுத்தலுமே. ■

கவிதையும் கத்தரிக்காயும்
எனக் கோபம் கொண்டு
எழுதிய கடதாசியை கிழித்து வீசினேன்.
ஒவ்வொரு துண்டுகளும்
வெவ்வேறு பறவைகளாக
உருக்கொண்டு
பறந்து சென்றன.

**டீன் கபூர்**



நூலக நிறுவனம் தலைமை அலுவலகம்
இல.55, சோமசுந்தரம் ஒழுங்கை ,
சுண்டிக்குளம்,
யாழ்ப்பாணம்

+94 21 223 1292
+94 77 898 3285

noolahamfoundation@gmail.com
info@noolahamfoundation.org

Account Number: 1100063121

Commercial Bank of Sri Lanka

Commercial Bank Thirunelvely Branch

SWIFT Code: CCEYLKLX





# நூலக



இலங்கையின் தமிழ் பேசும்
கலாச்சாரங்கள், எழுத்தாவண
அனைத்து விதமான ஆவணங்களை
தளங்களினூடாக திறந்த அணுக்கத்தி
வரலாற்றுப் பணியினை உலகலாவிய ரீதி
நிறுவனம் செயற்படுத்திக் கொண்டிருக்கின்ற
இணைப்பாளர்கள், ஆவணப்பங்காளர்கள்
பல்வேறு துறைகளில் உள்ள அனைவரும் இ





எமது முன்னோர் அளித்த அருஞ்செல்வங்க
வரலாற்றுப் பதிவுகள், போன்றன பல பாதுக
காலஓட்டத்தில் அழிவடைந்து விட்டன. இன்னு
பகிரப்படாமல் அழிவடைந்து கொண்டிருகின்ற
எனப் பலதரப்பட்ட காரணிகள் இவற்றினை
இலங்கையின் தமிழ் பேசும் சமூகம் சார்
திரிக்கப்பட்டும், அழிக்கப்பட்டும், அழிந்துவ
இவ்வாவணங்களை பாதுகாப்பதையும்
பகிர்வதனையும் எவ்வாறு உறுதிப்படுத்த
ஆண்டு முதலாக ஓர் கலங்கரையாக வி

**United Kingdom Chapter**

Contact Person : Pathmanabha Iyer
Rathina Iyer

noolahamfoundation@gmail.com

+44 78 6403 7374



நூலகத்தைப் பற்றிய மேலதிக தகவல்
அறிந்து கொள்ளலாம். நீங்களு
வலர்களாகவோ, உள்ளடக்கப் ப
நண்பர்களாகவோ இணை
முடியும். நூலக நிறுவனத்
stagram வாயிலாக நூ
இணைந்திருங்க

**Australia Chapter**

Contact Person: Kopinath Thillainathan

noolahamfoundation@gmail.com

+61 433 482 149





**USA Chapter**
Contact Person: Param Piratheepan

noolahamfoundation@gmail.com

+1 323 679 4666





# நிறுவனம்



ம சமூகங்களின் மரபுரிமைகள், கலை,
ணங்கள், வரலாறுகள், அடையாளங்கள் என
ளையும் நூலகம், ஆவணகம் ஆகிய வலைத்
ல் அனைவருக்கும் பகிர்ந்து வரும் அளப்பரிய
தியில் பதினாறு வருடங்களுக்கு மேலாக நூலகம்
றது. இப்பணியில் பல தன்னார்வலர்கள், உள்ளடக்க
ள், நிதிப் பங்களிப்பாளர்கள், புலமையாளர்கள் என
ணைந்து செயற்பட்டு வருகின்றனர்.

ளான விலைமதிக்க முடியாத எழுத்தாவணங்கள்,
ாக்கப்படாமலும், அனைவருக்கும் பகிரப்படாமலும்
ும் பல எங்கெங்கோ எவருக்கும் கிடைக்கமுடியாமல்,
னை. மேலும் இயற்கை அனர்த்தங்கள், முரண்பாடுகள்
 பாதுகாப்புக்கு பாரிய சவாலாக உள்ளன. மேலும்
 பல வரலாற்று ஆவணங்கள் மறைக்கப்பட்டும்,
காண்டும் உள்ளன. இவ்வாறான நிலைமைகளில்
ம ஏனையோருடனும் எதிர்கால சந்ததிகளுடன்
வது என்பதற்கு நூலக நிறுவனமானது 2005ம்
ங்கி வருகின்றது.



களை நூலக நிறுவன வலைத்தளத்தினூடாக
ம் நன்கொடையாளராகவோ, தன்னார்
ங்களிப்பாளர்களாகவோ மற்றும் நூலக
து நூலக நிறுவனத்துடன் பயணிக்க
தின் Facebook, Twitter, Youtube, In
லக நிறுவனத்துடன் தொடர்ந்து
ள்.







**Norway Chapter**

Contact Person : Sanjayan Selvamanickam

noolahamfoundation@gmail.com

+47 400 55 720

**Canada Chapter**

Contact Person: Meera Bharathy

noolahamfoundation@gmail.com

+1 905 294 6707

**Europe Chapter**

Contact person: Gunarathenam Gopiramanan

noolahamfoundation@gmail.com

+39 329 042 7997

**Singapore Chapter**

Contact person: Thayanthan Thirunavukkarasu

noolahamfoundation@gmail.com

+65 9646 6696

# குறிஞ்சி மலை நகர்
# Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190ஆவது Km இல் 800m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்ல பிரதேச செயலர் பிரிவு


15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான

## காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன்
தேயிலை, கோப்பி கறுவா, மிளகு ஆகிய
பயிர்ச்செய்கையும் பராமரிப்பும்

***அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்***

Diyaluma Falls 13km, Needwood Estate Organic Farm 16km, Adisham Bungalow 20km, Pilkington Point 20km, Lake Richmond 21km, Dambatenne Tea Factory 25km, Bambarakanda Falls 26km, Lipton's Seat 28km, Ellewala Waterfall 33km, Ella Rock 38km, Nine Arch Bridge 40km, World's End Drop 41km Bakers Bend 43km, Rawana Waterfall 44km, Horton Plains National Park 47km, Hakgala Botanical Gardens 53km, Seetha Amman Kovil -Seetha Eliya 55km, Dunhinda Falls 58km, Ambewela Farms 62km, Victoria Park 62km, kathirkamam 88km, Kande Ela Educational Forest Park 66km, Pidurutalagala Mountain 71km, Lunugamvehera National Park 71km, Yala National Park 84km, Udawalawe National Park Safari 90km, Hanuman temple Ramboda 98km




***அருகில் உள்ள நகரங்கள்***

| | |
|---|---|
| Haputala | 16km |
| Diyatalawa | 24km |
| Bandaralawela | 27km |
| Badulla | 55km |
| Nuwara Eliya | 58km |
| Hatton | 98km |
| Hambantota | 108km |
| Pottuvil | 129km |
| Kandy | 142km |
| Colombo | 190km |
| Batticaloa | 199km |

***அருகில் உள்ள விமான நிலையம்***

| | |
|---|---|
| Mattala | 84km |
| Katunayake | 190km |

இது ஒரு
**கற்பகவனம்**
செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd

**தொடர்புகளுக்கு: 0777 43 5557**

## R &C Property Lawyers LLP

**Conveyancing Specialists**





## Raja Thavaraja & Senthuran Thavaraja Solicitors

**UNIT 116 Tooting Works**
**89 Bickersteth Road**
**London SW17 9SH**

0208 772 4920
02086820651

info@rcpropertylawyers.co.uk
www.rcpropertylawyers.co.uk

# எது எமக்கு உகந்த வைத்தியம்?




சித்த வைத்தியமா அல்லது அலோபதியா சிறந்தது என்ற கேள்வி பொதுவாகவே எம்மிற் பலருக்கும் உள்ளது. இதற்கு விரிவான, ஆழமான விளக்கம் ஒன்றை என்னால் தர முடியுமாயினும் சுருக்கமான பதில் ஒன்றைத் தற்போதைக்கு முன் வைக்க விரும்புகின்றேன்.

வைத்தியம் என்றாலே தற்கால சந்ததியினர்க்கு உடனே நினைவுக்கு வருவது அலோபதி 'ஆங்கில' வைத்தியம்தான்.

அலோபதி மருத்துவ முறை தவிர்த்த ஏனைய மருத்துவ முறைகளை மாற்று அல்லது பக்கநிரப்பு மருத்துவம் 'Alternative and Complementary Medicines' என கருதப்படுவது தற்கால சந்ததியினர்க்கு வழக்கமாகிவிட்டது.

நாட்டு 'சித்த' வைத்தியம் என்றால் அடிப்படை ஆதாரம் தேடும் விஞ்ஞான மருத்துவ ஆய்வாளர்கள் நாட்டு வைத்தியத்தை தரம் தாழ்த்திப்பார்க்கிறார்கள். இந்த அவசர வாழ்கை சூழலில் என்ன நோய் என்றாலும் அலோபதி மருத்துவத்தை நாடுவதே உகந்தது என்ற சிந்தனை தற்கால சந்ததியினரிடம் ஊறியிருப்பதில் எந்தவித ஆச்சரியமில்லை.

அலோபதி வைத்தியம் என்பது உடனடித் தீர்வுகளைத் தர வல்லது. உடனடியாக நோய்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரக் கூடிய தன்மைகளை அலோபதி வைத்தியம் தரக் கூடியதுடன் பக்க விளைவுகள் ஏற்படும் என்பதையும் முற்றுமாக ஏற்றுள்ளது.

சித்த வைத்தியம் உடனடியாக நோயைக் கட்டுப்படுத்துவது என்பதற்குப் பதிலாக நோயின் மூலகாரணத்தை கண்டறிந்து நீண்டகால மனவளக்கலை யோகநெறிமுறைகள் உணவுப் பழக்கங்கள், இயற்கை மூலிகை வைத்திய முறைகளினால் நோயிலிருந்து நிரந்தர விடுதலை அளிக்கக் கூடியது. பக்க விளைவுகள் என்பது இவ் வைத்திய முறையில் இல்லை என்றே சொல்லலாம். உடலையும், மனத்தையும் ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும் நீண்ட ஆயுளுடன் பேணக் கூடிய மருத்துவ முறையை இது உள் கொண்டுள்ளது. ஆனால் இவ் வைத்திய முறையினால் உடனடிப் பலன்கள் என்பது அலோபதி வைத்தியம் அளவுக்கு வளரவில்லை என்பதே உண்மை.

அலோபதி வைத்தியம் கையாளும் சில அணுகுமுறைகள் மனித உடலுக்கோ, இனத்துக்கோ அல்லது உணவு, கலாச்சாரத்துக்கோ வேறுபட்டு இருக்கின்ற காரணத்தால் அங்கு ஒவ்வாமைத்தன்மையும் ஏற்படுகிறது.

ஒவ்வாமை என்பது மனிதன், ஓர் தனிரகமான உடலமைப்பும் குணமும் முடையவன். ஒரு மனிதனை மற்ற மனிதனோடு ஒப்பிட முடியாது என்றுதான் சித்த ஆயுள்வேத வைத்தியம் சொல்லுகின்றது. ஏனென்றால் எல்லாருமே தனிரகமானவர்கள். ஆகவே எல்லாருக்கும் ஒரே வகையான மருந்தை கொடுத்தால் அது சாத்தியமாக வருமா என்றால் இல்லை.

சில வைத்தியத்தில் ஒரேமருந்து

ஒரேஅணுகுமுறை என்று எல்லார்க்கும் பரவலாக கொடுப்பார்கள் ஆனால் சித்த ஆயுள்வேத வைத்தியத்தில் அப்படி அணுகுவது குறைவு. ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு வித்தியாசமான நாடி பிரக்ருதி முறையில் அணுகி அவனுக்கு என்று ஒரு மருந்து காணணும் அதுதான் சித்த மருத்துவம் அத்துடன் மருத்துவர்க்கும் இது மகத்துவம். இன்றும் மகத்துவமானதாக சித்த ஆயுள்வேத வைத்தியத்தில் இக்கலை இருக்கின்றது.

மனித இனத்தின் பண்டைய வைத்திய முறைகளான சித்த, ஆயுர்வேத, ஹோமியோபதி, யுனானி, அக்குபங்சர் வைத்தியம் போன்ற பல வகை வைத்தியங்களில் உள்ள பல்வேறு நல்ல கூறுகளை உள் வாங்கி அலோபதி வைத்தியம் வளர்ந்த அளவுக்கு மற்ற வைத்திய முறைகளை வளர்ப்பது அல்லது அவை குறித்த மேலதிக ஆராய்ச்சிகளுக்கு எவ்வளவு தூரம் அந்தந்த நாட்டு அரசுகள் முக்கியத்துவம் அளித்தன என்பது கேள்விக்குறியே. இதுவும் சித்த வைத்தியம் குறித்த மக்களின் ஆர்வத்தை, அல்லது அவர்களுக்கிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் ஒரு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. சித்த வைத்தியத்தை முறைப்படி பயிலாமல் பல போலி 'சித்தஅலோபதி' வைத்தியர்கள் உருவாகியமையும் இறைவன் சேவையாக இருந்த மருத்துவம் இன்று உலகளாவில் பெரும் வருமானத்தை கொடுக்கின்ற வியாபாரமாகவும், மனிதனை இயந்திரமயமாக்கி இயற்கைக்கு மாறாகவும் மாற்றி அமைத்துவிட்ட தொழிலாக மாறிவிட்டதாலும் பணம் சம்பாதிக்கும் நோக்கத்தில் வைத்தியத்தினை பலர் ஒரு தொழிலாக மேற்கொள்ள முனைந்தமையும் இத் துறைக்கு ஒரு அவப் பெயரை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது என்பதையும் நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

முடிவாக சித்த மருத்துவ முறைகளில் பக்கவிளைவுகள் கிடையாது. நாடி சாத்திர பிரக்ருதி முறையில் அணுகி ஒருவருடைய நோயின் தனித்தன்மையைப் பார்த்து மருந்துகள் கொடுக்கப்படுவதால் நோய் எதிர்ப்பு சக்தி கூடுகிறது. மீண்டும் அந்த நாட்பட்ட நோய்கள்'Chronic Diseases' வருவதில்லை. ஒப்பீட்டு நோக்கில் அலோபதிமருத்துவத்தைவிட எளிமையானது. நீண்டகால செலவில்லாதது.

அதற்காக அலோபதி மருத்துவ முறையே வேண்டாம் என்று சொல்லவில்லை. இரத்த பரிசோதனை, கதிரியக்க ஆராய்ச்சி, அறுவை சிகிச்சை, விபத்தில் உயிர்காப்பு, உறுப்பு மாற்றும் அறுவை சிகிச்சை போன்ற துறைகளில் ஆங்கில மருத்துவத்தின் பணி அளப்பரியது. ஒருங்கிணைந்த மருத்துவ முறையே இப்போதைய தேவை என கூறலாம்.




**ஸ்ரீ நவரட்ணராஜா செகராஜா**
சித்த, ஆயுர்வேத வைத்திய நிபுணர்



# இலங்கையின் கல்விச் சாதனைகள் ஏன் கைகொடுக்கவில்லை?

நாடொன்றின் உயர் பொருளாதார வளர்ச்சிக்கு தரமான மனிதவளம் பிரதானமானது. மனித வளத்தினை உருவாக்குவதில் பிரதான பங்கு வகிப்பது அந்த நாட்டின் கல்வி முறையே. பொதுவாக நோக்குகின்றபோது, இலங்கை தெற்காசியாவிலேயே மிக உயர்ந்த மனிதஅபிவிருத்திச் சுட்டெண்களைக் கொண்ட நாடாக விளங்குகின்றது. இலங்கையின் எழுத்தறிவு வீதமான 92 சதவீதம் என்பது குறிப்பிடத்தக்க சாதனையாகும். இலங்கை மத்திய வங்கியின் 2020ம் ஆண்டு அறிக் கையின்படி நாட்டில் 6. 5 சதுரகிலோ மீற்றருக்கு ஒரு பாடசாலை காணப்படுகிறது. ஆசிரியர் ஒருவர் 16 மாணவர்களுக்கு மாத்திரம் சராசரியாக பொறுப்பாக இருக்கிறார். க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுபவர்களில் 62 சதவீதமானோர் பல்கலைக்கழக நுழைவுக்குத் தகுதிபெற, இவர்களில் 22 சதவீத மானோர் பல்கலைக்கழக அனுமதி பெற்றனர். மேலே குறிப்பிட்ட மனிதவளபெறுபேறுகளின் அடிப்படையில் இலங்கை மிகச் சிறப்பான மனித வளத்தினைப் பெற்றுள்ளதாகவே கொள்ள வேண்டும்.


ஆனால், நடைமுறையில் இந்த உயர்ந்த மனிதவளம் தொடர்ச்சியான உயர்ந்த பொருளாதார வளர்ச்சியை ஏன் நாட்டுக்குப் பெற்றுத் தரவில்லை? ஏனைய பலநாடுகளைப்போல ஏன் இலங்கையால் மிக விரைவாக கோவிட்கால பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீள முடியவில்லை? இந்த வினாக்களுக்கான விடைகளைத் தேடுதல் காலத்தின் கட்டாயமாகும்.



கோவிட் தொற்றுக்காலப் பகுதியில் இலங்கையின் பொருளாதாரக் கட்டமைப்பிலும் கல்வி முறைமை யிலும் இருந்த பலவீனங்கள் மிகத் தெளிவாகப் புலப்பட்டன. கோவிட்கால பொருளாதார நலிவுகளில் சிக்கியுள்ள நாடுகளில் இலங்கை குறிப்பிடத்தக்கதாகும். வெளிநாடுகளில் இருந்து பெற்ற கடன்களை மீளச் செலுத்துவதற்கும் மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களின் இறக்கு மதிக்கும் தேவையான அந்நியச் செலாவணியைப் பெறுவதற்கு நாடு பகீரதப் பிரயத்தனங்களைச் செய்ய வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டது.

சுதந்திரத்துக்குப் பின்னரான 73 ஆண்டுகளில் இலங்கையை சர்வதேச சந்தையில் எதிர்ப்படும் போட்டிகளைச் சமாளிக்கும் வல்லமை பெற்ற மனித வளங்களைக் கொண்ட

நாடாக உருவாக்குவதில் நாட்டின் கல்விமுறை கடும் சவால்களை எதிர் கொண்டது. இலங்கையின் பிரதான ஏற்றுமதிப் பண்டங்கள் யாவும் இன்னொருநாட்டிடமிருந்தும் எளிதாகப் பெறக் கூடிய வகையைச் சார்ந்தவையே.




உதாரணமாக – சுற்றுலாத்துறை இது ஓர் அத்தியாவசிய பண்டமல்ல. ஒரு பொழுதுபோக்கு மட்டுமே. ஒரு வெளி நாட்டுச் சுற்றுலாப் பயணி இலங்கைக் குப் பதிலாக பல நாடுகளைத் தேர்வு செய்ய முடியும். அடுத்தது தைத்த – ஆடைகள் பங்களாதேஷ், வியட்நாம் என பல நாடுகள் குறைந்த விலையில் ஆடைகளை உற்பத்தி செய்து இலங் கையுடன் போட்டியிடுகின்றன. ஐரோப் பிய ஒன்றியத்தின் கோட்டா ஒதுக்கீடுச் சலுகை இல்லாவிடின் இலங்கையின் ஆடைத்தொழிற்துறை மிக மோசமான பாதிப்புக்களைச் சந்திக்க நேரும். அடுத்தது, மத்திய கிழக்கு நாடுகளிலி ருந்து இலங்கையர் அனுப்பும் பணம் இந்தத்துறை தொடர் ந்து இலங்கைக்கு கை கொடுத்தாலும், இலங்கையில் இருந்து செல்கின்ற தொழில் வல்லுநர்க ளையும் பணிப் பெண்களையும் மற் றொருநாட்டிலிருந்து பெற்றுக்கொள்வது பெரிய கடினமான பணியல்ல. கோவிட் காலத்தில் மேற்சொன்ன ஏற்றுமதி களிலிருந்தான அந்நியச் செலாவணி வருமானம் வரண்டுபோக பொருளா தாரச் சிக்கல்கள் கடுமையாகின.

இலங்கையின் பொருளாதாரத்திற்கு வலுச் சேர்த்து நாட்டின் போட்டித் திறனை சர்வதேச சந்தையில் அதிகரிப் பதற்கு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆற்றல் கொண்ட திறமையான மனித வளமே அவசியமானது. தற்போது இலங்கையில் வலுவான தொழில் துறைக் கட்டுமாணம் காணப்பட வில்லை. உலகத்தரம் வாய்ந்த தொழில் நுட்ப அறிவு மிக வரையறைக்குட் பட்டதாகவே உள்ளது. நாட்டின் கல்விமுறை அறிவுசார் நிபுணர்களை யும் விஞ்ஞானிகளையும் பொறியி யலாளர்களையும் போதுமானவளவு உருவாக்கவில்லை. கல்வித்துறையி னால் உருவாக்கப்படும் வல்லுநர்களி லும் பலர் தொடர்ச்சியாக வெளி நாடு களுக்குப் புலம்பெயரும்நிலை போர் முடிந்த பின்னரும் தொடர்கிறது. தொழில்நுட்பமும் ஆற்றல் மிக்க மனித வளமுமே பொருளாதார வளர்ச்சியின் ஆதாரங்கள். இலங்கை தொழில்நுட்ப முதலீட்டிலும் பயன்பாட்டிலும் பின்தங்கி இருப்பது கண்கூடு.

இலங்கையின் கல்விமுறையிலுள்ள மிகப் பிரதானமான குறைபாடு பொரு ளாதாரத்தின் தேவைகளுக்கேற் பவும் தொழில் வழங்குநர்களது எதிர்பார்ப் புகளை பூர்த்தி செய்யும் திறன்களுடன் போதியளவு ஆட்கள் உருவாக்கப்படு வதில்லை என்பதே. அதிகரித்த வளர்ச்சி வீதத்தைத் தொடர்ச்சியாகச் சாதித்து பொருளாதாரத்தினை ஓர் உயர் வரு மான நிலைக்குக் கொண்டு செல்வ தற்கான திறன்கள் வரையறைக்கு உட்பட்டவையாகக் காணப்படுவதுடன், கிடைக்கின்ற திறன்களுக்கும் எதிர்பார்க் கப்படும் திறன்களுக்குமிடையிலான இடைவெளி அதிகமாகிக் கொண்டே செல்வது வளர்ச்சியின் வீதத்தைப் பெரிதும் பாதிப்பதாக அமைகின்றது.

உதாரணமாக 2019ம் ஆண்டில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வில், தகவல் தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறையில் நாட்டுக்கு 21,216 பட்டதாரிகள் தேவைப் படுகின்ற போது வெறும் 9,076 பேரே உரிய தகைமைகளுடன் காணப்பட்ட தாகத் தெரிய வந்தது. இந்தத் திறன் இடைவெளி தகவல் தொழில்நுட்பத் துறையில் தொடர்ந்து அதிகரித்துச் செல்லும் போக்கும் அவதானிக்கப் பட்டுள்ளது. இந்த விடயத்தில் தனியே எண்ணிக்கை இடைவெளிமட்டுமன்றி, கிடைக்கின்ற பட்டதாரிகளது தரகுறை பாடும் ஒரு பிரச்சினையாகக் காணப் பட்டது.

மறுபுறத்தில் இலங்கையில் தொடர்ச்சி யாக பதவிக்குவந்த அரசாங்கங்கள் வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வழங்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆட்படுகின்ற அவல நிலை 1990களில் இருந்து தொடர்கின்றது.

வேலையற்ற பட்டதாரி ஒருவர் அர சாங்கத்துறையில் வேலை வாய்ப்பி னைப் பெறுவது ஒரு சிறந்த விடயமாக அவரது வருமானம், அவரது குடும்ப பொருளாதாரம், நாட்டின் பொருளாதாரம் என பலநிலைகளில் மேலோட்டமான பார்வைக்குத் தோன்றினாலும், தொடரும் வேலையில்லாப் பட்டதாரிகள் என்ற பிரச்சினை இலங்கையின்

உயர்கல்வி முறையிலுள்ள பாரிய திட்டமிடல் குறைபாட்டின் வெளிப்பாடு என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. பாலர் வகுப்பு முதல் பல்கலைக் கழகம்வரை இலவசமாகக் கற்கும் ஒருவர் பட்டதாரியான பின்னர், பல ஆண்டுகளுக்குதொழில்வாய்ப்பினைப் பெற இயலாதிருப்பதற்கு இருகாரணங்களே அடிப்படையில் இருக்க முடியும்.

ஒன்று இப்பட்டதாரிகளிடம் தனியார் துறையில் காணப்பட்ட வெற்றிடங்களைப் பூர்த்தி செய்யும் திறன்கள் இல்லாமல் இருக்க வேண்டும். அல்லது தேவைக்கு அதிகமாக குறிப்பிட்ட துறைகளில் பட்டதாரிகள் உருவாக்கப் பட்டிருத்தல் வேண்டும். இந்த இரு காரணங்களும் நாட்டின் உயர்கல்வி முறையின் குறைபாடுகளின் விளைவுகளே. ஒருபுறம் தேவைப்படுகின்ற, அவசியமான துறைகளில் தகுதியானவர்கள் கிடைக்காதிருக்க மறுபுறம் மற்றும் சில துறைகளில் தேவைக்கு அதிகமாக பட்டதாரிகள் வெறும் பெயருக்கு உருவாக்கப்படுகின்றனர். இந்த விடயத்தில் இன்னொரு பரிமாணமும் உள்ளது. வேலையற்ற பட்டதாரிகளுக்கான இந்த தொழில் நியமனங்கள் அடிப்படையில் சமூக மற்றும் அரசியல் காரணங்களைக் கருத்திற் கொண்டே வழங்கப்படுகின்றன.

தனியார்துறை நிறுவனமொன்றில் நடப்பதனைப் போன்று தொழிலுக்கான தேவையறிந்து, முறையாகத் திட்டமிடப்பட்டு பட்டதாரிகளது திறன்களை நுணுக்கமாக ஆராய்ந்து இந்த நியமனங்கள் மேற்கொள்ளப்படுவதில்லை. ஓய்வூதியம் பெறும் தகைமையுடன் வழங்கப்படும் இந்த நியமனங்கள் இலங்கைப் பொருளாதாரத்திற்கு ஒரு சுமையாகவே பல சந்தர்ப்பங்களில் அமைந்தன.

இலங்கையின் கல்விமுறை அளவுக்கு அதிகமான கலைத்துறைப் பட்டதாரிகளை உருவாக்குகிறது. அதேவேளை, பொருளாதார வளர்ச்சிக்கும் விஞ்ஞான தொழில்நுட்ப மேம்பாட்டுக்கும் அதிகளவில் வேண்டப்படும் விஞ்ஞானம், பொறியியல், தொழில்நுட்பம் மற்றும் கணனித் துறைகளில் போதியளவான பட்டதாரிகள் உருவாக்கப்படாத சமச்சீரின்மை காணப் படுகிறது.

உலக அறிவுசார் படைப்புகள் நிறுவனம் (World Intellectual Property Organization) வருடாந்தம் ஒரு மிக முக்கியமான தரவரிசைப் பட்டியலை வெளியி டுகின்றது Global Innovation Index (GII) என்ற இச்சுட்டெண் எண்பத்தொரு குறிகாட்டிகளை 132 நாடுகளில் ஆய்வுக்குட்படுத்தி வெளியிடப்படுகிறது. 2021ம் ஆண்டுக்கான தரவரிசையில் இலங்கை நூற்றுக்கு 25.1மதிப்பெண்களைப் பெற்று 95ஆவது இடத்தில் காணப்படுகிறது. தொழில் நுட்ப பயன்பாடு, ஆராய்ச்சி துறைகளிலும் கண்டுபிடிப்புகளிலும் இலங்கை ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் பின்தங்கி இருப்பதனையே இச்சுட்டெண் காட்டி நிற்கிறது. வளர்ந்து வரும் பொருளாதாரத்தின் முக்கிய இயக்கிகளில் ஒன்றாக புத்தாக்கம் (Innovation) காணப்படுகின்றது. நாட்டின் கல்வி முறை பள்ளிக்கூடங்கள், பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் பொருளாதாரத்தில் புதியவற்றை ஆக்குவதில் பிரதான பங்கை வகித்தல் வேண்டும். இலங்கையர்களது படைப்பாற்றல் ஏனைய நாடுகளுக்கு குறைந்ததல்ல என்ற போதிலும், ஒரு சமூகமாக நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்காக இப்படைப்புத் திறன்கள் சரிவரப் பயன்படுத்தப்படவில்லை என்பதையே GII தரவரிசை தெரியப்படுத்துகின்றது. உதாரணமாக இலங்கை தேசிய அறிவுசார் சொத்துரிமை அலுவலக இணையத்தளத்தின் பிரகாரம் 2020ம் ஆண்டில் இலங்கையில் சுமார் 300 உள்ளூர் காப்புரிமை விண்ணப்பங்கள் மட்டுமே பெறப்பட்டிருந்தன. நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக மிகச்சிறிய சதவீத முதலீடே ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பணிகளில் செலவிடப்படுகிறது.

இலங்கைப் பல்கலைக்கழகங்கள் வருடாந்தம் சில நூறு மாணவர்களை மாத்திரம் பிறநாடுகளிலிருந்து ஈர்க்க, பல்லாயிரம் இலங்கை மாணவர்கள் வருடாந்தம் உயர்கல்விக்காக வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்குச் செல்கின்றனர். தகுதி வாய்ந்த பல்லாயிரம் இலங்கை மாணவர்கள் இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு இடப்பற்றாக்குறை காரணமாக அனுமதிக்கப்படாத காரணத்தால், அவர்களில் வசதி படைத்தோர் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களை நாடுகின்றனர். இந்த அதீத வெளிப்புற இயக்கம்



**சிவநேசன் வைத்தியநாதர்**
**(நிதியியல் நிபுணர்)**

### உலக புத்தாக்க சுட்டெண் 2021
### (Global innovation index 2021)

**இலங்கையை உள்ளடக்கிய குறைந்த நடுத்தர வருமான நாடுகளது பிரிவில், முதல் பத்து இடங்களைப் பிடித்த நாடுகளும் அவற்றின் சுட்டெண்களும்.**

1. வியட்நாம் (44)
2. இந்தியா (46)
3. உக்கிரைன் (49)
4. பிலிப்பைன்ஸ் (51)
5. மொங்கோலியா (58)
6. மோல்டோவா (64
7. ரியூனிஷியா (71)
8. மொரோக்கோ (77)
9. கென்யா (85)
10. உஸ்பெகிஸ்தான்(86)

(Outward mobility) இலங்கைக்குப் பாதகமானதே.

இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு அதிக அளவில் வெளிநாட்டு மாணவர்கள் வராதிருப்பதற்கு உலக பல்கலைக்கழக தர வரிசைகளில் இலங்கைப் பல்கலைக்கழகங்கள் இடம்பெறாதிருப் பது பிரதான காரணமாகும்.

உதாரணமாக 2022ம் ஆண்டின் The Times Higer Education World University Rankingsஐ பொறுத்தவரை இரண்டு இலங்கைப் பல்கலைக்கழகங்கள் மாத்திரமே தரப்படுத்தப் பட்டுள்ளன பேராதனைப் பல்கலைக் கழகம் (401 - 500) மற்றும் கொழும்பு பல்கலைக்கழகம் ( 801 - 1000). கொழும்பு பல்கலைக் கழகத்தின் தர வரிசை 2021ஐ காட்டிலும் 2022ல் மேம்பட்டிருப்பதனையும் காண முடிகிறது.

மேம்பட்ட தொழில்நுட்ப வளர்ச்சி, அதிகரித்த தொழில்துறை முதலீடுகள், தொடர்ச்சியான விஞ்ஞான ஆராய்ச்சிகளை மேற்கொள்ள பணம் தேவைப் படுகிறது. அரசாங்கம் இத்தகைய பாரிய முதலீடுகளைச் செய்வது சாத்தியமான தல்ல. அரசாங்கம் முதலீட்டுக்கான ஏது நிலைகளை உருவாக்கவும் புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவுத் திறனை ஊக்கப்படுத்தவுமான முயற்சிகளை துரிதகதியில் மேற்கொள்ள வேண்டும். கல்விப்பாடத் திட்டங்கள் பொருளாதாரத்தின் எதிர்காலத் தேவைகளைக் கருத்தில் கொண்டு, தொடர்ச்சியாக பாடசாலை மட்டத்திலும் பல்கலைக்கழகங்களிலும் மாற்றியமைக்கப்படல் வேண்டும்.

முதலீடுகள் பிரதானமாக தனியார்துறை மற்றும் வெளிநாட்டு மூலங்களிலிருந்து பெறப்பட்டால் மாத்திரமே இது சாத்திய மாகும். பொதுத் துறை தனியார்துறை கூட்டுறவின் ஊடாக (Public Private Partnership) வளங்களும் நிபுணத்து வமும் திரட்டப்படலாம் சிங்கப்பூர் மற்றும் தென்கொரியாவின் அனுபவங்கள் இலங்கைக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். உதாரணமாக சிங்கப்பூரில் 2020ம் ஆண்டில் ஆகக் கூடிய பட்டதாரிகள் பொறியியல் மற்றும் விஞ்ஞான துறைகளிலேயே உருவாக்கப்பட்டனர்.

தெற்காசிய பிராந்தியத்திலேயே சிறப்பாக இயங்கும் தனியார்துறை கம்பனிகள் சில இலங்கையிலுள்ளன. உலகின் மிகச்சிறந்த பல்கலைக்கழகங்கள் பலவும் தனியாரால் நடத்தப்படுபவை. எனவே, உயர்கல்வியில் தனியார் துறையின் ஈடுபாடு இலவசக்கல்விக்கு குந்தகமாக அமையும் என்ற வாதம் ஆதாரமற்றதாகும். தராதரத்தை உத்தரவாதப்படுத்தும் பொறிமுறைகளை அரசாங்கம் உருவாக்கிய பின்னர், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு தனியார்துறை முதலீடுகளை இலங்கையின் உயர் கல்வித்துறையில் அனுமதிப்பது மாத்திரமே பெரிதும் தேவைப்படும். வளங்களையும் நிபுணத்துவத்தையும் பெற்றுத் தரும். புதிய விஞ்ஞான, தொழில்நுட்ப, கணனிசார் பொருளாதாரக் கட்டமைப்பு ஒன்றை இலங்கையில் உருவாக்க, கல்விமுறை மீள் உருவாக்கம் செய்யப்பட வேண்டும் என்பதே இக் கோவிட் பொருளாதார இடர் இலங்கைக்குச் சொல்லித்தரும் பாடமாகும். ■

## கவிதைப் போட்டி



இப்புகைப்படத்துக்குப் பொருத்தமான கவிதை ஒன்றினை எழுதியனுப்புங்கள்.
ஒவ்வொரு உள்ளம் இதழிலும் கவிதைப்போட்டி ஒன்றினை நடாத்த உள்ளோம். எங்களால் தரப்படும் ஒரு புகைப்படம் அல்லது ஓவியத்துக்குப் பொருத்தமான கவிதை ஒன்றினை எழுதுங்கள். சிறந்த கவிதைக்கான பரிசாக ரூபா 5000 வழங்கப்படும். முதல் ஐந்து வெற்றியாளர்களின் புகைப் படங்களும், பெயர் விபரங்களும் இங்கே பிரசுரிக்கப்படும். அத்துடன் தரமான கவிதைகள் உள்ளம் இதழ்களில் அவ்வப்போது பிரசுரமாகும். உங்கள் கவிதைகளை kavithaigal@ullamm.com என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். கவிதைப் போட்டிக்கான கவிதை என்பதை மறக்காமல் குறிப்பிடுங்கள். நன்றி!





# படித்ததில் பிடித்தது

ஒரு பேராசிரியர் தனது வகுப்பிலிருந்த நூற்றுக்கணக்கான மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு பலூன் வழங்கினார். மாணவர்கள் அவற்றை ஊதிப் பெரிதாக்கி தமது பெரை அதில் எழுதி மண்டபத்தில் பறக்கவிட்டனர். பேராசிரியர் பின்னர் எல்லா பலூன்களையும் கலந்து குழப்பிய பின்னர் மாணவர்களை 5 நிமிடங்களுக்குள் தத்தமது பலூன்களைக்கண்டெடுக்குமாறு கூறினார்.

எவ்வளவோ பிரயத்தனப்பட்டும் எவராலும் தமது பலூனைக் கண்டு பிடிக்க இயலவில்லை.

இதனையடுத்து ஒவ்வொருவரும் தாம் எடுக்கின்ற முதலாவது



பலூனை அதிலுள்ள பெயருக்குரியவரிடம் வழங்குமாறு பேராசிரியர் கூறினார். ஐந்து நிமிடங்களுக்குள்ளாகவே எல்லா மாணவர்களுக்கும் அவரவரது பலூன் கிடைத்தது.

பேராசிரியர் கூறினார். “ இந்த பலூன்கள் போன்றதே மகிழ்ச்சியும். ஒவ்வொருவரும் தனித்தனியாக மகிழ்ச்சியைத் தேடினால் அது எவருக்கும் கிடைக்காது. மாறாக நாம் ஒவ்வொருவரும் அடுத்தவரது மகிழ்ச்சியில் அக்கறை கொண்டால் எமது மகிழ்ச்சியையும் அடைந்து விடுவோம்”.

துயர் நிறைந்த வேளைகளில்
உங்கள் சுமை நிறைந்த
தேவைகளை சுலபமாக்கி கனிவான
சேவை வழங்குபவர்





Chapel Ridge
Funeral Home & Cremation Centre

Vilosan Sivatharman, B.Eng
Funeral Director

8911 Woodbine Avenue
Markham, Ontario L3R 5G1

Telephone : (416) 993-0826
Fax : (905) 305-8128
E-mail: vilosan9@hotmail.com

"BEYOND EXPECTATIONS"

MATT MATHISAYAN
REAL ESTATE AGENT



647 613 9219

RESIDENTIAL & COMMERCIAL INVESTMENT

HOMELIFE/FUTURE REALTY INC. Brokerage
7 Eastvale Drive, Unit 205
Markham, ON L3S4N5
905-201-9977
905-201-9229

MATTMATHISAYAN@GMAIL.COM
WWW.MATTHOME.CA



# வேட்டைக்காரன்

சில் என்று மேனி தடவிச் சென்றது குளிர் காற்று. திடுக்கிட்டு எழுந்தான் வேலு. தலைமாட்டில் கிடந்த தீப்பெட்டிகளில்நான்கைஎடுத்தான். மெய்கண்டான் கலண்டர் மட்டையில் குச்சிகளைக் கொட்டி ஒவ்வொன்றாக அதன் மருந்துகளை பொறுமையாக உதிர்த்தத் தொடங்கினான். பின்னர் சுத்தியலின் துணை கொண்டு அவற்றை மெல்லத் தட்டிப் பொடியாக்கினான். மூலையில் சாத்தி வைத்திருந்த இடியன் நாட்டுத் துப்பாக்கியை எடுத்து, அதன் குழாயினுள் தீக்குச்சியின் கந்தக மருந்துகளைப் போட்டு இடி தடியை குழாயினுள் செலுத்தி பல தடவை இடித்தான். ஏற்கனவே தயாரித்து வைத்திருந்த ஈயக் குண்டுகள் இரண்டினை குழாயினுள் போட்டு அவை கீழே விழுந்து விடாதவாறு காகிதத்தாலான சக்கையை உள்ளே தள்ளி, வெளியே எட்டிப் பார்த்தான்.

தூரத்தே சற்றுத் தள்ளி இருந்த பாலை மரத்துக்கு மேல் இரண்டடி உயரத்தில் தெரிந்தது விடிவெள்ளி. நேரம் ஐந்து மணி இருக்கும் என தனக்குள் முணுமுணுத்துக் கொண்டான். மாசி மாதம் ஆகையால் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை பனி, புகைமூட்ட மாகக் காட்சியளித்தது. குளிர் இன்னும் இறங்கவில்லை. தொடுவானம் முழுவதும் பனியில் உறைந்து போய் கிடப்பது தெரிந்தது. எங்கேயோ தொலை தூரக் காடுகளில் மயில் அகவுகின்ற சத்தங்கள் இன்னும் காதுகளில் கேட்டுக் கொண்டு தான் இருந்தன.

அடிவானத்தில் முகில்கள் சந்திரனைக் கைப்பற்றுவதும் பின்னர் கைவிடுவதுமாய் விளையாடித் திரிந்தன. வானமகள் மெதுவாக தன் இருளாடையை களைந்து கொள்வதில் மும்முரமாக இருந்தாள்.

செத்தையில் செருகி இருந்த சுண்ணாம்புப் பையினுள் கையைவிட்டான் வேலு. அதில் இருந்து சிறிதளவை எடுத்து துப்பாக்கியின் குழாயின் முனையின் மேற்பகுதியில் இலேசாக தடவினான். இருட்டாக இருப்பதனால் குறி பார்க்க இலகுவாக இருக்கும். இறப்பில் மாட்டியிருந்த சில நாட்கள் துவைக்கப்படாத காவி நிற சட்டையையும் தொப்பியையும் அணிந்து கொண்டான். எல்லாவாற்றுக்கும் மேலாக வீராதான் முன்னங்கால்களைத் தூக்கி அவன் மீது பாய்ந்து, வேட்டைக்குக் கிளம்புமாறு நச்சரித்துக் கொண்டு கிடந்தது.

வீரா ஐந்து வருடங்களாக வாழ்விலும் தாழ்விலும் வேலுவுடன் இரண்டறக் கலந்து விட்ட ஜீவன். மனைவியின் மரணத்துக்குப் பின்னர் அதுதான் அவனுக்குஎல்லாமே. மனைவியை போரில் இழந்த பின் இரண்டு புதல்வர்களைக் காணாமால் போனவர்களின் பட்டியலில் சேர்த்து விட்டு, தனிமையில் வீடு திரும்பி அநாதையாய்க் கிடந்த வேலுவுக்கு ஆறுதலாய் வந்து கிடந்தது என்னவோ இந்த வீரா மட்டும் தான். இன்று வரையும் வீரா வேட்டையில் விண்ணன் மட்டுமல்ல வேலுவுக்கு நல்ல



**என்.எம்.சஜாத்**
பட்டானிச்சூர்,வவுனியா



நண்பனும் கூட.

சந்தினில் கிடந்த ஆர்பிஜி பீடிக்கட்டை எடுத்தான் வேலு. பின் அதனை இரண்டு உள்ளம் கைகளுக்கும் இடையில் வைத்து மூன்று நான்கு தடவை நன்றாக உருட்டினான். அதில் ஒன்றை உருவி வாயில் வைத்து தீக்குச் சியை உரசி அதில் பற்ற வைத்துக் கொண்டான். மீதியை இடுப்புச் சாரத்தினுள் செருகி விட்டு, துப்பாக்கியைத் தூக்கி தோளில் வைத்தவாறு வெளியே இறங்கி நடக்கத் தொடங்கினான்.

முத்து ஐயன் குளத்தின் அலை கரைதான் அவன் உள்ளத்தில் விரிந்து பரந்து கிடந்தது. நேற்று வேட்டைக்கு சென்ற போது ஒரு பன்றிக்குக் குறி வைத்திருந்தான். ஆனாலும் வெடியை வாங்கிக் கொண்டு அது வேகமாக பெருங்காட்டினுள் ஓடி மறைந்து விட்டது. வேலுவைப் பொறுத்தவரையில் அவன் வெடிகார வேலு எனப் பெயர் எடுத்தவன். அந்த அளவிற்கு அவனது குறி எப்போதும் தப்பியது இல்லை. இது தான் முதல் முறை. நேற்று, இரவு நேரமாக இருந்ததாலும், பனிமூட்டம் அதிகமாக இருந்ததாலும் பன்றி அவனது கண்களுக்குத் தெளிவாகத் தெரியவில்லை, ஒரு குத்து மதிப்பாக வைத்த குறிதான், ஆனாலும் தப்பி இருக்க வாய்ப்பில்லை. வெடி வாங்கியதும் அது கீழே விழுந்து கடுமையாக அலறியது. பின்னர் எழுந்து வேகமாக ஓடி இருட்டில் எங்கேயோ மறைந்து விட்டது. அநேகமாக பெருவயிற்றுவெடியாகத்தான் இருக்கவேணும். அப்படியென்றால்தான் மிருகங்கள் விழுந்து அலறிப்போட்டு எழும்பி ஓடி விடும். அது நெய்ப் பன்றியாகத்தான் இருக்கும். துவாலையைக் காணவில்லை. குண்டு உடம்பை துளைத்தவுடன் உடம்பின் உட்பகுதியில்

உள்ள நெய் துவாரத்தை அடைத்து விடும். பிறகு பன்றியின் உடம்பில் இருந்து இரத்தம் வெளிவர வாய்ப்பு இருக்காது. இல்லாவிட்டால் அது சென்ற இடமெல்லாம் இரத்தத் துளிகள் விழுந் திருக்கும். வீராவுக்கும் அதன்வழி சுவடு எடுத்துச் சென்று பன்றியை கண்டு பிடிக்க, இலகுவாக இருந்திருக்கும். இரவு தப்பிய பன்றியை தேடுவதும், சமயத்தில் மான் சந்தித்தால் வேட்டையா டவும்தான் வேலு தன் நாயுடன், துப்பாக் கியும் கையுமாகச் சென்று கொண்டிருக் கிறான்.

வானம் ஓரளவுக்கு வெளித்திருந்தது பனியும் சிலு நீராய் காடுகளில் நிறைந் திருக்கும். இதற்கு அஞ்சி இப்போதைக்கு மான்கள் காட்டினுள் நுழைய விரும் பாது. எப்படியும் ஏழு எட்டு மணி ஆகும். அதுவரைக்கும் மான் வேட்டை பார்க்க லாம். பிறகு இரவு வெடி வாங்கிய பன் றியை, நாயைக் கொண்டு அடி பார்க் கலாம் என்று தனக்குள் நினைத்துக் கொண்டான் வேலு.

சுமார் நாற்பது நிமிட நடைப் பயனம். அவன் எதிர்பார்த்த படியே அலைகரை யில் மான் கூட்டம் ஒன்று நின்றது . கலைமான்களும் பெட்டைகளும் என சுமார் பத்து பன்னிரண்டு இருக்கும் .

**குறுங்காலத்திலே என்ன வளர்ச்சி.குறு குறுத்த பார்வையும்,தீவிர நன்றி விசுவாசமும் அதன் மேல் அதீத பாசம் ஏற்பட வழி வகுத்து விட்டிருந்தது. வீட்டுக் காவலிலும், வேட்டைத் தொழிலிலும் பிள்ளைகள் செய்யாத கடமைகளை எல்லாம் செய்து தொலைத்திருக்கிறது.முயல், உடும்பு, உக்கிளான் என மிருகங்களை வேட்டையாடி எஜமானிடம் கொண்டு வந்து கொடுக்கும் இராஜபக்தி அதற்கு.**

பச்சைக் கம்பளங்கள் விரித்துவிட்டதைப் போல பசும் புற்கள் பரந்து விரிந்து கிடந் தன. வைரங்களை பொடியாக்கி விசிறி விட்டதைப் போல புற்களின் நுனிகள் எங்கும் பனித்துளிகள் சிதறிக் கிடந்தன. அந்தத் துளிகளில் புதைத்து நனைத்துச் செல்லும் வேலுவின் கால்கள் படிப்படி யாக வேகம் எடுத்தன. வீராவும் வேட்டை ஆர்வத்துடன் அதற்கு ஈடு கொடுத்தாற் போல் நாக்கை தொங்கப் போட்டபடி நடந்து கொண்டு இருந்தது. காடுகளை விட்டு இரவில் வெட்டைக்கு மேய்ச்ச லுக்கு வந்த மான்கள் நிச்சயம் குளத்தின் அலைகரையில் நிற்கும் .இரவு பெய்த மழைத் தூறலும் விடியப்புறம் பெய்த குளத்தை விட்டுத் சற்றுத் தள்ளி காட்டுக் குச் சமீபமாக அவை தென்பட்டன. ஆனாலும் வெடிக்கு உரிய இலக்கில் இருந்து அவை மிகவும் தொலைவி லேயே தென்பட்டன. முன்னால் புதர்க ளும் , பற்றைகளும் கறையான் புற்றுக் களும் தேவைக்கும் அதிகமாகவே கிடந் தன. காற்றுவளமும் சாதகமாக இருக்க, பற்றைகளின் மறைவில் மெது வாகத் தவழ்ந்து தவழ்ந்து மானை நோக்கி முன்னேறிக் கொண்டு இருந்தான் வேலு. வீராவும் அரவம் இன்றி அவ னுக்குப் பின்னால் மெதுவாக நகர்ந்து கொண்டு இருந்தது. தனக்கு சமீபமாக கலைமான் ஒன்று மேய்தபடி நின்றது.

ஏறத்தாள எழுபதடி தொலைவு இருக்க லாம். இதற்கு மேலும் முன்னேறினால், சிலவேளை மான் கூட்டம் கரவு கண்டு ஓடிவிடக்கூடும். ஆளரவம் கேட்டது போல் கலைமான் திடீரென்று தலையை நிமிர்த்தி வேலு நின்ற திசையை உற்றுப் பார்த்தது. வேலு முன்னால் கிடந்த பற்றையினுள் தன்னை முழுமையாக மறைத்துக் கொண்டான். பின் மீண்டும் சுறு சுறுப்பாக மேயத் தொடங்கியது மான். இதுதான் தக்க தருணம் ஏனக் கருதிய வேலு, மிக நிதானமாகத்துப் பாக்கியை எடுத்து நிமிர்த்தினான். பின்னர் குந்தி இருந்தவாறே இடது முழங்கையை தனது முழங்காலில் ஊன்றி மானின் முன்னங் கால் சீப்பை நோக்கிக் குறி வைத்தான். டுமீல் என்று இடி முழக்கம் போன்ற சத்தத்துடன் புகை யைக்கக்கியது துப்பாக்கி. இதற்க்காகவே வேலுவின் பின்னால் நிலையெடுத்துக் காத்திருந்த வீரா, விர் என மானை நோக்கிப் பற்றைக்கு மேலால் பாய்ந்தது. வெடியை வாங்கிய மான் வெறி கொண்டு வீராவை நோக்கிப் பாய்ந்து வந்தது. நிலைமையின் விபரீதத்தை உணர்ந்து கொண்டான் வேலு. வீராவை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கு எத்தனித்தான். அதற்குள் பாய்ந்து வந்த மான், வீராவின் முன்னங் கால்களுக்கு இடையே கொம்பினால் குத்தி மூர்க்கத்தனமாக தூக்கி வீசியது. பின் கிட்டத்தட்ட அறுபதடி தூரம் வரை ஓடி முழங்காலைக் குத்தி கீழே சரிந்தது.

வேலு ஒருகணம் ஆடிப்போனான். பின்னர் சுதாரித்துக் கொண்டு, வீரா கிடந்த பக்கம் பாய்ந்தோடினான். அங்கே வீரா கிடந்த காட்சி இரத்தத்தை உறைய வைத்தது. நெஞ்சுப்பகுதியில் இரண்டு இஞ்சி ஆழத்தில் ஒரு அடி நீளத்தில் குத்திக் கிழிக்கப்பட்டு இரத்த வெள்ளத் தில் உயிருக்காய் போராடிக் கொண்டி ருந்தது வீரா. வேலுவை கண்டவுடன் மெதுவாக முனகியபடி வாலை மேலும் கீழும் இலேசாக அசைத்தது. என்ன செய்வது என்று தெரியாமல். இத்துப் போய் அதனருகில் அமர்ந்து கொண் டான் வேலு. காயத்தின் ஆழமும் உதிரப் போக்கின் வேகமும் அது பிழைப்பதற்கு வழி இல்லை என அவனது முப்பது வருட வேட்டை அனுபவம் கூறியது. மரணத்தின் கோரப் பிடியில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கும் அதனைக் காணச் சகிக்கவில்லை. கருணைக் கொலைதான் இதற்கு தீர்வு என நினைத் துக்கொண்டவன் மனதைக் கல்லாக்கிக் கொண்டு எழுந்தான். பின்னர் துப்பாக்கி யின் குழாயினைப் பிடித்தபடி கண் களை மூடிக் கொண்டு அதன் பிடியால் இரண்டு மூன்று தடவை அதன் தலை யில் ஓங்கி இடித்தான். அவரோகண ஸ்தாயியில் குரல் எழுப்பி மெதுவாக அடங்கிப் போனது வீரா. பின்னர் கண் களைத் திறந்து அதனைப் பார்க்க மனம் இன்றித், திரும்பி நடக்கத் தொடங்கி னான் வேலு. வழி யில் குப்புற விழுந்து கிடந்தது கலைமான். அதை எடுக்கும் மன நிலையில் இப்போது அவன் இல்லை. அதனைக் கடந்து நடக்கத் தொடங்கின அவனின் கால்கள்.

எரிமலை போல குமுறிக் கொண்டு கிடந்தது மனம். பல முறை முயன்றும் வீராவின் நினைவுகளில் இருந்து மனதைத் திருப்பிக் கொள்ள அவனால் இயலவில்லை. பிசாசுகளைப் போல வட்டமடித்து அவனை மீண்டும் மீண் டும் தொந்தரவு செய்து கொண்டு இருந் தன அதன் நினைவுகள். அவனை அறியாமலேயே கண்ணீர் ஆறாகப் பெருக் கெடுத்து ஓடிக்கொண்டு இருந் தது. மனைவியின் பிரிவிற்குப் பின்னர் அவன் அதிகமாக அழுது தீர்த்தது இதுவே முதன் முறை. இரண்டு புதல் வர்களை யுத்தத்தில் தொலைத்த போதும் அவன் இவ்வாறு புலம்பியது இல்லை. எங்கோ ஒரு மூலையில் அவர்கள் உயிரோடு இருப்பார்கள் என்ற நம்பிக்கை அவனுக்கு ஆனால் வீரா வின் நிலை அப்படியல்லவே. தன் கண் முன்னே ஒரு உயிர் துடிதுடித்து பறி போயிருக்கிறது. தானும் ஒரு வழியில் அதற் குக் காரணமாகி விட்டேன் என்ற கவலை அவனுக்கு. அவனைப் பொறு த்த வரை இது கருணைக் கொலை. ஆனாலும் மனம் என்னவோ சமாதா னப்படவில்லை.

நான்கு வருடத்திற்கு முன் மனைவியின் பிரிவால் துயரத்தில் கிடந்த வேலுவுக்கு ஆறுதலாய் இருந்தது இந்த நாய்தான். குட்டியாய் வீடு தேடி வந்தது. குறுங் காலத் திலே என்ன வளர்ச்சி. குறு குறுத்த பார்வை யும்,தீவிர நன்றி விசுவாசமும் அதன் மேல் அதீத பாசம் ஏற்பட வழி வகுத்து விட்டிருந்தது. வீட்டுக் காவலிலும், வேட்டைத் தொழிலிலும் பிள்ளைகள் செய்யாத கடமைகளை எல்லாம் செய்து தொலைத்திருக் கிறது. முயல், உடும்பு, உக்கிளான் என மிருகங்களை வேட்டையாடி எஜமானிடம் கொண்டு வந்து கொடுக்கும் இராஜ பக்தி அதற்கு. பல தடவை வீட்டுக்குள் நுழைந்த பாம்புகளைக் காட்டிக் கொடுத் திருக்கிறது. சில தடவை வேலுவின் உயி ரைக்கூட காப்பாற்றியும் இருக்கிறது. கோழிக ளையும் குஞ்சுகளையும் பாம்புகளிடம் இருந் தும் வல்லூறுகளிடம் இருந்தும் காப்பாற்று வது அதன் பொழுது போக்கு. அவன் வீட்டுக்கு வரும் போதெல்லாம் கால்களுக்குள் ஓடி வந்து, காதுகளை மடித்து, தலையை சரித்து அண்ணாந்து பார்க்கும். பல தடவை வேலு அவனை அறியாமலேயே அதனை அள்ளி அணைத்திருக்கிறான். இன்று இவை எல்லா வற்றையும் இழந்து விட்ட கையறு நிலை யில் நின்றான் வேலு.

மனம் இன்னும் அங்கலாய்த்துக் கொண்டு கிடந்து. நேராக மயில் வாகனத்தின் தவற ணைக்குச் சென்றான். கவலை மறக்க, வேண்டிய மட்டும் குடித்தான். பிளாவினுள் இருந்த கள்ளுக்குள் அவன் கண்ணீரும் விழுந்து வயிற்றுக்குள் சங்கமமாகின. சுமார் நான்கு ஐந்து போத்தல் வரை குடித்திருப் பான். எழுந்து வீடு செல்ல முயன்றவன் போதை தலைக்கேற சற்றே தடுமாறிக் கீழே விழுந்தான். போதையில் கிடந்தவனுக்கு நேரம் போனது தெரியவில்லை. அருட்டி விடவும் அருகில் எவரும் இருக்கவில்லை. பறவைகளின் கீச்சொலிகள்தான் ஓரள விற்கு மாலை நேரம் என்பதை உணர்த்தின. திடுக்கிட்டு எழுந்தவன், தான் எங்கே இருக்கி றேன் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள சற்றே தடுமாறினான். பின்னர் சுதாரித்துக் கொண்டு சுயநினைவுக்கு வந்தான். கள்ளுத் தவறணை ஆள் அரவம் இன்றிக் காலியாய்க் கிடந்தது. சூரியன் மேற்கில், தொலைவில் உள்ள பனைமரத்துக்கு கீழே தெரிந்தது. நேரம் ஐந்து மணி இருக்கும் என அனுமா னித்துக் கொண்டான். நாயின் பிரிவும் பசியின் துயரும் அவனை விடாமல் விரட்டிக் கொண்டு இருந்தன. வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கினான். சுமார் ஒரு மணித்தியால நடைப் பயணம். எதிரே படலை தெரிந்தது. அதனருகில் மங்லான வெளிச்சத்தில் யாரோ ஒரு வனின் வருகைக்காக காத்திருந்தது அந்த நாய். வேலு தன் கண்களை நம்ப வில்லை. அவற்றை நன்றாகக் கசக்கி விட்டு மீண்டும் உற்றுப் பார்த்தான். சந்தேகமில்லை அவன் ஊகித்தது சரிதான். நெஞ்சினில் குருதி வடிய , இரத்த நெடில் சற்றே வீச, ஓடி வந்து வேலுவின் தோள்களில் பாய்ந்து இராஜ பக்தியுடன் அவனைக் கட்டியணைத்துக் கொண்டது வீரா....!

■

*தற்காலத் தமிழ் இலக்கியம் பற்றிச் சிந்திக்கும்போது பாரதியையும் புதுமைப்பித்தனையும் அருகருகே வைத்துப் பார்க்காமல் இருக்க முடிவதில்லை. இருவருமே பெரும் சாதனையாளர்களாக அற்பாயுளில் மறைந்தது மட்டும் அதற்குக் காரணம் அல்ல. பாரதி கவிதையில் சாதித்ததைப் புதுமைப்பித்தன் சிறுகதையில் சாதித்தார். இருவருமே தற்காலத் தமிழ் இலக்கிய வரலாற்றில் புதுப்பாதை சமைத்தவர்கள்.*

**எம்.ஏ. நுஃமான்**
**(நன்றி : காலச்சுவடு)**

## Zurich மாநகரில்
## சுவையான இலங்கை இந்திய உணவகம்
## தரமான உணவு, நிறைவான சேவை





NEW AVATAAR®

NEW EXPERIENCE, NEW JOURNEY

RESTAURANT

Rütschistrasse 29,
8037 Zürich
switzerland

+41767992630




For your construction needs in Jaffna...

Contact Us:
Phone : 0094777959914

E-Mail : trshankar2004@gmail.com

GANGU CONSTRUCTIONS

QUALITY IS THE ONLY CONCERN


கரிகணன் அச்சகத்தினரால் அச்சிடப்பட்டது